ரிஜிஸ்டர் நெ. M. 2992. தனிப்பிரதி விலை ஒரு அணா.

# புரட்சி

ஞாயிறுதோறும் வெளிவரும்.

ஆசிரியர்:— ஈ. வெ. கிருஷ்ணசாமி.

மாலை 1. | ஈரோடு, ஸ்ரீமுக-ஹு மார்கழி-மீ 24-உ (7—1—1934) | மலர் 7.

காந்தியத்தை ஒழிப்பது வர்ணாச்சிரமத்தை ஒழிப்பதாகும்.

காந்தியார் பணக்காரத் தரகர்.

காந்தியார் பார்ப்பனரின் கையாள்.

## ஏன் சுயமரியாதை இயக்கத்தில் சேரவேண்டும்?

1. அது ஒன்றேதான் மக்கள் சமூகவாழ்வில் ஒருவருக்கொருவர் எவ்வித உயர்வு தாழ்வும் இருக்கக்கூடாது என்ற சமதர்மத்துக்கு போராடுகின்றது.

2. அது ஒன்றேதான் மனிதசமூகம் பொருளாதாரத்தன்மையில் ஒருவருக்கொருவர் பணக்காரன் ஏழை என்கின்ற வித்தியாசம் இல்லாமல் எல்லாப் பொருளும், பூமியும் எல்லோருக்கும் சரிசமமாய் இருக்கவேண்டும் என்ற சமதர்மத்துக்குப் போராடுகின்றது.

3. அது ஒன்றேதான் மனிதசமூகத்தில் ஆணுக்கும், பெண்ணுக்கும் எவ்வித வித்தியாசமும் இல்லாமல் சகல துறைகளிலும் சரிசமத்துவம் இருக்கவேண்டும் என்ற சமதர்மத்துக்குப் போராடுகின்றது.

4. அது ஒன்றேதான் மனிதசமூகத்தில் ஜாதி, மதம், வருணம், தேசம், கடவுள் ஆகிய அபிமானங்களை அறவே ஒழித்து உலக மனித சமூக தோழமை வேண்டும் என்ற சமதர்மத்திற்குப் போராடுகின்றது.

5. அது ஒன்றேதான் உலகில் உழைப்பாளி, முதலாளி என்பது போன்ற பிரிவினையே இல்லாமல் சகல தேவைகளுக்கும், சகல மனிதர்களும் சரிசமமாகப் பாடுபட்டு அவற்றின் பயனை எல்லோரும் சரிசமமாக அனுபவிக்க வேண்டும் என்ற சமதர்மத்துக்குப் போராடுகின்றது.

6. அது ஒன்றேதான் ஒவ்வொரு மனிதனும் எவற்றிற்கும் எவ்விதத்திலும் அடிமையாகாமல் அவனவன் அறிவு, ஆராய்ச்சி, அனுபவம் ஆகியவைகளுக்கு இணங்கி நடக்க சர்வ சுதந்திரம் இருக்கவேண்டும் என்ற சமதர்மத்துக்குப்போராடுகின்றது.

"[illegible]" வர்ணாச்சிரமத்தின் வேறு வேஷம்.

சுயராஜ்யம் பொருளாதார புரட்சிக்கு முட்டுக்கட்டை.

தேசியம் என்பது முதலாளிகளின் சூழ்ச்சி.

# கத்தோலிக்கர்களின் வீண்கூச்சல்.

இந்நாலில் கத்தோலிக்க மதப்பிரசாரத்தின் மடமையையும், மேனாட்டில் கத்தோலிக் மதத்தின் ஆபத்தான நிலையையும் அமெரிக்க நாஸ்திக அபிவிருத்தி சங்கத்தார போப்பிற்கு எழுதியுள்ள ஓர் கடிதமும், போப்வி.த்த அறிக்கையும் ஆராய்ந்து எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. விலை 0—0—6

நூறு புத்தகங்களுக்குக் குறையாது ஆர்டர் செய்தால் தபாற் செலவுடன் ரூ. 1—8—0. 500க்கு தபால் செலவுடன் ரூ. 5—0—0.

விலாசம்:—

குடி அரசுப்பதிப்பகம், ஈரோடு.

## சாலாமிசிரி லேகியம்

(ரிஜிஸ்டர்டு)

சிறந்த தாதுபுஷ்டி மருந்து:

மிகுந்த பலத்தையும், வீரிய விருத்தியையும் உண்டாக்கும்.

இந்த லேகியத்தால் குணமாகும் நோய்கள்.

கை கால் அசதி
இடுப்புவலி
பலக்குறைவு
ஆயாசம்
நரம்புத்தளர்ச்சி
சொர்ப்பனஸ்கலிதம்

சம்போக காலத்திலேற்படும் துரிதஸ்கலிதம் முதலியவைகளை நீக்கும்.

ஆண் தன்மைமை அதிகரிக்கச் செய்யும். தளர்ந்த நரம்பைக்கெட்டிப்படுத்தும். வீரியத்தை விருத்தி செய்யும்

திடசரீரத்தைஉண்டாக்கும். மனதிற்கு உற்சாகத்தைக் கொடுக்கும். எவ்வளவுகடின வேலை செய்தாலும் யாதொருகளைப்பும் உண்டாகாது. சுக்கிலத்தை ஸ்தம்பனம் செய்யும். சம்போக இன்பத்தை முற்றிலும் அனுபவிக்கச்செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஆண், பெண், சிறுவர், வயோதிகர் யாவரும் சாப்பிடலாம். பத்தியமில்லை,

1-சேர் டப்பி ரூ. 2-8-0

பாக்கிங் தபால் செல்வு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும். விலாசம் தெரிவித்தால் கேட்லாக் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை

ம. சி. சிங்காரம் அண் கோ.,
சித்த-ஆயுர்வேத வைத்தியசாலை,
தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.



உயர்ந்த முறையில் தயாரித்தவை. பரம்பரை வைத்திய சந்ததியிலுதித்தவரென்றும், சமஸ்தானவைத்திய நிபுணரென்றும் பழனியில் கியாதி வாய்ந்திருப்பதை நீங்கள் அறியீர்களா? எமது மருந்துகளில் ஒப்புயர்வற்றது.

## மகா வீரிய தங்கபஸ்பம்.

வெள்ளை, வெட்டை, கடுப்பு, பவுத்திரம், மூலம், நீரழிவு, க்ஷயம், இருமல், குன்மம், சூலை முதலிய சகல கோடிய வியாதிகளும் நீங்கும்.

அழிந்துபோன ஆண்மையையும், இழந்த பலத்தையும், இல்லற வாழ்வில் இன்பத்தையும் கொடுத்து, ஊக்கத்தையும், உற்சாகத்தையும் தந்து தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி, வயோதிகரை வாலிபராக்கி சதா பரமானந்தத்தைக் கொடுக்கக்கூடிய அபூர்வசக்தி இதற்கிருப்பதால் இதன் அரிய குணத்தைக்கண்டு ஆச்சரியப்படாதவர்கள் ஒருவருமில்லை. ஒருமுறை உபயோகித்துப்பாருங்கள்.

24-நாள் பஸ்பம் விலை ரூ. 10.

## சர்வபடை நிவாரணி.

சகல மேகபடை, ஊரல், படர்தாமரை இவைகள் ஒரே நாளில் உதிர்ந்துவிடும். புட்டி 1க்கு 0—8—0.

அன்னிய நாட்டார் முன்பணம் அனுப்பவேண்டும்.

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி.

## விவாக விடுதலை.

(இந்து மனைவியருக்கு இன்றியமையாதது)

ஆசிரியர்:

கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல்.

ஆராய்ச்சி நிரம்பிய இந்த அரிய நூல் ஒவ்வொரு மாதர் கையிலும், சீர்திருத்தக்காரர் சமதர்மி கையிலும் இன்றியமையாமல் இருக்க வேண்டியது. "'விவாக விடுதலை' என்னும் வேரின்றி மாதர் சுதந்தரம் என்னும் மரம் இல்லை" என்பது எவ்வாறென அறிய விரும்பின் இந்நூலை இன்றே படித்தல் வேண்டும்.

விலை அணா 4.

கிடைக்கும் இடம்:—

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.
எஸ். தங்கவேலு,
கீழ ஆண்டார் வீதி, தெப்பக்குளம், திருச்சி.

## "தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தளராதுழைப்பவன் தமிழன். வெட்டொன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0.
வெளிநாடு ரூ. 5—0—0.

விலாசம்:—
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்.

# சென்னை மாகாண நாஸ்திகர் மகாநாடு, சென்னை.

## தலைவர் தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல். அவர்கள் முடிவுரைப்பிரசங்கம்.



தோழர் ம. சிங்காரவேலு.

தோழர்களே! இந்த கிறிஸ்மஸ் நாட்களில் நமது இந்திய நாட்டில் 20, 30 மகாநாடுகள் கூடிவருகின்றன. இந்துமத மகாநாடென்றும், அகில இந்திய பெண்கள் மகாநாடென்றும் மிதவாதிகள் மகாநாடென்றும் இன்னும் பல மகாநாடுகள் கூடுகின்றன. எந்த மகாநாட்டிலும் ஏழைகளுக்கு ஒரு கைப்பிடி சாதம் அதிகப்படுமாறு எந்த மகாநாடும் தீர்மானிக்கவில்லை. அதற்கு வழியாகிலும் காட்டவில்லை.

தோழர்களே! இந்தமகாநாடு இனிதாக முடிந்தது. நீங்கள் இன்று செய்த தீர்மானங்களைப்பற்றி இரண்டொருவார்த்தை சொல்லி எனது முடிவுரையை முடிக்கின்றேன். கடைசி தீர்மானத்தைப் பற்றி நான் இதுகாறும் சொல்லி வந்ததை மறந்து விட்டீர்கள். ஹரிஜனங்களென்று 7, 8 கோடி மககளை பெயரிட்டிருப்பது மிகக் கேவலமென்று உங்களுக்குப் பல தடவைகளிலும் தெரிவித்துள்ளேன். பல்லாயிரம் பெயர் கையொப்பம் செய்து இந்தப் பெயரை இடக்கூடாதென்று அரசாங்கத்திற்கும் மற்றும் பொதுஜனங்களுக்கும் தெரிவிக்குமாறு சொல்லியிருக்கின்றேன். "அரி" என்ற சொல், எல்லா ஜாதிகளைவிடத் தாழ்ந்த ஜாதியைக் குறிப்பிக்கின்றது. இனியேனும் லட்சக்கணக்கான பெயர்கள் கையெழுத்து செய்து கவர்ன்மெண்டுக்கு "பறையன்" என்றும், "ஆதிராவிடன்" என்றும், மற்றும் பல ஈனப் பெயர்களைப் பொது தஸ்தாவேஜகளிலிருந்து, எடுத்துவிடும்படி மனுக்களை அனுப்புங்கள்.

காந்தியம் என்பது சில கொள்கைளையுடைய ஓர் சித்தாந்தம், அதனைக் கண்டித்துப் பேசலாம். காந்தியைப்பற்றி நாம் பேசவேண்டுவதில்லை. எதுபோலெனில், லெனினீயமென்றால், சில கொள்கைகளையுடைய ஓர் சித்தாந்தம். அதனைக் குறித்துப் பேசலாம். ஆனால்லெனினைப்பற்றி பேசவது அனாவசியம்.

நாஸ்திக சங்கம் ஏற்படுத்தினீர்கள். அதனை வழுவவிடாமல் நடத்துவது உங்கள் கடமை. எனக்கு ஓர் சந்தேகம். எத்தனையோ சங்கங்கள் தோன்றி, Prophets Gourd, காளான்களைப் போல் தோன்றி மறைந்துபோவதைப்போல் இதுவும் மறைந்து விடும்போலும். இதனை நமது நண்பர் இராமநாதனிடம் குறிப்பிட்டேன். எத்தனையோ சங்கங்கள் தோன்றி மறைந்தாலும் இந்தச் சங்கம் ஏன் மறையவேண்டும்? இது ஏன் வேலை செய்யாதென்றார்? சகத்தை உண்டாக்கியவர்கள் எடுத்த விஷயத்தைச் சாதிக்கவேண்டும்.

நாஸ்திக சங்கத்தார் அரசியல் வேலையில் (Political Action) நுழையவேண்டும். எந்தக் கூட்டத்தாராயினும், மிதவாதிகளாயினும் (Liberal) பிற்போக்குடையவர்களாயினும் (Conservatives) யாராயினும் அரசியல் தொழிலில் இறங்கவேண்டும். ஆங்கில நாட்டில் நாஸ்திகர் வெற்றி பெறுமைக்குக்காரணம் அவர்கள் முட்டாள்தனமேயாகும். பிராட்லா ஒருவர் ஆங்கிலப் பார்லிமெண்டில் தள்ளப்பட்டு வந்தமையால் நாஸ்திகம் ஆங்கிலநாட்டில் பரவியது. வரும் சட்டசபைகளில் இந்துசபைகளும், மகமதிய தப்லீப்களும்: சனாதனதர்மிகளும் நுழையப் போகின்றார்கள். நீங்களும் நுழைந்து அங்கிருந்து உங்கள் பிரசாரங்களைத் தெரிவியுங்கள். (Capture Political Power) அரசியல் ஆதிக்கத்தைக் கைப்பற்றுங்கள். இதைத் தவிர வேறு எந்த வழியும்இல்லை. இதைத்தான் நமதுநண்பர் இராமநாதன் எழுதிய கட்டளைக்கு எடுத்துக் காட்டினேன். இந்தக் காலத்தில் முற்கால புரட்சிகளைப்போல் செய்ய முடியாது. அமெரிக்கப் புரட்சிப்போலும், பிரஞ்சு புரட்சிப் போலும் நடத்த முடியாது. ஆகாயத்திலிருந்து ஒரு (Bombing plane) பாம் விழுந்தால் போதும், உங்களை எல்லாம் ஒரு கணப்பொழுதில் நாசமாக்க! ஆதலால் தான் சட்டசபைகளில் நுழைந்து உங்கள் வேலையைச் செய்யவேண்டுமென்பது. வேறு எந்த வழியும் எனக்குத் தோன்றவில்லை. அதுவும் கைகூடாவிடில்—ஆகாயந்தான் இருக்கிறது! அதாவது ஒன்றுமே இல்லை.

இங்கே இருக்கும் கூட்டத்தவர்கள் முக்கியமாக Bourgeois, Petty Bourgeois, முதலாளிகளாகவும், சிறு முதலாளிகளாகவும் இருக்கின்றீர்கள். ரிக்ஷா இழுக்கின்றவன் எங்கே? வண்டி இழுக்கின்றவன் எங்கே? இங்கே உங்களுக்கு வேலை இல்லை. ஏன்? எங்கள் மீன் பிடிக்கும் குப்பங்களிலும், சேரிகளிலும் நுழைந்து, அங்கிருப்பவர்களுக்கு அவர்களுடைய மூடத்தனத்தைப் போக்கலாகாது? உங்களுக்கு அங்கேதான் வேலை. புரட்சியில் நீங்கள் அல்ல, வெளிவரப்போகின்றவர்கள். நமது தோழர் ஜீவானந்தம் இளைஞர்களைப்பற்றி வீரம் பேசினார். எனக்கு நம்பிக்கையில்லை. நமது நாட்டு இளைஞர்கள் ஒன்றுக்கும் உதவாதவர்கள். Hopless என்பதே எனது அபிப்பிராயம். புரட்சியில் நமது நாட்டு இளைஞர்கள நூறு மைல் தூரம் பறந்து போய் விடுவார்கள. ஆதலால் கிராமங்களில் வாழும் தொழிலாளரை வெளியில் கொண்டு வாருங்கள். Bring them out and make them articulate. அவர்களுக்கு "தமிழ்நாடு" போன்ற தினசரி பத்திரிகைகளை வாசித்துக்காட்டுங்கள். உலக சம்பவங்களை அவர்களுக்குத் தெரிவியுங்கள்.

மதக்கற்பனைகளை சிறுவர்களுக்குக் கற்றுக் கொடுக்கக்கூடாதென்பது ஒரு காலத்தில் உலகப் பிரச்சினையாய் இருந்தது. ஆங்கில தேசத்திலும் அமெரிக்க தேசத்திலும், பிரஞ்சு நாட்டிலும் மற்ற ஐரோப்பிய நாட்டிலும், பொதுப்பள்ளிக்கூடங்களில் மதக்கல்வி கூடாதென்று தடைப் பட்டிருக்கின்றது. 20, 30 வருஷங்களுக்கு முந்தி, இந்த சென்னப்பட்டிணத்தில் இந்த பிரச்சினையை வாதித்து வந்த போது, நான் ஒருவனே மதங்களைப்பற்றி ப்பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்கக்கூடாதென்று தடுத்தவன்.

இங்குபெண்மக்களுக்கு ஒன்று கூறுகிறேன் குழந்தைகளுக்கு "கடவுள்" "சாமி" என்றுசொல்லிக் கொடுக்காமல், திருவிழாக்களில் குழந்தைகளை அழைத்துச் சென்றால், இது "சிவ பொம்மை" "பெருமாள் பொம்மை" "63வர் பொம்மை" என்று குழந்தைகளுக்குச் சொல்லவேண்டும். அதன்படி எனது வீட்டிலுள்ள 4வது சிறுவனுக்கு உற்சவத்தில் பொம்மைகளைத் தூக்கி வருகின்றார்களென்று நான் சொல்லுகின்றேன்.

காந்தியத்திற்கு மிக்க ஆதரவு இருந்து வருவதாகவும், திரள் திரளான ஜனங்கள் வேடிக்கை பார்க்கப் போவதாகவும் மயங்க வேண்டாம். பாமர மக்களுடைய தெரியாமையைத் தெரிந்து கொள்ளவேண்டுமானால், ஒரு கதை இதனை விளக்கச் சொல்வதுண்டு. அதாவது கும்பகோண மாமாங்கத்தில் லட்சக்கணக்கான ஜனங்கள் ஆற்றில் அரகராவென்று சுற்றி தண்ணீர் இறைத்து வருவதைப்பார்த்து வந்த ஒரு குருவின் மாணாக்கர்கள் தங்கள் குருவை நோக்கி "குருவே! உம்மிடம் நாங்கள் வெகு காலமாகத் தொண்டு புரிந்து வந்தும் யாதொரு உபதேசம் கிடைக்கவில்லை. இவ்வளவு சுலுவில் மக்கள் மோட்சம் போய் சேருவதாயிருந்தால் நாங்கள செய்துவரும் தொண்டு வீணன்றோ? என்றார்கள். அந்த குருவானவர் தனது சீடர்களை ஒரு பெருத்த பன்றியைக் கொண்டு வரச் செய்து அதனை ஆற்றின் தண்ணீரில் கொண்டு போய் நிறுத்தி அதற்குத் திரை மூன்று கட்டி அதன மயிரை ஒன்றைப் பிடுங்கி அர

தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க.

# சென்னை மாகாண முதலாவது நாஸ்திகர் மகாநாடு, சென்னை.

"கடவுள்" நம்பிக்கை ஒழியவேண்டும்.

காந்தியின் ஹரிஜனப்பிரசாரக்கண்டனம்.

நாடு முழுவதும் நாஸ்திகர் சங்கங்கள் நிறுவவேண்டும்.

பள்ளிமாணவர்கட்கு மதவிஷமூட்டாதீர்கள்.

நாஸ்திகத் தோழர்களின் வீர முழக்கம்.

பெருந்திரளான பிரதிநிதிகள் விஜயம்.

சென்னை மாகாண முதலாவது நாஸ்திகர் மகாநாடு 1933 டிசம்பர் 31-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-மணிக்கு சென்னை எழும்பூர் "ஒயிட்ஸ்மெமோரியல் ஹாலில்" சென்னை தோழர். எம். சிங்காரவேலு பி. ஏ. பி. எல்., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மகாநாட்டு ஹால்முழுதும் 'உலகத்தொழிலாளர்களே' ஒன்று சேருங்கள்! சமதர்மம் ஓங்குக! சுயமரியாதை வாழ்வே சுகவாழ்வு. மதம் மக்கட்கு அபின், கடவுளும் மதமும் மக்கட்கு செய்ததென்ன? பணக்கார ஆதிக்கம் ஒழிக! முதலாளி ஆதிக்கம் அழிக! புரோகித ஆட்சி ஒழிக? மதக் குருக்கள்மார்கள் மக்கள் உழைப்பை கொள்ளையடிக்கும் பகற்கொள்ளைக் கூட்டமாகும். மோட்சமும் நரகமும் பயமுறுத்துச்சொல், விதிவிதி என்பது மதியிலார் கூற்று, கர்மம் என்பதும் தலைவிதி என்பதும் கையாலாகாதவர் பிதற்றல், கடவுள் பெயரால் கழுகுகள் தோன்றின. என்பன போன்ற நீதிவாக்கியப் போர்டுகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மகாநாட்டுக்கு உள்ளூர் வெளியூர்களிலுமிருந்து பெருந்திரளான பிரதிநிதிகள் விஜயம் செய்திருந்தார்கள் அவர்கள் விபரம் வருமாறு:—

(தோழர்கள் ஈரோடு.) ஈ. வி. கிருஷ்ணசாமி, ஈ வெ.கி. ரெங்கநாயகி, ஈ.வெ.கி. மிராண்டா.

(திருச்சங்கோடு) எஸ். கே. வரதராஜுலு, எஸ். கெ. வ. (துணைவியார்)

(சேலம்) ஆர். நடேசன், ரங்கசாமி, பி. என். வரதராஜன், சி. வரதராஜன், பி. வரதராஜன், நீ. பத்தரையன், லெக்ஷிமி அம்மாள், சுப்பம்மாள், முத்தாளம்மாள்.

(ஜோலார்பேட்டை) வி. பார்த்தசாரதி.

(வேலூர்) டாக்டர் முருகேசன், மாஸ்டர். நடேசன்.

(அரக்கோணம்) கே. ஆர். நடேசன்.

(காஞ்சிபுரம் நாஸ்திக. சி. கே. குப்புசாமி.

(திருவள நல்லூர்) நாராயணசாமி.

(பாபநாசம்) சாமி சிதம்பரனுர், சிவசாமி அம்மாள்.

(கும்பகோணம்) வடிவேல், சாவித்திரி அம்மாள்.

(மன்னார்குடி) கே. ஆர். ஜி. பால், கல்யாணம்.

(தாராசுரப்) ரு. வையாபுரி, எஸ். எஸ். வாஸன், ஏ. எஸ். நாதன்.

(திருசசி) எஸ் நீலாவதி அம்மாள், நாம சுப்பிரமணியம், மணி. குமாரி, அம்சவேணி அம்மாள.

(துறையூர்) மணவை. ரெ. திருமலைசாமி, ச. ம. சி. பரமசுவம, ப. சண்முகசுந்தரம் அம்மாள்.

(திருவண்ணாமலை புதுப்பாளையம்) பி. ஆர். குப்புசாமி, ஏ. கோவிந்தன்.

(செங்கற்பட்டு) அய்யாக்கண்ணு.

(திருநெல்வேலி) ரெங்கநாதன்.

(மதுரை) எஸ். தங்கமணி நாடார், பிச்சமுத்துக் கோனார்.

(திருப்பத்தூர் வடஆற்காடு) வக்கில். பி. பெரியசாமி.

(தூத்துக்குடி) ஏ. என். வெங்கடசாமி.

(கோயமுத்தூர்) சுந்தரராஜன்.

(மாயவரம்) சி. சுப்பையா.

(திருப்பத்தூர் தெம்மரப்பட்டு) மு. கணபதி, நா. பள்ளிகொண்டாள், ராமசாமி.

(திருவாரூர்) பார்த்தசாரதி துணைவியர்.

(புதுச்சேரி) பாரதிதாஸன், அல்பான்லோ லகாஷ், நம்பிக்கைமரி அம்மாள், மேரி அம்மாள், திரிபுர அம்மாள்.

(காரைக்குடி) செல்லப்பா, நம்பி, ப. சிவானந்தன், அ. பொன்னம்பலம்.

(சிவகெங்கை) எஸ். ஆர். எம். வெங்கடாஜலம், எஸ். ஆர். எம். வெ. துணைவியார், துரைசிங்கம்.

சென்னை மாம்பலம் பல்லாவரம் எழும்பூர், புரசைவாக்கம், திருவல்லிக்கேணி, பெறம்பூர், சைதாபேட்டை, பறங்கிமலை, பெரிய மேட்டு, ஆலந்தூர், ஜார்ஜ்டவுன், கொடம்பாக்கம், மைலாட்பூர், வண்ணாரப்பேட்டை முதலிய பாகங்களிலிருந்து வந்திருந்த தோழர்கள். எம். சிங்காரவேலு, சி. டி. நாயகம் அம்மாள், சி. டி. நாயகம்சிதம்பர அம்மாள், சி. டி. என். அறம்வளர்த்தம்மாள், எல். ராமசாமி தமிழ்பண்டிதர், எல். ஆர். ரெங்கநாயகி அம்மாள், வேணு கோபால் நாயுடு, டி. என். ராமையயா டி. என். ஆர். கனகாம்புஜம் அம்மாள், எஸ். ராமநாதன், எம். ஏ. பி. எல்., ஆசிரியர் "ராவுணலிஸ்ட்" டி. எஸ். சொக்கலிங்கம், ஆசிரியர் "காந்தி", ஸ்ரீனிவாசன், ஆசிரியர் 'மணிக்கொடி', பாலசுந்தரம், 'டூடேல்' ஆசிரியர், கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல்., பி. லெட்சுமிராஜு பி. ஏ., எஸ். குருசாமி பி. ஏ., எஸ். குஞ்சிதம் பி. ஏ. எல். டி., எஸ். சகுந்தலா அம்மாள், எஸ். காந்தம்மாள், டி. எம். பார்த்தசாரதி, எஸ். வி. லிங்கம், எஸ். அருணகிரி நாதர் தமிழ் பண்டிதர், டாக்டர் எம். மாசிலாமணி 'தமிழரசு' ஆசிரியர், டி.சுப்பிரமணியம், அய்யாக்கண்ணு, அமிர்தவாசகம், வி. பி. எஸ். மணியர், வி. பி. எஸ். அசோகர், எம். பொண்ணு, ரெங்கநாதன், உசேன், பஷீர் முகமத், முகமத் உசேன், (திண்டுக்கல்) சாமி சிவநேசன், நாராயண அம்மாள், கனகரத்தனம்மாள், கே. எம். மரகதம்மாள், டீ. அங்கமித்திரி அம்மாள், ராஜாத்தி அம்மாள், எஸ். தங்கம்மாள், எம். திரிபுர அம்மாள், அம்சவேணி அம்மாள், பாஞ்சாலி அம்மாள், அச்சம்மாள், மேரி அம்மாள், அன்னவாசல் சகுபத்ரி, ராஜுபாணி, கல்யாணி, ஜெயமணி, பாப்பு வீரராகவய்யா, ஞானக்கண்ணு, பார்வதி அம்மாள் முதலிய தோழர்களாகும்.

மகாநாட்டுக்கு மதுரை சுயமரியாதைச்சங்கம், திருநெல்வேலி சுயமரியாதைச்சங்கம், திருச்சி மருத்துவர் சங்கம், தஞ்சை சுயமரியாதைச் சங்கம், அருப்புக்கோட்டை சுயமரியாதைச் சங்கம், கோயமுத்தூர் சுயமரியாதைச்சங்கம், சூலூர் சுயமரியாதைச்சங்கம், விருதுநகர் சுயமரியாதைச்சங்கம், மதுரை சுயமரியாதை வாலிபர் சங்கம், முத்துராமலிங்கபுரம் சமதர்மசங்கம், சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றம் இவைளி விருந்தும் தோழர்கள்:— புதுவை ஹரிந்திரநாத் சட்டோபாத்தியாயா, திருமங்கலம் மணிமாறன், தேவகோட்டை எஸ். லக்ஷ்மிரதன் எம். ஏ. பி. எல்., மதுரை சண்முகம், சங்கரலிங்கம், ஏ. ஆர். சிவானந்தம், பி. டி. ராமையா, எஸ். உத்தண்டன், வீர. சுபு. வீரய்யா, கொச்சி யுக்திவாதி ஆசிரியர் எம் சி. ஜோஸப், பி. ஆதிமூலம், பட்டுக்கோட்டை கே. வி. அழகர்சாமி, ஏ. ராமநாதர், ராமசுப்பையா, விசாலாட்சி, கே. மாதவன், டி. துரசாமி டாக்டர். நா. நமசிவாயம், ஆகியவர்களிடமிருந்தும் வாழ்த்துச் செய்திகளும் பாராட்டுக்கடிதங்களும் தந்திகளும் கிடைக்கப்பெற்று மகாநாட்டில் வாசித்துக் காட்டப்பட்டது.

மகாநாட்டை திருச்சி தோழர். எஸ். நீலாவதி அவர்கள் திறந்துவைத்து பிரசங்கம் செய்தார்கள். அது வருமாறு:—

## மதம் ஒழியவேண்டும்.

தோழர்களே!

இன்று இங்கு கூட்டப்பட்டிருக்கும் நாஸ்திகமகாநாடானது ஒரு நூதன மகாநாடென்று கூறப்படுவதற்கு உரித்தாகும். இம் மகாநாடு கூடுவதற்கு முக்கிய காரணம் எது என்று உங்களுக்கு விளக்கிக் காட்ட வேண்டுவதில்லை. இம் மகாநாட்டிற்கு மூலகாரணமாயுள்ள சுயமரியாதை இயக்கம் சுமார் 9- ஆண்டுகளாக செய்துவந்த வேலைகளின் பயனாகவே இன்று இச் சென்னையில் முதன்முதலாக இந்த மகாநாடு கூடுவதற்குச் காலங் கிடைத்தது என்பதை அறிய நாம் ஓர் அளவு மகிழ்ச்சி அடையாமலிருக்க முடியாது. இன்றைய நாஸ்திக மகாநாட்டிற்கு மத்தியில் இன்னும் பல நூதன மகாநாடுகளைக் கூட்டினேம் என்பதும் உங்களுக்குத் தெரியும். ஜமீந்தாரர் அல்லாதார் மகாநாடு, பணக்காரர் அல்லாதார் மகாநாடு. லேவாதேவிக்காரர் அல்லாதார் மகாநாடு முதலிய அல்லாதார் மகாநாடுகளையும் கூட்டுவித்து நமதபிப்பிராயங்களை பொதுமக்கள் பலரும் அறியுமாறு செய்தோம். அதிலிருந்து இன்னும் ஒருபடி அதிகமாக பச்சை நாஸ்திகர் மகாநாடு துவக்கிவிட்டோம். நமது இயக்கம் உலக மக்கள் யாவருக்கும் பொதுவேயன்றி கேவலம் தேசிய இயக்கம் போன்று ஒருவரம்பு கட்டி சகோதரத்துவம் பேசும் குறைவுபட்ட மனப்பான்மையைச் சேர்ந்ததல்ல நமதியக்கம் மதம் கடவுளை அடிவேறுடன் நாசப்படுத்தினுல் தீண்டாமை ஒண்டுவதற்கு அஞ்சும் என்று கூறுகிறது. தேசிய இயக்கத்தார் மதம் கடவுளுக்குத் தண்ணீர் ஊற்றி வளரட்டும் தீண்டாமையும் ஒழியட்டும் என்று கூறிவருகின்றனர். இந்தப் பித்தலாட்டம் ஏன் என்றுதான் கேடகின்றேன். நெருப்பில் எல்லோரையும் நடக்கச் சொல்லிவிட்டு அது சுடுவது தப்பு என்று ஜனங்களுக்குச் சொன்னுல் அதைக் குறும்புத்தனம், அல்லது பச்சை அயோக்கியத்தனம் என்றுதானே கூறவேண்டும், [கரகோஷம்] காந்தி பல்லாயிரக் கணக்கான ஜனங்களின் நன்மதிப்பைப் பெற்றிருககலாம். அவர்கள் பக்தி செய்து அளவு மீறிக் கொண்டாடலாம். ஆனுல் எத்தனை அறிவாளி

தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க.

# தொழிலாளி பங்காளித்வமும், லாப பிரிவினையும்.

(தோழர் சே. நரசிம்மன் எம். ஏ.)

தற்காலத்தில் தேசத்திலுள்ள முதலெல்லாம் வெகு சிலரிடமே இருப்பதும் கூலிக்காரன் கூலிக்கு முதலாளிகளின் தொழிற்சாலைகளில் வேலை செய்வதாலும், பெரும்பாலும் தேச முன்னேற்றம் தடைப்படுகிறதென்பதற்குச் சந்தேகமில்லை. கூலிக்காரன் தான் செய்யும் வேலையைச் சந்தோஷமில்லாமலும், வெகு அதிருப்தியுடனும் செய்வது சகஜமாய் போயிற்று. தான் செய்யும் வேலையில் ஏற்படும் லாபம் முதலாளிக்கே மட்டும் கொடுக்கப்படுவதால் தொழிலாளி தன் வேலையை சிரத்தையில்லாமலும், ஊக்கமில்லாமலுமே செய்கின்றான். அவனுக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் கொடுக்கவேண்டுமாயின் அவனுக்கு அவன் வேலையால் ஏற்படும் லாபத்தில் ஒரு பாகத்தைக் கொடுக்கவேண்டுமேயன்றி வேறு வழியில்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெரிகின்றது. மேல் நாடுகளில் தொழிலாளிக்கு அவன் வேலையில் உற்சாகத்தைக் கொடுக்கப்பல வழிகள் கையாளப்படுகின்றன. அவற்றில் தொழிலாளி பங்காளித்வமும், லாப பிரிவினையும் முதன்மையானது.

புத்தி கூர்மையுள்ள பல முதலாளிகள் இத்தத்துவத்தை நன்குணர்ந்து சில காலமாகத் தொழிலாளிகளுக்கு அவர்கள் செய்யும் தொழில்களில் ஏற்படும் லாபத்தில் ஒரு பாகத்தைப் பிரித்துக்கொடுக்க ஆரம்பித்தனர். இது மட்டுமல்லாது இன்னும் சிலர் தொழிலாளிகளுக்கு அவர்கள் வேலைசெய்யும்தொழிற்சாலைகளின் முதலைகுறைந்த விலைக்கு சுலபமாக வாங்க ஏற்பாடுகள் செய்து தொழிலாளிகளை சிறிய முதலாளிகளாகச் செய்து அதிக லாபத்தை சம்பாதிக்க பல வழிகளை ஏற்படுத்தினர். இம்மாதிரி தொழிலாளிகளை முதலாளிகளுடன் கலக்கச் செய்து அவர்களுக்குத் தங்கள் வேலையில் சந்தோஷமும், உற்சாகமும் ஏற்படச் செய்தவர்களில் முதன்மையானவர் எட்மி ஜீன் லிக்ளேர் (Edme Jean Leclaire) என்ற பிரஞ்சு பெரியார்.

எட்மிஜீன் லிக்ளேர் வெகு ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். தொழிலாளிகளுடன் வேலை செய்யும் பொழுது சந்தோஷத்துடனும், உற்சாகத்துடனும் அவர்கள் வேலை செய்யாததைக்கண்டு அவர் தான் முதலாளியானவுடன் அவர்களை ஊக்கப்படுத்தி சந்துஷ்டியுடன் அவர்கள் தாங்களாகவே வேலை செய்ய செய்வதுதான் முதல் கடமையென்று அவர் நினைத்தார். தான் வீடுகளுக்கு சாயம் பூசும் தொழிற்சாலை ஒன்றை பாரிஸ் நகரத்தில் ஏற்படுத்தியவுடன் தன் தொழிலாளிகளை ஒருங்கேகூட்டி தன்னுடைய புதியதத்வத்தைப் பிரரேபித்தார். ஆனல் தொழிலாளிகள் அவரை நம்பவில்லை. பின்பு பிப்ரவரிமாதம் 1842ம் ஆண்டில் மீண்டும் கூட்டி தன் தொழிற்சாலையில் வேலைசெய்த 42 தொழிலாளிகளுக்கு தன் வரவு கணக்கு புஸ்தகத்தைபார்க்கச் செய்து நிகரலாபத்தில் தன் முதலுக்கு நூற்றுக்கு ஐந்து வீதம் எடுத்துக் கொண்டு மீதியை அவர்களுக்குப் பங்கிட்டுக்கொடுத்தார். ஒவ்வொருவருக்கும் 11 பவுன் கொடுக்கப்பட்டது.

தொழிலாளிகளுக்கு ஏற்பட்ட ஆச்சரியத்துக்கு அளவேயில்லை. லிக்ளேர் மீது நம்பிகை ஏற்பட்டது. பலர் அவர் கொடுத்தலாபத்தில் பெரும் பான்மையை முதலாக அவரிடமே திருப்பிக்கொடுத்து அவர் சொல்லியதுபோல் தங்களையும் கூட்டு முதலாளியாகச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று வேண்டினர். அவர் தொழிற்சாலையும் மேலும் மேலும் விருத்தியடைந்தது. தொழிலாளிகளுக்கு லாபத்தில் ஓர் பெரிய பாகம் தங்களிடமே திருப்பி கொடுக்கப்படுமென்று தெரிந்தவுடன் அவர்கள் உற்சாகத்துடனும், சந்தோஷத்துடனும் தொழிற் புரிய ஆரம்பித்தனர். மேற்பார்வையிட ஒருவரும் வேண்டியிருக்கவில்லை. அசிரத்தையுடனும், கழிப்பிளித்தனமாகவும் வேலை செய்தவரை தொழிலாளிகளாகவே திருத்தவும், வேலையில் சாமான்களை அனுவசியமாக நாசமாக்குவதும் தொழிற்சாலையில் சிறிதுமில்லாமல்போயிற்று.

லிக்ளேர் தனது தொழிற்சாலையை சிறிய கம்பெனியாகச் செய்தார். இந்த கம்பெனிக்கு முதல் 80,000 பிராங்குகள். இம்முதலில் 30,000 பிராங்கு லிக்ளேருடைய சொந்தமுதல்மிகுதியான 500 000 பிராங்குகள் தொழிலாளிகள் சொசைடியின் முதல். நிகரலாபத்தில் முதலில், முதலுக்கு (800,000) நூற்றுக்கு ஐந்து வீதம் வட்டி கொடுக்கப்படவேண்டும். பின்பு வேலையாள்களுக்கு மீதிய லாபத்தில் நூற்றுக்கு ஐம்பதும், தொழிலாளி சொசைடிக்கு நூற்றுக்கு முப்பத்தைந்தும், எஜமானனுக்கு நூற்றுககு பதினைந்தும்வேலையை நடத்துவதற்காகவும் கொடுக்கப்பட்டது.

1911-12ம் வருடத்தில் கணக்குப் பின்வருமாறு:—

| | பிராங்குகள். |
|---|---|
| வேலையாள்களுக்கு 50 பர்சண்டு | 282,099 |
| வேலையாள் சொசைடிக்கு 35 பர்சண்டு | 197,469 |
| வேலையை நடத்தும் எஜமானனுக்கு | 84,629 |
| மொத்தம். | 564,197 |

வேலையாள்களை இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டது. ஐந்துவருடங்கள் லிக்ளேர் கம்பெனியில் வேலை செய்தவர்களும், வேலை தெரிந்தவரும், எழுதப்படிக்க அறிந்தவர்களையும் தனியாக நோயா (Noyan) என்ற தனிக் கூட்டமாக பிரிக்கப்பட்டனர். இந்த நோயா மெம்பர்களுக்குப்பல சுதந்திரங்கள் அளிக்கப்பட்டன. எஜமானனிறந்தால் அவருக்காக பதில் எஜமானனைத் தாங்களே தங்களுக்குள் பொருக்கி எடுக்கவும், கம்பெனி நிர்வாகக்கமிட்டிக்கு நபர்களைத் தெரிந்தெடுக்கவும், கம்பெனியின் கணக்கைப் பரிசோதிப்பதற்கு ஆடிட்டரை நியமிக்கவும் இவர்களுக்குச் சுதந்திரமுண்டு. வேலையாள் சொசைடிக்கு வரும் லாபத்தை எல்லாத் தொழிலாளிகளுக்காக (1) மருந்து செலவுக்கும், அசௌக்கிய நாள்களுக்கு சம்பளம் கொடுப்பதற்கும் (2) கர்பிணிகளுக்கு கர்பவாச நாள்களுக்கு பணச்செலவிற்கும் (3) இருபது வருடங்களுக்குக் கம்பெனியில் வேலை செய்தவர்களுக்கு வருடம் 60 பவுன் பென்ஷன் கொடுப்பதற்கும் (4) எல்லாத் தொழிலாளிகளுக்கும் லைப் இன்ஷ்யூரன்ஸுக்கு 40 பவுன் கொடுக்கவும் (5) தொழிலாளி கருமாந்திர செலவுகளைக் கொடுக்கவும் ஏற்படுத்தப்பட்டது.

லிக்ளேர் ஏற்படுத்திய நிபந்தனைகள் கவனிக்கத்தக்கவை. முதலாவது எல்லா வேலையாள்களுக்கும் நிகர லாபத்தில் ஓர் பாகம் கொடுக்கப்பட்டது. ஆனல் வேலை தெரிந்த நுட்ப புத்தியுள்ளவர்களுக்கு உற்சாக மூட்ட, நோயா மெம்பர்களென்று அவர்கள் பிரிக்கப்பட்டு நிர்வாகத்தை நடத்த அவர்கள் கற்பிக்கப்பட்டனர் இந்த நோயா மெம்பர்களுக்குச் சிறிது அதிகலாபமும் அளிக்கப்பட்டது. மேலும் கம்பெனியில் உன்னத பதவிகள் அவர்களுக்கு எட்ட பல ஏற்பாடுகள் செய்யப்பட்டன. 1900ம் வருடத்தில் கம்பெனியை நடத்தும் யானேஜிங் டைரக்டர் ஓர் தொழிலாளிதான்.

பிரான்ஸ் தேசத்திலே கைஸ் (Guze) என்னும் நகரத்தில் கோடின் (Godin) என்ற பெயர் கொண்டவர் 1880ம் வருடத்தில் லிக்ளேர் போலவே ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தினர். அவரும் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவராதலால் தொழிலாளியின் துயரங்களையும், அவன் உர்ச்சாகமில்லாத வாழ்கையும் கண்டறிந்தவர். அவர் தன் தொழிலாளிகளை நான்கு வகையாக பிரித்தவர். முதல் வகையைச் சேர்ந்தவர்கள் கம்பெனியில் ஐந்து வருடங்கள் வேலை செய்திருக்க வேண்டும். கம்பெனியின் முதலில் இருபது பவுன் போட்டிருக்க வேண்டும். கம்பெனியின் கட்டிடங்களிலேயே வசிக்க வேண்டும் இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்களும், மூன்றாவது வகையைச்சேர்ந்தவர்களும் கம்பெனியில் முறையே குறைந்தது மூன்றுவருடங்களாவது, ஒருவருடமாவது வேலை செய்திருக்கவேண்டும். நான்காவது வகையைச் சேர்ந்த வர்கள் கம்பெனியில் வேலை செய்து பென்ஷன் வாங்கினவர்கள் இரண்டாவது வகை வேலையாள்களும், மூன்றுவது வகை வேலையாள்களும் முதல் வகை வேலையாள்களாக ஆவதற்கு பலசந்தர்ப்பங்களும், முறைகளும் ஏற்படுத்தப்பட்டன. ஊக்கமுள்ளவர்கள் ஐந்துவருடங்களில் முதல் வகை வேலையாளாக ஆவது சுலபம்

முதல்வகை வேலை யாள்கள் கம்பெனியின் வரவு செலவு திட்டத்தை பரிசோதிக்கவும், கம்பெனியின் நிர்வாக கமிட்டிக்கு நபர்களை நியமிப்பதற்கும் சுதந்திரமுண்டு. மொத்தலாபத்தில் கட்டிடங்களை பழுது பார்ப்பதற்கும் நூற்றுக்கு ஐந்து வீதம் முதலுக்கு வட்டிக்கும் தொழிலாளிகளின் நன்மைக்காகஏற்படுத்தப்பட்டிருக்கும் சொசைட்டிகளுக்கும் லைப் இன்ஷ்யூரன்ஸுக்கும் (Life Insurance) ஒரு பாகம் கொடுக்கப்பட்டது.

பின்பு நிகரலாபத்தில் நூற்றுக்கு எழுபத்தைந்து தொழிலாளிக்கும், முதலுக்கும் கொடுக்கப்பட்டது. எல்லாத் தொழிலாளிகளின் கூலிகளை ஒருங்கே கூட்டப்பட்டது. இத்துடன் முதலையும் கூட்டப்பட்டது. இந்த மொத்த பணத்திற்கு நிகரலாபத்தில் நூற்றுக்கு எழுபத்தைந்து லாபமாகக் கொடுக்கப்பட்டது.

மீதிய நிகர லாபத்தில் நூற்றுக்கு இருபத்தைந்தில் நான்கு பாகம் மானேஜருக்கும், பதினறு பாகம் பல டிபார்ட்மெண்ட் கமிட்டிகளுக்கும் (இவ்வமைப்பின் மெம்பர்கள் தொழிலாளிகளே) கணக்கு பரிசோதிக்கும் கமிட்டிக்கு நூற்றுக்கு இரண்டும் கம்பெனிக்கு விசேஷ நன்மைசெய்த தொழிலாளிகளுக்கு இனும்கொடுக்க ஒரு பாகமும் கொடுக்கப்பட்டது.

ஆனல் கோடின் தொழிலாளிகளுக்கு இந்த லாபப்பிரிவினையில் பாகத்தை பணமாக கொடுக்கவில்லை. இப்பணத்திற்குவட்டி போட்டுவேலையாள் கம்பெனியைவிட்டு நீற்கும் பொழுது மொத்தபணமாக கொடுக்க

(தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க.)

# ஏழைப்படிப்பாளிகளும், இந்திய மக்களின் பரிதாபநிலையும்.

(நாகை தோழர் கே. ஆர். ராமகிருஷ்ணன்)

உலகம் இருக்கும் தற்கால நிலைமையில் நமது நாட்டிலுள்ள உயர்தரப் பாடசாலைகளிலும், சர்வகலாசாலைகளிலும் மக்களுக்குப் போதிக்கப்பட்டு வரும் கல்வி முறை, எத்துறையிலும் பயன்தருவதாகக் காணப்படவில்லை. ஒரு மாணவன் ஸ்கூல் பைனல் அல்லது பி. ஏ. எம். ஏ., முதலிய வகுப்புக்களில் கல்விபயின்று தேர்ச்சியடைந்திருந்தபோதிலும், சமூகவுலகில் அனுபவிக்க வேண்டிய வாழ்க்கைத்துறையில் எவ்விதமான நன்மையையும் அடைகின்றானில்லை.

உயர்தரக்கல்வியும் சர்வகலாசாலைக்கல்வியும் செல்வமுள்ளவர்களுக்கே கிடைக்கத்தக்க வசதிகளிருக்கின்றனவேயன்றி சாதாரண ஏழைமக்களுக்குக்கிடைக்கும்படியான நிலைமையில் இல்லை.

தென்னிந்தியாவின் ஒரு சில இடங்களில் ஏழைமானவர்களும் கற்கும்படி சிலவசதிகளும், சில கலாசாலைகளும் இருக்கின்றன. இந்தஸ்தாபனங்களும், செல்வம் நிறைந்த கனவான்களின் ஆதிக்கத்துக்கும், அதிகாரத்துக்கும் பார்ப்பனீயத்திற்கும் கீழ்ப்பட்டு இருப்பதால் இத்தகையஸ்தாபனங்களிலும், தற்சமயம் ஏழைமக்கள் இலவசகல்வி பெறுவதற்கு முடியவில்லை. உதாரணமாக ஒரு திக்கற்ற ஏழைமாணவன் இலவசமாக உணவு, உடை, கல்வி இவைகள் அளிக்கப் பட்டுவரும் ஒரு தருமகலாசாலையில் சேரவேண்டுமென்று விரும்பினால், சில பொருள்படைத்த அல்லது கௌரவம்வாய்ந்த கனவான்களின் சிபார்சு அவசியம் வேண்டியிருக்கிறது. உண்மை ஏழைமாணவர்கள் இத்தகைய உயர்ந்த கனவான்களின் சிபார்சைபெறுதல் பெரும்பாலும் அரிதாகவே இருக்கின்றது. ஆகவே ஏழைகளுக்காகவே ஏற்படுத்தப்பட்ட தரும கலாசாலைகளில் ஏழைமக்களுக்குப் படிக்கவசதி கிடைக்கிறதில்லை.

சில செல்வமுள்ளவர்களே ஏழைகள் என்பதாகச் சொல்லிக்கொண்டு தரும கலாசாலைகளிற் சேர்ந்து விடுகின்றனர். இவர்கள் கல்வி கற்கப் போதியபணம் இவர்களிடத்திருந்தும், திக்கற்ற ஏழைமக்களுக்குப்போட்டியாக வந்துவிடுவது மிகவும் விசனிக்கத்தக்கதாகவே இருக்கிறது.

இன்றைய நிலைமையில் எந்த ஸ்தாபனங்களை எடுத்துக்கொண்டாலும் செல்வம் நிறைந்த கனவான்களே நிரம்பி இருக்கின்றனர். ஜில்லா போர்டுகளிலும், சட்டசபைகளிலும், தாலுக்கா போர்டுகளிலும், நகரசபைகளிலும், பணம்படைத்த பிரபுக்களும், எழுத்துவாசனையும் ஏழைமக்களின் நிலைமைகளையுமுணராத தனவந்தர்களுமே பெரும்பாலும் நிரம்பி இருக்கின்றனர். ஏழைமக்களின் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் மிகச் சிலரேயாவர் இத்தகையினரிலும் பெரும்பாலார் பிரபுக்களுக்கடிமைப் பட்டவர்களென்னலாம்.

நன்றியற்ற செல்வான்களில் ஒரு சிலர் பெரும்பாலும் செல்வத்திலேயே பிறந்து செல்வத்திலேயே வளர்ந்து செல்வம் நிறைந்த செல்வச் சபைகளிலேயே ஸ்தானம் பெற்றிருப்பதால், தங்கள் செல்வச் செருக்காலும், செல்வர்கள் கூட்டுறவே அதிகம் கிடைப்பதாலும் ஏழை விவசாயிகள் ஏழைமக்கள் இவர்களுடைய இன்ப துன்பங்களை ஒரு சிறிதும் உணராதவர்களாக இருக்கிறார்கள்.

ஏழை மக்களிடம் சில குறைபாடுகளிருக்கின்றன வென்பதை நான் ஒப்புக்கொள்ளுகின்றேன். இவர்கள் வயிற்றுப் பாட்டின் நிமித்தம் வறுமை, தரித்திரம், துன்பம் இவைகளைத் தாங்கிச் சகிக்க முடியாமலும், பொய், கோபம், திருட்டு, கொலை முதலிய பழக்கங்கள் நம் நாட்டினில் ஆயிரக் கணக்காக ஆண்டுதோறும் வளர்ந்துவருகின்றன இந்தத் துன்பங்களை நம் நாட்டினின்றும் ஒழிக்க வேண்டுமானால் ஷை குற்றம் செய்வோர்களுக்குப் பலவிதமான தண்டனைகள் விதிப்பது போதுமானதல்ல.

இதற்காக மூலகாரணம் என்னவென்பதைக் கண்டு நமதுநாட்டில்உள்ள ஏழை பணக்காரத்தன்மை என்றவித்தியாசத்தை ஒழிக்கவேண்டும்.

ஆண்டுதோறும் மாணவர்களுக்கு எத்துறையிலும் பயனையளிக்காத கல்விமுறையைப் பல்லாயிரம் மக்களுக்குப்போதித்து பட்டதாரிகளாகச்செய்து கல்லூரிகளினின்றும் வெளியனுப்பிக் கொண்டிருக்கக் கூடாது. உலக வாழ்க்கையில் பல துறையிலும் பயனையளிக்க வல்ல தொழில் முறைக் கல்வியே இன்றைய நிலைமையில் நம்மிந்தியா எதிர்பார்த்து நிற்கின்றது.

தற்காலத்தில் நமது இந்தியாவிலுள்ள கலாசாலைகளில் போதிக்கப்பட்டு வரும் கல்வி முறையை மக்களுக்கு நன்மைபயக்கும் துறையில் பயன்படும்படி திருத்தியமைப்பித்து அதற்கான ஏற்பாடுகளையும் இன்றே நாம் செய்ய வேண்டும். நமது நாட்டில் ஒரு சில கனவான்கள் பிறருக்குத் தருமம் செய்யும், குணத்தையுடையவர்களாகயிருக்கிறார்கள். இது மிகவும் புண்ணிய காரியமென நினைக்கின்றனர். இப்படிப் பிறருக்கு பிச்சை போடுவதென ஒரு சாரார் இருக்கின்ற படியால் வாங்குவதற்கென ஒரு வகுப்பார் தோன்றியிருக்கின்றார்கள். அயல்நாடுகளில் பிச்சையேற்றுண்ணும், கூட்டத்தினரை நாம் சாதாரணமாகத் தெருக்களில் பார்க்க முடியாது. இவர்களுக்கென சத்திரங்களும் மடங்களும் மலிந்து காணப்பட மாட்டாது. காலம்சென்ற எலிசபெத் மகாராணியார் ஆட்சிமுதல் 'ஏழைகள் விடுதி' "தொழிலாளர் விடுதி" முதலியவைகளை ஏற்படுத்தி சமூகத்தினரில் ஏழை மக்களே இல்லாதவாறு சீர்படுத்திக் கொண்டனர். நாட்டிலே இருக்கும் மடங்களும், சத்திரங்களும், சாவடிகளும் போதாதென்று இன்னும் பல புதிதாகக் நாம் கட்டிக்கொண்டிருக்கின்றோம். அந்நிய நாட்டார் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றமடைந்து கொண்டே வருகின்றார்கள். ஆனால் நாம் பின்னேற்றமடைந்துகொண்டே வருகிறோம்.

நமதுதேசம் உலகத்திலேயே செல்வம்செழிப்பு இரண்டையும் இயற்கையிற் பெற்றுள்ள நாடுகளில் முதன்மையாகவுள்ள தென்றுசொல்லலாம். அப்படியிருந்தும் நம் நாட்டு மக்களிற் பெரும்பாலார் அன்றாடம் உண்ண உணவும் உடுக்க உடையும் இருக்க இடமும் இல்லாதவர்களாய்த் தவிக்கின்றனர்.

பல விடங்களில் சில ஏழை மக்கள் பல வாரங்களாகவும், பல நாட்களாகவும், பட்டினி கிடக்கின்றனர். சிலர் சாக்குகளை உடைக்குப் பதிலாக இடையில் உடுத்தித் தெருக்களிற் காணப்படுகின்றனர்.

ஏழை மக்களின் நிலைமையைச்சீர்படுத்தாமல் விட்டுக்கொடுத்துக் கொண்டிருந்தால் இன்னும் சில ஆண்டுகளில் ஏழை மக்களின் கொடுமை சகிக்க முடியாதபடி பலவித கஷ்டங்களை ஏற்படுத்திவிடும். ஆகவே படித்துவேலையற்றிருக்கும் நிலைமையையும், உணவு, உடை, இடமற்று ஏங்கித் துன்புறும் ஏழைகளின் நிலைமையையும் சீர்படுத்தவும், ஏழை மாணவர்கள் சீர்திருத்தமான பயனடையக்கூடிய தொழிற்கல்வியை இனியேனும் பெறும் படி கல்வி முறையில் திருத்தியமைக்கவும், செல்வத்திற் கொண்டு ஏழை மக்களை அடிமைப்படுத்தித் துன்புறுத்தும், கொடியவர்களின் கொள்கைகளைக் கண்டிக்கவும், இந்திய நாட்டு இளஞ் சிங்கங்களும், மக்களின் முன்னேற்றங்கொண்டுழைக்கும் மாண்புறு பெரியோர்களும் இன்றே முன்வந்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

---

## தமிழ்நாடு பார்ப்பனரல்லாதார்

# வாலிப மகாநாடு.

—0—

இம் மகாநாடு திருச்சியில் ஜனவரி மாதம் 21 தேதி கூட்டப்பெறும்

மகாநாட்டுத் தலைவர் தோழர் என். ஏ. அய்யாசாமி எம். ஏ. பி எல். அட்வகேட் & செனட்மெம்பர், சேலம் தாலூகாபோர்டு உப தலைவர்.

திருநெல்வேலி டாக்டர் தோழர் ஆர். வி. சொக்கலிங்கம் பி. ஏ. எம். பி. பி. எஸ். அவர்கள் மகாநாட்டை திறந்து வைக்குமபடி கேட்கப்பட்டிருக்கிறது.

வரவேற்புக் கழகத் தலைவர் தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல். மற்றும் வாலிப இயக்கப் பிரமுகர்கள் பலர் வருவார்கள் என எதிர் பார்க்கப்படுகின்றது. தமிழ்நாட்டுப் பார்ப்பனரல்லாதார் வாலிப சங்கம் அனைத்தும் இதில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

| பொக்கிஷதார். | காரியதரிசிகள். |
|---|---|
| T. P. வேதாசலம் B. A. | T. சிவஞானம் |
| | K. N. வாசுதேவ் |
| | T. V. சன்ஜீசி |

---

## மதம் மனித சமூகத்திற்கு அபின்.

# சோவியத் ரஷ்யாவில் நாஸ்திகம்.

## நாஸ்திகர்கள் செய்துள்ள வேலை.

(தோழர் T. N. இராமச்சந்திரன்)

[ இக்கட்டுரை—பொதுவுடமை ரஷ்யா மீது காதலற்றவரும், பச்சை நாஸ்திகத்தை விரும்பாதவரும், கடவுள் நம்பிக்கையில் முழு தளர்ச்சி பெறாதவருமான கர்னல் J. கெட்ஈன் ‘பியர்சன்ஸ் வீக்லி’ பத்திரிகையில் எழுதியதின் மொழிபெயர்ப்பாகும். நமது மனப் போக்கற்ற ஒருவர் கூறும் விஷயங்களை வாசகர்கள் கவனிக்க வேண்டுகிறோம். ]

சோவியத் ரஷ்ய நாஸ்திகப் போராட்ட ஐக்கிய சங்கத்தின் 5000000 தீவிர வாதிகளடங்கிய அங்கத்தினர்களின் கூட்டத்தில் அதன் சபை அக்கிராசனரும் அறிஞருமான புரொபசர் லூகாகெபஸ்கி [Lukacheffsky] என்பார் சமீபத்தில் கீழ்கண்டவாறு குறிப்பிட்டார்.

“ரஷ்யாவில் மதத்திற்குச் சாவு எப்பொழுது ஏற்படும்? இன்னும் 10-வருஷங்களில் என்று நாம் நினைக்கிறோம். ஏன்? அதற்கு முன்னதாகவே ஏற்படும்! நாம் நாளையே வெற்றிகொண்டு விடுவோம்!”

மாஸ்கோவின் மத்தியில் அமைந்த ஸ்ரீடிங்கா [Sretinka] யின் பழுதுபட்ட கிறிஸ்தவ ஆலயத்தின் கட்டிடத்தில் உள்ள இரண்டாவது மெத்தையின் அவரது சிறிய ஆபீஸ் அறையில் நான் உட்கார்ந்து; கிறிஸ்தவ மதத்தோடு சோவியத் ரஷ்யா யுத்தம் செய்து வருவதின் சாதக பாதகங்களைப் பற்றி மூன்று மணிநேரம் பேசி அளவளாவிக் கொண்டிருந்தேன்.

பக்திவிஸ்வாசிகள் அவர்களுடைய இறுதிப் போராட்டத்தை எவ்வளவுதூரம் நடத்தித் தங்களுடைய நம்பிக்கைகளை நிலைநிறுத்த முயற்சித்தாலும்கூட முடிவில் சர்ச்சானது கண்டிப்பாக அழிந்தொழிந்துபோகுமென்பதே எனது முடிவாக இறுதியிலேற்பட்டது.

நாஸ்திகப் போராட்ட ஐக்கிய சங்கமானது [The Union of Militant Atheist] அதனை [Chruch ஐ] அடியோடு நாஸ்தியாக்கவே முடிவுகொண்டுள்ளது.

நான் கடந்த 10.வருஷங்களாகவே இந்த அதிதீவிர சங்கத்தின் நடவடிக்கைகளைக் கவனித்து வந்திருக்கின்றேன். 1922-௵ ஆரம்பகால முதற்கொண்டு நாளுக்கு நாள் அது பலம் கொண்டு அதிக செல்வாக்குப் பெற்று வருகிறது. ஆயிரம் பதினாயிரமாக அதனுடைய வாலிப அங்கத்தினர்கள் கிறிஸ்துமஸ்ஸின் காலையிலும் ஈஸ்டரின் மாலையிலுமாக நாஸ்திக விளம்பர மொழிகளைத் தாங்கி கடவுள் இல்லையென்ற பாட்டுப்பாடி கிறிஸ்துவைக் கேலிசெய்துவருவதை நான் பார்த்திருக்கிறேன்.

நான் லூகாகெப்ஸ்கியோடு சந்தித்துப் பேசியிருந்த காலத்திற்குப் பின்னர்தான் இந்தஇயக்கத்தின விரிந்த நோக்கத்தையும்-வலுமையும்-துணிந்தமுடிவையும்- அதனின் இறுதியான முடிந்த லக்ஷியத்தையும், வாஸ்தவத்திலேயே நான் போற்றத்தலைப்பட்டேன். அது அதனுடைய வேலை முறைகளில் வெற்றி பெறுவதினின்று எதனாலும் நின்று விடாது. அது கூடுமானால் உலக மனைத்தையும் தன் கொடியின்கீழ் கொண்டு நிறுத்த முடியும்.

ரஷ்யாவில் எனக்கேற்பட்டுள்ள நீண்ட அநுபவத்திற்குபின்னருங்கூட அங்கு உள்ள எல்லா கிராமங்களிலும்—பல பெரிய நகரங்களிலும் இன்றைய தினம் கடவளற்ற குறி கொண்டு அங்கு விளங்குகிறதென்று என்றால் எப்பொழுதேனும் உணர முடியவில்லை. உக்ரெயினில் உள்ள ஒருநகரமும் டெ காகசிலுள்ள இரண்டு நகரமும் [anti-christ] கிறிஸ்தவ விரோத தேசமென்று சர்க்கார் அறிக்கை மூலம் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது இந்த வெற்றிகரமான முடிவுக்குக்காரணம் நாஸ்திகப் போராட்ட ஐக்கிய சங்கத்தார்களும் புரொபசர் லூகாகெப்ஸ்கியுமாகும்.

கட்டுகடங்கிய நூற்றுக்கணக்கான வீரர்பட்டாளங்கள் தேசத்தின் ஒவ்வொருமூலைகளிலும்முடுக்குகளிலும் கிறிஸ்துவத்தைப்பற்றியும்—மதத்தைப்பற்றியும் அடியோடு—ஒரேயடியாக ஒழிக்க வெகு தீவிரமாக முனைந்து நிற்கிறது.

சமதர்ம ஐக்கிய பஞ்சாயத்து குடி அரசின் [ரஷ்யாவின்] 27 அல்லது 28 தனித்தனி குடி ஆட்சிகளில் சர்ச்சானது நாளாவட்டத்தில் தரை மட்டத்திற்குக் கொணடுவரபபட்டிருக்கிறது. நான் சென்ற இரண்டு வருஷங்களுக்கு முன்பு மாஸ்கோவில் இருந்த காலத்தில் கண்டதைவிட இன்று இருபதுக்கணக்கான சர்ச்சுகள் [Scores of Church] மறைந்தொழிந்தன. நமது கர்த்தரின் பிரக்கியாதி பெற்ற காதிடிரெலும்கூட; அதுவும் இறந்துபட்ட பட்ரியார்க் டிக்ஹோன் இருபது வருஷம் பூஜிக்கப்பட்டதும் தங்கஸ்தூபிகளுக்கும் பிரக்கியாதியடைந்ததுமான அது இன்று மாஸ்கோ ஆற்றின் கரையருக்கே பாழ்பட்ட அழிந்த குவியலாக விளங்குகிறது. அந்த இடத்தில் இன்றைய காலச்சக்கரத்தின் ஒளியின் சிற்பசாஸ்திர எடுத்துக்காட்டாக சோவியத்துகளின் மாட கூடங்கள் உயர்த்தப்படுகின்றன. சரித்திர பிரக்கியாதியடைந்ததும், ரோமாபுரியின் அர்ச் பீட்டரின் ஆலயத்திற்கு ஒப்பிடப்படுவதுமான லெனின் கிராட்நகரத்தில் அமைந்த அர்ச் ஐசக் காதிடிரெலானது இன்று கிறிஸ்தவ-விரோத, மதவிரோத கண்காட்சி சாலையாக விளங்குகிறது. ஐந்து ரூபிள் காகிதங்களை நீங்கள் கொடுத்தால் அந்த உலகத்தின் எல்லா மதங்களின் சின்னங்கள், அப்சங்கள் விநோதங்கள் பிற எல்லாம் விசாலமான அழகிய பளிங்குக் கற்களிடையே பற்பலவித அழகிய தோற்றங்களோடு கண்கவர் வனப்பாக கண்டுகளித்து உல்லாசமாகலாம். கிறிஸ்துமதம், கத்தோலிக்மதம், பிராட்டஸ்டண்ட் மதம், புத்தம், மகமதீயம் மற்ற எல்லா மதங்களின் (வீரப்போக்கில் திகழும்) காக்ஷியும் அதன போராட்ட (மத) குருக்கள் ஆடவர்-பெண்டிர் இவர்கள் கொண்டுள்ள நடை உடை கோலங்களின் காக்ஷியும் அங்கு கண்டு களிக்கலாம்.

அங்கு அவர்களுக்குள்ளேயே ஏற்பட்ட பெறும் மாறுதலை தரிசிக்கவே ஆயிரக் கணக்கான மக்கள் நாள்தோறும் இந்தப் பிரசித்திபெற்ற காதிடிரெல்களில் குழுமுகின்றார்கள். பழைய ஜார் மன்னரின் சார்ஸ்கோ, செலோ, பீடர்ஹோப் அரண்மனைகளுக்கு மக்கள் எவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டார்களோ, அது போலவேதான் இன்று பள்ளிச் சிறுவர்களு'-சர்வகலாசாலை மாணவர்களும்—தொழிலாளர்களும் திரள்திரளாக இந்த ஸ்தலங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றாகள். இங்கு இவர்களுக்கு சோவியத் ரஷ்ய சர்க்கார் மதத்தையும் அதனுடைய வேலைகளையும் கருதும் முறையாகிய பழைய கொடிய மத ஞாபகங்களை வெட்ட வெளிச்சமாக்குகிறார்கள். ஒவ்வொரு நகரத்திலும் [City] ஒவ்வொரு டவுனிலும் இதுபோன்ற ஒரு மியூசியமிருக்கிறது. அநேக இடங்களில் இரண்டும் அதற்குமேலும் இருக்கின்றன. ஆனால் எங்கும் நிலைமை ஒன்றே. கார்ல்மார்க்ஸ் ‘மதம் மக்களுக்கு அபின்’ என்றார். லெனின் அவரைப் பின்பற்றி அவரது மரணப் படுக்கையிலும் அதையே முடிவான கருத்தாக அறிவித்துவிட்டார்.

சர்ச்சுகளைக் காப்பாற்ற வேண்டுமென்கிற போராட்டம் இன்னும் நடந்துகொண்டுதானிருக்கிறது. வாரத்தில் ஒவ்வொரு நாளிலும் மாஸ்கோ, லெனின் கிரேட் போன்ற நகரங்களின் தெருக்களில் பாதிரிகள் உலாவிவருவதைப் பார்க்கலாம். ஆனால் அங்கு எந்த ரோமன்கத்தோலிக் பாதிரிகளும் காணப்படார்; ஏனென்றால் அவர்கள் கைவிரல்விட்டு எண்ணக்கூடிய மிகச் சொற்பர்களே அங்கு மிருந்துள்ளவர்களாவார்கள். ஆனால் பழைய வைதீக குருமார்களை [ரஷ்யாவில் அவர்களை அழைக்கப்படும்விதம்] “போப்புகளை” காணலாம். இவர்கள் பழுத்த நரை முதிர்ந்தவர்களாவார்கள். நீண்ட தொங்கல் அங்கியும்-வளைந்த கழுத்துப் பட்டைகளில் கனைத்த வெண்மைப் பூட்டு களைமைந்துமான துக்க தோற்றமே அவர்கள் உருவங்களாகும். ரஷ்யாவின் அநேக இடங்களில் பிரார்த்தனைகள் நிகழுகின்றன. மாஸ்கோவில் அநேக சர்ச்சுகள் தரைமட்டமாக்கப்பட்ட போதிலும் இன்னும் அறுபதுக்கு மேல்பட்ட சர்ச்சுகள் அழுத்தமாக இருக்கின்றன. இவைகளில் அநேக சர்ச்சுகள் மியூசியங்களாக விளங்கியபோதிலும் அதிலும்

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க,

# சென்னை மாகாண

## முதலாவது நாஸ்திகர் மகாநாடு.

வரவேற்புக்கழகத் தலைவர் தோழர் சமதர்ம நாஸ்திக

### சி. கே. குப்புசாமி அவர்களின்

வரவேற்புப்பிரசங்கம்.

சென்னை மாகாண முதலாவது நாஸ்திகர் மகாநாட்டு வரவேற்புக்கழகத் தலைவர் காஞ்சிபுரம் தோழர் சமதர்ம நாஸ்திக சி. கே. குப்புசாமி அவர்களின் வரவேற்புப் பிரசங்கம்.

அன்புமிக்க தோழர்களே!!

சென்னை மாகாண முதலாவது நாஸ்திகர் மகாநாட்டுக்கு சென்னையிலிருந்தும், இன்னும் பலஜில்லாவிலிருந்தும் விஜயம் செய்திருக்கும் உங்கள் எல்லோரையும் இம்மகாநாட்டின் சார்பாக நான் மனப்பூர்வமாய் வரவேற்கின்றேன்.

நாஸ்திகர்களெல்லாம ஒன்று சேர்ந்து சென்னைமாகாணத்தில் முதன் முதலாவது மாகாண நாஸ்திகர் மகாநாட்டை கூட்டியிருக்கிறோம். இதிலிருந்து உலக தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும், பாமரமக்களுக்கும் நாஸ்திக உணர்ச்சி அதிகரிக்கும் எனபதில் சந்தேகமில்லை.

நாஸ்திகம் என்றால் என்ன. சர்வ சக்தி, சமகுணம், பூரண சக்தி. தயாளகுணம். ஜீவகாருண்யம் அன்பு, சமதர்மம் இவ்வித குணங்கள் நிறைந்த ஒரு கடவுள் உண்டென்று ஆஸ்திகர்கள். கூறுவதை அறிவுள்ளவர்கள். மறுப்பதே நாஸ்திகமாகும்.

### மனித குலத்திற்கு நிகழ்ந்துவரும் சம்பவங்கள்.

வல்லரசுகளின் யுதத்தால் லட்சக்கணக்கான தோழர்கள் மாண்டு மடிந்து விடுகிறார்கள். சிற்றரசர்களின் அறியாமையால் ஆயிரக்கணக்கான. தோழர்கள் வேலையின்றி தவிக்கிறார்கள், கடவுள் நம்பிக்கையால் நூற்றுகணக்கான தோழர்கள் கொலையுண்டு போகுகிறார்கள். பாம்பு விஷங்கள் தீண்டி லட்சகணக்கான தோழர்கள் இறந்துபோகிறார்கள் மிருகங்களின் கோபத்தால் ஆயிரங்கணக்கான குழந்தைகள் மாண்டு மண்ணோடு மண்ணாகமக்கி விடுகிறார்கள். இயற்கை பூகம்பங்களால் லட்சகணக்கான தோழர்கள் பாதாளம் போய் சேருகிறார்கள். விஷக்காற்று. புயல் காற்று. அக்கினி மழை- இவைகளால் லட்சகணக்கான தோழர்கள் மடிந்து போகிறார்கள்- இவ்வித சம்பவங்களுக்கு யார் காரணம் ஆஸ்திகர்கள் கூறுகிறபடி கடவுள் காரணமல்லவா.

கடவுள் காரணமாயிருந்தால் கடவுளுக்கு நீதியிருக்கிறதா? தயாளகுணங்கள் ஜீவகாருண்யம் பூர்ணசக்தியுடைய கடவுள் சம்பவங்களையும் உலக தோழர்களுக்கு வறுமையையும், பிணியையும், சச்சரவுகளையும், குரோத புத்தியையும், ஏன் சிருஷ்டித்திருக்க வேண்டும். உலகத்தில் முதளாளி தொழிலாளி, உயர்ந்தவன் தாழ்ந்தவன், பணக்காரன், ஏழை, ஜமீன்தாரன், குடியானவன், உழைப்பாளி, சோம்பேரி, இவ்வித வித்தியாசங்கள் நிறைந்திருக்கிறது. இவ்வித கொடுமைகளைக்கடவுள் சிருஷ்டித்திருந்தால். கடவுளை யோக்கியமற்றவன் என்றும், நீதியற்றவன் என்றும், உலக துரோகி என்றும், பாரபக்ஷமுடையவனென்றும், கொலையாளி என்றும், நயவஞ்சகமுடையவனென்றும், தீயகுணங்கள் நிறைந்த திருடனென்றும், உலக பேடி என்றும், முட்டாள் என்றும், அறிவுள்ளவர்கள் கூறினால் அவர்களை, நாஸ்திகர்களென்றும், கடவுள் நம்பிக்கை யற்றவர்களென்றும், விரோதி என்றும், ஆஸ்திக வாதிகள் கூறுகிறார்கள்.

### கடவுள், ஆன்மா இல்லை என்று சொல்வதுமட்டும் நாஸ்திகமல்ல.

உலக விவசாயிகளுக்கும், தொழிலாளிகளுக்கும், பாமரமக்களுக்கும். பொருளாதாரத்தில் சமத்துவம்- சம சுதந்திரம்- சமதர்ம திட்டபடி கொடுத்து போஷிப்பதே- உலக நாஸ்திகர்களின் கடமையும், லட்சியமுமாகும்- உலகத்தில் நாஸ்திகர்களே ஜனனாயக ஆட்சியைநடத்த யோகியத்தையுடையவர்கள்- உலகத்தில் சாதியின் பெயராலும், சடங்குகளின் பெயராலும், ஆஸ்திகத்தின் பெயராலும், வயிர்வளர்க்கும் சிறு கூட்டத்தினர்களை அடியோடு ஒழித்தாக வேண்டும்- காஞ்சியில் மட்டும் பூரா கோயில்களையும் பிடித்து அதிலுள்ள பொருள்களை பறிமுதல் செய்தால் சுமார் 15கோடி ரூபாய்களுக்கு மேலாகும். இத்தொகையைக் கொண்டு மில்லுகள் வைத்து தொழிலை விருத்தி செய்தால் 30000 தோழர்கள் ஜீவிப்பார்கள். காஞ்சி தோழர்களின் வேலையில்லாத்திண்டாட்டமும் ஒழித்து கவலையற்று வாழ்க்கையை நடத்துவார்கள. காஞ்சியில் இரண்டு வருடகாலமாக சைவர்களும், பார்ப்பனர்களும் சாமியின் பெயரால் பொம்மைகளுக்கு வெள்ளி ரதங்கள் செய்து வருகிறார்கள். வெள்ளி ரதங்களுக்காக வசூல் செய்த பணங்களையும் எப்பம் விடுகின்றனர். காமாக்ஷி அம்மன் கோவில் கட்டுவதற்காக தோழர் சங்கராச்சாரி அவர்கள் தேவஸ்தான மானேஜருக்கு 10000 ரூபாய்கள் வரை அனுப்பி வைத்ததாயும் அதில் கணக்கற்ற ரூபாய்கள் வரை ஒரு சிலர் தாசி வீட்டிற்கும் தமது வீட்டிற்கும் செலவு செய்ததாக வதந்தி உலாவு கிறது. தோழர்களே காமாக்ஷிக்கு சக்தி யிருக்கிறதா. யோக்யதை யிருக்கிறதா. காமகோடி பீடம் என்பதற்கு அருத்த மிருக்கிறதா. யோசித்துப்பாருங்கள். இப்படியே எல்லா தேவஸ்தானங்களிலும், பார்ப்பனர்களும், குருக்கள் என்கின்ற ஆதிசைவர்களும் சற் சூத்திரர்களென்று பார்ப்பனர்களால் அழைக்கப்படுகிற நய வஞ்சக சைவர்களும் கொள்ளை கொண்டு போகிறார்கள். எந்த சாமியும் பிடித்துக் கொடுத்து விட்டதாகத் தெரியவில்லை. ஆதலால் தொழர்களே இனி கற்பிதவெரும் சொற்களாகிய கடவுள், ஆன்மா இவ்வித பித்தலாட்ட சொற்களை வாயில் கூட உச்சரிக்காதீர்கள்.

### காஞ்சி ஆஸ்திகர்களின் செய்கை.

காஞ்சியிலிருக்கும் ஆஸ்திகர்கள் ஒன்று சேர்ந்து ஒற்றுமையுடன் இன்சால்வெண்டு போடுகிறார்கள். ஏழைகளால் சம்பாதித்த பணங்களைக் கொண்டு கல்லுக்கும், செம்புக்கும் கட்டைக்கும் உற்சவத்தின் பெயரால் லட்சக்கணக்கான ரூபாய்களை பாழ்படுத்துகிறார்கள். உற்சவம் செய்து மீதி இருந்த பணங்களை தாசி வீட்டிற்கு வாரி இறைக்கின்றார்கள். கோர்ட்டுக்கும், வக்கீலுக்கும் செலவு செய்கிறார்கள்.

இறுதியாக சிலவிஷயங்களைக்கூறி முடித்து விடுகிறேன். உலகத்திலிருக்கும் கோயில்களை எல்லாம் பிடித்து ஆஸ்பத்திரிகளாகவும் கலாசாலைகளாகவும், விஞ்ஞான சாஸ்திர பாடசாலை களாகவும் கைத்தொழிற் சாலைகளாகவும், கட்டுதல் வேண்டும். உலகத்திலிருக்கும் இயற்கை, செயற்கை பொருள்கள் யாவும் உலகத் தோழர்களுக்கு பொதுவுடமையாக அனுபவிக்கஉரிமை யிருத்தல்வேண்டும்- உலக ஆஸ்திக பூண்டுகளை அடியோடு ஒழித்தாக வேண்டும்- நாஸ்திக ஜில்லா மகாநாடுகள் ஆங்காங்கு நடைபெறவேண்டும்- கடவுள் என்றபதத்தை அகராதியினின்று எடுத்துவிட வேண்டுமென்பதோடு மறுமுறையும் தோழர்களான உங்களை தைரியத்தோடு வரவேற்கின்றேன்.

—

## மதுரை சுயமரியாதைச் சங்கம்.

### மதமொழிப்புப்பிரசாரம்

ஷை சங்கத்தினுதரவில் 30-12-33 சனிக்கிழமை மாலை 6மணிக்கு தெற்குவாசல் ஆதிதிராவிடஸ்கூல் முன்னிலையில்கூடிய பொதுக்கூட்டதத்தில் "தீண்டாமையும், அதற்கு ஆதாரவாயிருக்கும் மதமும்" அழிய வேண்டும் என்றும் பொருள் பற்றி தோழர்களான பி. முத்திருளாண்டி, எம். அய்யாசாமி, கே. ஐ சுக்குனி, எம். பட்டணம் முதலியவர்கள் பேசினார்கள்.

### அனுதாபக்கூட்டம்.

2-1-34ல்சங்கக்கட்டிடத்தில் தோழர் வ. தி. சங்கர லிங்கம் தலைமையில் கூடிய அனுதாபக்கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறியது.

நமது சங்கத்துக் கமிட்டி மெம்பரும் நாடார் தர்ம வித்தியாசாலையின் கமிட்டி மெம்பரும் தீவிர சுயமரியாதைக்காரருமான தோழர் கா. ஆ. காத்தையா அவர்கள் 31-12-33ல் தனது 22வயதில் திடீரென காலஞ்சென்றதைக் குறித்து இச்சங்கம் தனது அனுதாபத்தை அவரின் குடும்பத்தாருக்குத்தெரிவித்துக் கொள்ளுகிறது.

### மத மொழிப்பு பிரசாரம்.

3-1-34ல் சங்கக் கட்டிடத்தில் மாலை 7மணிக்குமேல் மார்க்கெட் ஆதிதிராவிடஸ்கூலுக்குச்சமீபம்கூடியபொதுக்கூட்டத்தில் "தீண்டாமையும் அதற்கு விரோதமாயிருக்கும் மதமும் ஒழியவேண்டும் என்னும் பொருள்பற்றியும்" தீண்டாமை விலகுச்சங்கத்தாரின் பிரசாரமும் வேலைத்திட்டமும் ஜாதி வித்தியாசத்தை நிரந்தர மாக்க ஏற்பட்ட சூட்சி என்பதைப்பற்றியும் தோழர்களான எம். அய்யாசாமி வ. தி. சங்காலிங்கம், கே. ஐ. சுக்குனி முதலியவர்கள் பேசினார்கள் என்று காரியதரிசி அறிவிக்கிறார்.

—

## திருவாரூர் பீரிதிங்கர்ஸ் அசோசியேஷன்.

4-1-34 மாலை 5-30-க்கு மேற்படி சங்கத்தின் கூட்டம் தோழர் ஆர்- ரெத்தின சபாபதி அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது-

அதுகாலை தோழர் எஷ்- பழணிவேல் அவர்கள் "கார்த்தீயம் ஒழிய வேண்டியது ஏன்" என்பது பற்றியும், தஞ்சை தோழர் டி- எஷ்- ராமலிச்கம் அவர்கள், பொதுவுடமை என்றால் என்ன என்பது பற்றியும், தோழர் எஸ் ராமமூர்த்தி அவர்ள், "நமது கடமை" என்பது பற்றியும் விரிவாகப் பேசினார்கள்- முடிவாக தலைவர் இவைகளை ஆதாரித்துப் பேசியபின் கூட்டம் முடிவுற்றது-

### தீர்மானம்.

தோழர் ஆர்- தியாகராஜன் அவர்களுக்குப்பதிலாக தோழர்எஷ்- வி. மணிவேல் அவர்களை மேற்படி அசோசியேஷன் உபத்தலைவராக இக்கூட்டத்தில் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப் பட்டது-

(ஒரு நிருபர்)

—

# Significance of the Atheist Conference.

## நாஸ்திகர் மகாநாட்டின் கருத்து.

[ஓர் சமதர்மி]

இந்திய தேசத்திற்குச் சென்றவாரம், சென்னையில் கூடிய நாஸ்திகர் மகாநாடு, இணையில்லாத ஓர் பெருத்த சம்பவமென்றே கூறல்வேண்டும். நமது தேசத்திற்கே இதுவோர் விசேஷ காலமென்றே மதிக்கலாம். இனி வரும் சரித்திரக்காரர்கள் இந்த முதல் மகாநாட்டை, இந்தியாவை முன்னேற்றம் அடையச் செய்யும் விசேஷ செய்திகளில் ஒன்று எனக் கூறுவதற்குச் சந்தேகமில்லை. இந்த நாஸ்திகர் கூட்டத்தின் மேல் மனித அறிவுக்கெல்லாம் மேன்மையான பகுத்தறிவு, இனி பொது மக்கள் மனதில் வலிவுறும். மூட நம்பிக்கைகள் இந்திய மக்களைவிட்டொழியவும், பகுத்தறிவு யாவர் உள்ளத்திலும் பதியவும் இந்த நாஸ்திகர் மகாநாடுகூட்டியதின் முக்கிய கருத்தாகும். அதனால் மக்கள்வாழ்க்கை உயரவும் நேற்றுக் கூடிய நாஸ்திகர் கூட்டத்தார்களால் பலமான அஸ்திவாரம் போடப்பட்டது. திரள் கொண்ட மக்கள் மகாநாட்டிற்கு விஜயம் செய்ததிலிருந்து எவ்வளவு பொது மக்களுக்கு இந்த இயக்கத்தில் மன எழிச்சி இருந்து வருகிறதென்பது நன்கு விளங்குகிறது. இவ்வளவு ஆதரவு தமிழ் நாட்டுப் பொது மக்களிடமிருந்து வருமென்று இந்த மகாநாட்டை உண்டாக்கிய நாஸ்திகர் எண்ணியிருக்கமாட்டார்கள். ஆனால் ஆழமாக ஆராய்ந்து பார்த்து வருகின்றவர்களுக்கு நாஸ்திகம் தமிழ் நாட்டில் ஆழமாகப் பரவிவரும் வேகம் தோன்றாமலிராது. இவ்வளவு அருமையான காரியத்தை உண்டாக்கியதற்கு நமது "குடி அரசை"யும், அதன் பத்திராதிபரையும் "வாழ்க வாழ்க பல்லாண்டு வாழ்க" என நமது நாடு முழுமையும் கூறுமென நம்புகின்றோம்.

இந்தியா நாடு முழுமையும் பகுத்தறிவின்றி அந்தகார இருளில் இருந்து வருவதை நமது நாட்டைப்பார்த்தவர்கள் யாவருமே கூறிவருகின்றார்கள். பிறந்தது முதல் இறக்கும்வரை இறந்த பிறகும்கூட இந்தியருடைய வாழ்க்கை மூடப் பழக்கத்திலும், மூட நம்பிக்கையிலும் மூழ்கிக் கிடந்து வருகின்றது. பிறந்த நாள் கரிநாளாய! சர்ப்பம் தரித்த நாளும் கெட்ட நாளாம்! இறந்த நாளும், ராகுகாலமாம்!! கோடான கோடி உயிர்கள் நிமிஷத்திற்கு நிமிஷம் பிறந்து இறக்கின்றன. ஆனால் மனிதனுக்கு மாத்திரம் கரி நாளாம்! அமங்கள நாளாம்! ஏதோ சந்தர்ப்பத்தில் கோடானகோடி குடும்பங்களில் ஒன்றில்மாத்திரம் ஏதாகிலும் கெடுதி நேரிடின் பிறந்தவன்மேல் பழிசுமத்தி அவனைக் கொன்றும் வந்திருக்கின்றார்கள். இந்த மூடத்தனத்தைப் போக்கி, மன இருளை நீக்கி வெளிச்சத்தைக் காட்டும் ஸ்தாபனங்கள் நமது நாட்டில் நாஸ்திகத்தைத் தவிர யாதொன்றுமில்லை எனச் சந்தேகமறக்கூறலாம். கொடூரபலிகளை நிறுத்த முயன்றோர் யாரெனக் கேட்கின்றோம்? நோய் வந்தகாலையில் மருந்தொன்றும் கொடுக்காமல் மந்திரங்களைச் செய்வோருடைய மூடமதியினைப்போக்கவும், பாடுபட்டு வருகின்றவர்கள் யாரெனவும்வினவுகின்றோம்? நாஸ்திகர் அல்லாமல் வேறு யார்? உலக முழுமையுமே மதக்கொடுமைகளையும், குருக்களின் கொடுமைகளையும் வேரறுத்து வருவது நாஸ்திகர் அல்லாமல் வேறு யார்? தள்ளாதவர்களை கங்கையில் அமுழ்த்தி சாகவைப்பதை நிறுத்தியது யாரெனக்கேட்கின்றோம்? மதங்களின் மூடநம்பிக்கையில் நம்பிக்கை யற்றவர்களாலன்றோ! பிரசவத்தில் ஜன்னி பிறந்தவனை அடித்துக்கொல்லாமல் நிறுத்தியதுயார்? இத்தியாதி கொடுமைகளால் கஷ்டப்பட்டு வருகின்ற மக்கள், நமது இந்தியாவில் இன்னமும் லட்சக்கணக்காக இருந்து வருகின்றனர்? இந்தக்கொடுமைகள் முழுமையும் நிறுத்தமுடியாவிடினும் குறைக்கவாவது, நாஸ்திகனைத் தவிர எந்த இந்தியகோஷ்டியார் முன்வந்துள்ளார்கள். சென்ற டிசம்பர் மாதத்தில் இந்தியாவில் கூடிய பல மகாநாடுகளில், நமக்கு தெரிந்தவரை யாரும் இக்கொடுமைகளை விலக்கும் சம்பந்தமாக எதுவும் பிரஸ்தாபிக்கவில்லையே! நாஸ்திகக் கூட்டத்தைத் தவிர மற்றவர்களால் கூடிய மகாநாடுகள் யாவும் ஆஸ்திகர் மகாநாடுகளே!! அப்படியிருந்தும் இந்திய உலகம் பட்டுவரும் மதக் கொடுமைகளைப் பற்றஎந்தமகாநாடும்பேசவில்லை!!!

### மதங்களின் அசட்டை.

மதங்களின் அசட்டை ஒரு பக்கமிருக்கட்டு, ஸர்க்கார் அசட்டை இன்னொருபக்கம் இருக்கட்டும் பொதுஜன வாக்கென்ற இந்திய பத்திரிக்கைகளும், அவைகளின் பத்திராதிபர்களும் மூடப்பழக்கங்களால் விளையும் தீமைகளை நன்குணர்ந்தும் இக்கொடுமைகளை எடுத்துக்காட்டி மக்களை அவைகளிலிருந்து விடுவிக்கப் பாடுபடாத விஷயம் மிகவும் வருந்தத்தக்கது. மூடப்பழக்கங்களை நம்பாதவர்களும், மூட மதக்கோட்பாடுகளை நம்பாதவர்களும், அதாவது Heretics நம்பாதவர்களென்று வழங்கும் நாஸ்திகர்களால் மத சீர்திருத்தங்களும், மூட நம்பிக்கை சீர்திருத்தங்களும் செய்யப்பட்டு வருவதாகக் காண்கின்றோமே ஒழிய மதங்களை ஆதரிக்கும், ஆதரித்து வரும் பத்திராதிபர்களால் மதசம்பந்தமான எந்தவித சீர்திருத்தமும் விளைந்ததைக் காண்கிலோம். சிசு கொலைநிறுத்திய போதும் உடன் கட்டையை குற்றமாக்கியபோதும் "மதம் அழிந்தது, மதங்களுக்கு அழிவு நேரிட்டதென்று" சில பத்திரிக்கைகள் ஊளையிட்டன! நேற்று சாரதாசட்டம் நிறைவேறியபோதும், எத்தனை பத்திரிகைகள் அதற்கு விரோதமாகக் கூக்குறல் போட்டன! அந்த சட்டத்தை ஆதரித்த பத்திரிகைகள் மிகவும் குறைவே. எச் சீர்திருத்தத்தையும், மானுஷீகத்திற்குப் பொருந்திய எந்த நடவடிக்கையையும் ஒரேசீராக ஆதரித்து வந்தவர்கள், நாஸ்திகர்கள ஒருவரே. நேற்று நடந்த மாபெரும் உலகப் போரை எதிர்த்து வாதித்துவந்தவர்கள் நாஸ்திகர்களே யாவார்கள். மிதவாத சமதர்மிகளும், இந்தவிஷயத்தில் நழுவி விட்டனர்!

வேதாந்தம் முதலிய மூடத்துவங்களை எதிர்த்து வருகின்றவர்களும், நாஸ்திகர்களே. மதங்கள் மூட மக்களுக்கு ஏற்பட்ட போதைவஸ்து என்றார்கள் ரஷ்ய சமதர்மிகள். ஆனால் படித்தவர்களுக்கு ஏற்பட்ட போதைவஸ்து வெறு தத்துவங்களை நாஸ்திகர்கள் கூறுகின்றார்கள். தத்துவங்களால்வீண் காலப்போக்கேயொழிய பயன் ஒன்றையும்காணோம். வேதாந்தம் பேசுவதால் உலகிற்கு எவ்விதப்பயன் விளைந்தது? கைப்புல்விளைந்த இடத்தில் இரண்டு கைப்புல் எந்தகாலத்திலாகிலும் வேதாந்தத்தால் விளைந்ததா? இல்லை எனில் அத்தனைக்குப் பையில் தள்ளவேண்டுமென்பான் நாஸ்திகன். பகவத்கீதையால் மகாபாரதயுத்தம்நிகழ்ந்தது வடநாடுமுழுமையும் நாசமாயிற்றென்றால் வேதாந்தத்தின்கொடுமையைசொல்லவும் வேண்டுமா? இக் கொடிய தத்துவத்திற்கு மூன்று பிரபல வியாக்கியானிகளும் அனந்தாயிரம் தத்துவஞானிகளும் விரித்துரை எழுதினார்கள். இந்த மதிமயக்கை எடுத்துக் காட்டியதற்கு நாஸ்திகரைத்தான் உலகம் நமஸ்கரிக்கவேண்டும். இதுவெல்லாம் போகாமல் அகிம்சை குருவாகிய நமது காந்தியாரும் பகவத்கீதையை தலையணையாக வைத்துக் கொண்டு அதன்மேல் தலையை வைத்துக் தூங்குகின்றாரென்றால் [It is Simply hopeless] அதாவது இந்திய உலக விமோசனத்திற்கு அவர் மூலமாக வழியொன்றுமே இல்லை. இதனை விளக்கி எடுத்துரைத்தவர்கள் நாஸ்திகர்களே.

உலக வாழ்க்கையைத் துக்கத்தினின்று விடுவிக்க இவ்வுலகந்தான் அதற்கு ஆதாரவு. மேலுலகமென்று சொல்லப்பட்ட வானுலகம் கற்பிதமென்று விளக்கியதும் நாஸ்திகமே. நாஸ்திகர்களால்தான் அருளில்லாதற்கு அவ்வுலகமில்லை என்று வழங்கிவரும் சொல்லும் கற்பனை என்று விளக்கமடைந்தது. மதங்களால் மாந்தர் ஆகாயத்தை நோக்கிவந்தனர். ஆனால் நாஸ்திகத்தால் மக்கள் பூமியை நோக்குகின்றார்கள். மழை பெய்ய வேண்டுமென்று வருணனைச் சிந்திக்கக் கற்பித்தது மதம். ஆனால் பூமியை நன்றாக உழச் சொல்கின்றது நாஸ்திகம். ஆஸ்திகம் மனிதனை சக்தியற்றவனாக்கியது. ஆனால் நாஸ்திகமோ சுய முயற்சியைப் பலப்படுத்தியது. இவ்விதமாகச் சுய முயற்சிக்கும், சுயமரியாதைக்கும், சுய உதவிக்கும் துணையாக இருந்து வருகின்றதும் நாஸ்திகம். இதனைப் பழிப்பாரும் உலகில் யாரேனும் உளரோ.

மதங்கள் கூறும் நீதிபதிகள் தற்காலத்திற்குப் போதாதெனக் காட்டிவருவதும நாஸ்திகந்தான். உலக வீண்செலவுகளைக் குற்றமென்று பார்க்கச் சொல்வதும் நாஸ்திகந்தான். ஆதிகாலங்களில் போதுமென்று எண்ணிவந்த கட்

தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க.

புரட்சி

ஈரோடு 1934-ஜனவரி மீ 7-உ

## நாஸ்திகர் மகாநாடு.

(ஈ. வெ. கி.)

சென்னையில் நாஸ்திகர் மகாநாடானது சென்ற டிசம்பர் மாதம் 31-தேதி கூட்டப்பட்டது. இது நமது நாட்டிற்கே ஒரு புதுமையானதும், மக்களுக்கு ஒருவித புத்துணர்ச்சியை உண்டுபண்ணக்கூடியதுமாகும்.

நாஸ்திகமானது தற்காலம் இன்னாட்டிற் சிலருக்கு மட்டில் புதுமையெனத் தோன்றுமாயினும் இது தொன்றுதொட்டே இருந்து வந்திருப்பதாக நம்மவர்களின் புராண இதிகாசங்களால் விளக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக இராமாயணகாலத்திலும் நாஸ்திகம், கதாநாயகனை ராமனுக்கு உபதேசிக்கப்பட்டதாகவும், அவன் மறுத்துவிட்டதை யறிந்த உபதேசிகள் அதற்கு அவனின் இளமைப் பருவந்தான் காரணமென்றறிந்து பிறகு கொஞ்சகாலஞ் சென்று வாசிட்டம் என்கிற முறையில் உபதேசிக்கப்பட்டதாகவும், அவனும் அதை மறுக்காமல் ஒப்புக்கொண்டதாகவும் ஒரு அத்தாட்சி காணப்படுகிறது.

மற்றொரு உதாரணம் என்னவென்றால் தேவேந்திரனென்பவன் தனது லௌகீக அலுவல்களை விட்டுவிட்டு வைதிக மார்க்கத்தை அனுஷ்டித்து வந்த சமயத்தில் அவனது நாடும், நாட்டுக்காரியங்களும் குன்றி வருகிறதைக் கவனித்து வந்த அவன் குருவாகிய வியாழன் [பிரகஸ்பதி] என்போன் தனது சீடனை இந்திரனுக்கு நாஸ்திகத்தை உபதேசித்து அவனது ராஜபத்தையும், ராஜ்ய காரியாதிகளையும் சிறப்புடன் நடத்தி வரச்செய்ததாகவும் காணப்படுகிறது.

ஆகையால், இது வெகுகாலமாக ஒரு சிறு சுயநலக் கூட்டத்தவர்களால் தங்களின் வாழ்க்கை நலன்களுக்காக மறைத்து வைத்து, அதற்குப் பதிலாகத் தங்களுக்கே பலன் தரத்தக்க முறைகளுக்குட்பட்ட வகுப்பு வேறுபாடுகளுக்கும், மத வேறுபாடுகளுக்கும், ஏழை பணக்கார வித்தியாசங்கள் முதலியவைகளுக்கும் வேண்டிய வகைகளைக் கொண்ட ஆஸ்திகதத்துவத்தைக் கூறும் நூல்களைக் கற்பித்து அப்போதிருந்த அரசர்களைத் தங்கள் வசப்படுத்தி சட்டங்களையும் அதுகளுக்கு அநுசாரணையாக ஏற்படுத்தி நமது மக்களை அடக்கி ஆண்டு வந்திருக்கிற காரணங்களின் முதிர்ச்சியினால் தான் இது புதுமையென்பதில் ஆச்சரியமேயில்லை.

இம்மகாநாட்டிற்கு விஜயம் செய்திருந்த மக்களில் பெரும்பான்மையோர்கள் யாரென்று பார்த்தால் அவர்கள் தமிழில் பண்டிதத் திறமை வாய்ந்தவர்களேயாகும். பண்டிதத் திறமையை இதிற் குறிப்பிடவேண்டியதெதற்காக வென்றால், தற்போதுள்ள தமிழ் பாண்டித்யத்தில் தான் மதம், ஜாதி, கடவுள் என்கின்ற குறைபடா நம்பிக்கையை அலசாமல் முழுசு முழுசாகப் புகுத்தப்பட்டிருக்கிறகாரணத்தால் அவைகளைத் தங்கள் பால் மணம் மாறிய சிறு வயது முதல் கொண்டு 20—30 வருடம் வரையாவது படித்துப் படித்து தங்கள் தங்கள் மனதிலும் [இன்னம் சொல்லுங்கால்] ரத்தம், நாடி, நரம்பு, எலும்பு, தசை, தோல் முதலியவைகளிலுங்கூடப் புகுத்திப் பதிய வைத்திருப்பவர்களின் கூட்டத்தில் தேர்ச்சியடைந்தவர்களின் தன்மையைத்தான் பண்டிதத் திறமை என்பார்கள். இத்தகைய திறமைவாய்ந்தவர்களே இம்மகாநாட்டில் முக்கியமாக கூடியிருந்ததும் பங்கெடுத்துக்கொண்டதும் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். இதைக்காட்டிலும் மற்றொரு விசேடம் என்னவென்றால் பெண்மக்கள் விஷயம், இவர்களிலும் பண்டிதைகளானவர்களே பெரும்பான்மையானவர்கள் என்றால் இந்தமகாநாட்டின முன்னேற்றங்களில் இதைவிட வேறு என்ன முற்போக்கான அறிகுறி வேண்டும்? இம்மகாநாட்டைகூட்டியதினின்று மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் புத்துணர்ச்சியின் காரணமாக இதுமுதற் கொண்டாவது தங்கள் தங்கள் வாழ்நாட்களை அழித்துவரும் மூடநம்பிக்கைகளையும், அடிமைப் புத்தியையும் மூடப்பழக்க வழக்கங்களையும் ஒழித்துதன்னம்பிக்கையையும், தன்மதிப்பையும், தன்முயற்சியையும் பெற்றுதன்னைப்போல் பிறரையும் நேசித்து, சகோதரத்துவத்துடனும், சமத்துவத்துடனும், சுதந்தரத்துடனும் வாழ இடமுண்டாவதுடன் பொருளாதார விஷயத்திலும் அனுவசியமாக நேரங்களையும், பணங்களையும் வளக்கங்களையும் உழைப்புகளையும் விரயமாக்காமல் மக்கள் வாழ்க்கைக்குப் பலன் தரும்வழிகளில் உபயோகப்படுத்தி வாழ்வார்களென்று நம்புவதற்கு அறிகுறிகளான ஷை மகாநாட்டின் தீர்மானங்களே போதிய சான்றாகும். அதாவது முதல் தீர்மானத்தில் "மனித ஒற்றுமைக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் பெருந்தடையாயிருப்பது கடவுள் நம்பிக்கையும் அதிலிருந்து ஏற்படுகிற மத சம்பிரதாயங்களுந்தான் என்று இம்மகாநாடு நிச்சயமாக உணர்வதால் மனிதர் தன்னம்பிக்கையோடும், தன் முயற்சியோடும் முன்னேற்றமடைய வேண்டில், கடவுள் நம்பிக்கையை பூரணமாக ஒழிக்க வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது" என்பதாகும். இத்தீர்மானமானது நடைமுறைக்கு வரும்போது மனிதர்களுக்குள் ஒற்றுமை நிலவிவரும். அப்போது சமூகமானது முன்னேற்றமடையும் என்பதும் இவைகளைத் தடுத்துவருவது "கடவுள்" நம்பிக்கை என்பதும் காணப்படுகிறது. அக்கடவுளின் நம்பிக்கை அமையவேண்டி மத சம்பிரதாயங்கள் வேண்டியிருக்கின்றதென்றும் ஏற்படுகிறது. எப்படியென்றால் கடவுள் என்கிற ஒரு கற்பனைக்கு ஆசைப்படும்படியாகவும், ஆதாரமாகவும் காட்டப்படுகிற பயங்களாகிற மறுஜன்மம், மோக்ஷம், சுவர்க்கம், நரகமுதலியவைகளோ சாஸ்திரபுராண இதிகாசங்களாகிற நூல்களால் ஏற்படுகிற சம்பிரதாயங்களே காரணமாகிறபடியாலும், அப்படிப்பட்ட மத சம்பிரதாயங்களே மக்களுக்குள் உயர்வுதாழ்வுகளைக் கற்பிப்பதால் ஒற்றுமைக்கு வழியற்று வேற்றுமைகளைக் கிளப்பிவிடுவதால் வேற்றுமைப்பட்ட பிறகு மனிதர்கள் முன்னேற்றமும் சிதைவுறுவதாலுந்தான் இப்படிப்பட்ட கெடுதல்களுக்கு மூலகாரணமாகிற "கடவுள்" நம்பிக்கை ஒழிய வேண்டுமென முதல் தீர்மானம் வற்புறுத்துகிறது. இது இடைவிடாது நிலவி நீடித்து மக்களுக்குப் பயனளித்தல் வேண்டுமென்கிற ஆர்வத்துடனேயே தான் அதற்குத் தகுதியுடைய இளைஞர்களுக்குள் இத்தீர்மானம் முதிர்ச்சியுற வேண்டுமென்றும் அதற்கிடையூறுகளாக, தாக்காலிக பள்ளிப் பாடப்புத்தகங்களில் ஷை இன்னல்களைப் புகுத்தாவண்ணம் பிரசாரம் செய்யவேண்டுமென்றும் இரண்டாவது தீர்மானம் கூறுகிறது. இவைகளுக்கெல்லாம் விரோதமாக நடந்து வரும் காரியத்தை மூன்றாவது தீர்மானத்தால் கண்டித்து, இவைகளைப் பின்வரும் மக்களும் அனுஷ்டித்து ஒழுகுமாறு ஒரு சங்கத்தை ஸ்தாபித்து நடத்திவர வேண்டுமென்று நான்காவது தீர்மானத்தினால் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

இன்னும் இதைக் குறித்துச் சொல்லப்புகுங்கால் இம்மகாநாட்டைக் கூட்டியவர்கள், இதைத் திறந்துவைத்த திறப்பாளர், இதை நடத்திவைத்த தலைவர், தீர்மானங்களைக் கொண்டுவந்தவர்கள் முதலியோர்களின் தன்மை முதலியவைகளைக் கவனித்தால் இம் மகாநாட்டின் ஏற்றம் இப்படிப்பட்டதென விளங்கும்.

அதாவது இம் மகாநாட்டை கூட்டுவிக்க முயற்சி எடுத்துக்கொண்டவர்களான தோழர் அ. பொன்னம்பலம், தோழர் ப. ஜீவானந்தம் ஆகிய இருவரும் மேற்படி மகாநாட்டுக்குக் காரியதரிசிகளாக அமைந்து எடுத்துக்கொண்ட முயற்சிக்கும், சிரமத்துக்கும் அளவே இல்லை. இவ்விருவரும் தமக்கு எல்லாவற்றையும் விட மக்கள் முன்னேறுவதே பெரும் பயனாகக்கருதி, அதற்காகவே தங்கள்மனதும், வாக்கும், உழைப்பும் பயன்படல் வேண்டுமென்கிற ஓரே ஒரு உட்கருத்துக் கொண்டு தன்னலம் சிறிதும் பாராமல் முக்காலங்களிலும் உழைத்து வரவேண்டுமென்கிற விரதம் கைக்கொண்டொழுகும் குணமும் ஆசையும், சக்தியும், உழைப்பும் வாய்க்கப் பெற்றவர்கள் ஆவார்கள் என்பதை நமது சுயமரியாதை உலகம் நன்கறிந்திருக்குமென்றால் நாம் வேறு சொல்லவேண்டியதென்ன இருக்கிறது.

அடுத்தபடியாக மகாநாட்டைத் திறந்துவைத்தவர் யாரெனில் தோழர் நீலாவதி அம்மையார். இவரின் பெருமையும், வீரமும், தன்மையும், சொல்வன்மையும், தன்னலங் கருதா உழைப்பும், இன்னம் மற்ற அவரது குணாதிசயங்களும் நாம் எடுத்துச்சொல்லாமலே விளங்கக்கூடிய பெருமை வாய்ந்தவர்களாவார்கள். இம் மகாநாட்டுக்குத் தலைமை வகித்து இம் மகாநாட்டை வெற்றிகரமாக நடத்திவைத்த பெரியார் தோழர் ம. சிங்காரவேலு அவர்களைபபற்றியோவெனில் அவர்

ஆராய்ச்சியிலும், அனுபவத்திலும், வயதிலும், முதியவர் என்றாலும் ஆராய்ச்சியின் பலன்களையும், அனுபவத்தின் பலன்களையும் மற்ற உயரிய விஷயங்களையும்மக்களுக்குப் பயன்படுமாறு செய்விப்பதிலும் களைப்பு, சலிப்பு, பயம் பின்வாங்கல் முதலியவைகளைக் கனவிலும் கண்டிராத ஒரு இளைஞரை ஒத்தவராவார். இப்படிப்பட்டவர்களால் நடத்தப்பெற்ற மகாநாட்டின் சிறப்பும், பலன்களும் எப்படி அமைந்திருக்கும் என்பதை நாம் கூறவேண்டியதில்லை. ஆகையால் சாதாரணமாக உலகில் கடவுள் உண்டாயிருந்தாலும் இல்லாதிருந்தாலும் நாஸ்திகம் என்கிற சொல் உச்சரிக்கும் போதே ஜனங்களுக்கு ஒரு விகமான வெறுப்பும், கோணுதலும் ஆன மனப்பான்மை உண்டாவது வழக்கமாக இருந்துவந்ததை, இம் மகாநாட்டைக் கூட்டுவித்து நடத்திவைத்துக் கொடுத்தவர்களால் மனித முன்னேற்றத்துக்கு எதிர்தட்டான எவையும் ஒழித்தாகவேண்டும் என்பதும் அப்படிச்செய்வது நீடித்துவரும் வகையை ஊக்கத்துடன் தெரிந்து நடத்தப்படவேண்டும் என்றும் அது மக்களைவிட இளைஞர்களுக்குத்தான் முக்கியமானதாகக் கருதி அவர்களுக்கு பாட புத்தகமூலம் ஏற்படுகிற இன்னல்களைக் களையும் வண்ணம் பிரசாரம் செய்யப்படவேண்டுமென்றும் இத்தகையவைகளுக்கு விரோதவர்க்கமான காந்தியத்தை ஒழிக்கவேண்டுமென்கிற கருத்துக்கொண்டதும் மக்களின் முன்னேற்றமே பலனுகவும் கொண்ட இம் மகாநாட்டின் கருத்துக்களால் மாற்றிவிடப்பட்டதென்றே சொல்லுவோம். மேலும் நாஸ்திகம் என்கிற சத்தத்தைக் கேட்டபோதே ஜனங்கள் தங்களை பொய், களவு, சூது, கொலை முதலிய குற்றங்களுக்கு மேல் செய்துவிட்டவன் வருந்துவதுபோல் கஷ்டப்படுபவர்களான நம் மக்கள் இம் மகாநாட்டின்போது கலந்துகொண்டு தாங்களும் அங்கத்தவர்களாகச் சேர்ந்து உழைக்க முன்வந்துள்ளவர்கள் எனில் அதற்கு மூல காரணம் இன்னதென்பது யோசித்துப் பார்ப்பவர்களுக்கு விளங்காமற் போகாது. ஆகவே இத்தகைய மகாநாடுகள் நமது நாட்டில் ஆங்காங்கு நிறுவி மக்களின் அறியாமையைப் போக்கி மக்களுக்குப் பயன்பட்டு வரும் முறைகளில் வேண்டியவைகளை அறிவித்தும், தீர்மானித்தும் நடைமுறையில் நடந்தேறும்வண்ணம் செய்வித்தும் வருவது அத்தியாவசியமாகும்.

## வருந்துகிறோம்.

ஜோலார்ப்பேட்டை பிரபல கண்டிராக்டர் தோழர் வரதராஜலு [முதலியார்] அவர்கள் 5—1—34ல் காலமானர் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம். இவர் வயோதிக வாழ்க்கையினராலும் ஐதிகத்தையே பின்பற்றிவிடாது காலப்போக்கின் உயரிய தன்மையை உணர்ந்து நமது 'சமதர்மம்' போன்ற லக்ஷியங்களைப் போற்றியதோடு அதற்காக நின்று தொண்டாற்றிய தோழர்களைப் பெரிதும் ஊக்கமூட்டிப் பேராதரவு நல்கிய வராவார். மற்றும் நமது இயக்கத்திற்கு உறு துணையாக நின்று சீரிய ஊழியம் செய்ய தோழர் வி. பார்த்தசாரதி அவர்களை நமக்கு 'தத்தம்'செய்துள்ள சிறப்பாளருமாவார். இத்தகைய பெரியார் மறைந்ததற்காக இயற்கையை செவ்வனே உணர்ந்த தோழர் வி. பார்த்தசாரதி அவர்களுக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கும் எவ்வித ஆறுதலும் தேவையில்லை என்றே நம்புகிறோம்.

---

## கோவையில்

### தோழர் ஈ. வெ. இராமசாமி வழக்கு.

தோழர். ஈ. வெ. இராமசாமி அவர்களின் மீதும், "புரட்சி" பிரசுர கர்த்தாவும் பதிப்பாளருமான தோழர் எஸ். ஆர். கண்ணம்மாள் அவர்கள் மீதும் 124-ஏ செக்ஷன் படி தொடரப்பட்டிருந்த வழக்கு விசாரணைக்காக கோவை ஜில்லா மாஜிஸ்டிரேட் கனம் வெல்ஸ் ஐ. சி. எஸ். அவர்கள் கோர்ட்டில் 4-1-34ல 11-மணிக்கு விசாரணையை எடுத்துக்கொண்டார். விசாரணையை கவனிப்பதற்கு பல இடங்களிலிருந்து சுயமரியாதைத் தோழர்கள் பலர் விஜயம் செய்திருந்தார்கள்.

தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்களுக்கு ஆஜரான வக்கீல் தோழர் நஞ்சுண்டையா அவர்கள் காப்பி அப்பிளிக்கேஷனுக்காகத் தான் விண்ணப்பம் போட்டிருப்பதாகவும், அது இன்னும் கிடைக்கவில்லையென்றும் எனவே வாய்தா வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். இருதரப்பாரையும் கலந்து ஆலோசித்து ஜனவரி மாதம் 12-தேதிக்கு வழக்கை ஒத்தி வைக்கப்பட்டது.

ஜெயிலில் எழுதுவதற்கும், படிப்பதற்கு வசதிகள் இல்லாமல் இருப்பதால் ஷை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்களின் சார்பாக வக்கீல் தோழர் நஞ்சுண்டையா மாஜிஸ்திரேட்டைக் கேட்டுக்கொண்டதற்கு அதற்கு வேண்டியதைச்செய்வதாக மாஜிஸ்திரேட் கூறினர். மற்றும் பழைய குடி அரசு பத்திரிகைகளைப்பார்த்து டிபன்ஸ்தரப்பில் வாதிப்பதற்கு வேண்டிய யோசனைகள் கூறுவதற்காக ஜெயிலில் தோழர் இராமசாமி அவர்களுக்கு சௌகரியம் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டதற்கும் ஜெயில் சூப்பிரெண்டெண்டு இது விஷயமாக வேண்டியதைச்செய்யக் கூடுமென்றும், அது சாத்தியமில்லாமல் போனல் தன்னுடைய 'உதவி அவசியம் என்றால் பின்பு இதைப்பற்றி யோசிப்பதாக மாஜிஸ்திரேட் கூறினர்.

ஜாமீனிலிருக்கும் தோழர் S. R. கண்ணமாளும் அன்று ஆஜராகி இருந்தார்கள்.

வக்கீல் தோழர் நஞ்சுண்டையா அவர்களுக்கு உதவியாக வக்கீல்களான தோழர்கள் கோவை டி. டி. ஆர். பிள்ளை அவர்களும், ஈரோடு ஈ. வி. வேணுகோபால் அவர்களும் ஆஜராகி இருந்தார்கள். சேலம் அட்வகேட் எல். ஏ. அய்யாசாமி எம். ஏ. பி. எல்., அவர்களும், தாங்களாகவே யாரும் கோராமல் நமது இயக்கத்தின் பேரிலும் இயக்கத்தலைவர் பேரிலும் இருந்து வந்த அபிமானத்தின் காதியின் மேலீட்டால் வந்திருந்தார்.

தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்களை ஜெயிலிருந்து கோர்ட்டுக்குக் கொண்டுவரும்போது வண்டியிலும், கோர்ட்டிலிருந்து ஜெயிலுக்கு அழைத்துப் போகும்போது நடத்தியும் கூட்டிச்சென்றார்கள். தோழர் இராமசாமி அவர்களுக்கு உடம்பு சிறிது அசௌகரியமாக இருந்ததால் விசாரணை மெஜிஸ்திரேட் கோர்ட் மெத்தையில் ஏறும்போது சிறிது கஷ்டப்பட்டார். கோர்ட்டிலிருந்து சுமார் 1-மைல் தூரத்திற்கதிகமாக உள்ள ஜெயிலுக்கு நடந்துசெல்லும்போதும் கஷ்டப்பட்டார்.

---

## தோழர் ஈ வெ. கிருஷ்ணசாமி.

நமது ஆசிரியர் தோழர் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்களும் அவரது துணைவியார் தோழர் ஈ. வி. கே. ரங்கநாயகி அம்மாள் அவர்களும் சென்னையில் சென்ற டிசம்பர் மாதம் 31க்தேதியில் நடைபெற்ற சென்னை மாகாண நாஸ்திகர் மகாநாட்டிற்குச் சென்று விட்டு அங்கிருந்து ஜனவரி மாதம் 3க்தேதி காரில் புதுவை மார்க்கமாக ஈரோடு வந்து சேர்ந்தார். 4க்தேதி கோவையில் நடைபெற்ற தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களின் வழக்கைக்கவனிக்க கோவை சென்று அன்றிரவுஈரோடு வந்துசேர்ந்தார். மீண்டுக்கோவைக்கு 6க்தேதி சென்றுள்ளார்.

---

## காந்திக்கு 'எச்சரிக்கை'

### 'நீங்கள் வரவேண்டாம்'

### வங்க வாலிபர் வீரம்.

தோழர் காந்தி வங்காளத்திற்கு விஜயம் செய்கையில் அவரை வாலிபர்களும், மாணவர்களும், விவசாயிகளும், தொழிலாளரும் பகிஷ்கரிக்க வேண்டுமென வங்க வாலிபர் சங்கக் காரியதரிசி கையொப்பமிட்டு ஓர் துண்டுப் பிரசுரம் வெளியிட்டுள்ளனர். வங்காளத்தின் பல பாகங்களிலும் இப்பிரதிகள் வெகுவாக வினியோகிக்கப்பெற்றுள்ளது. இதன் மூலமாக தோழர் காந்தியை பல கேள்விகள் கேட்டுள்ளனர். விசாரணையின்றி சிறைபட்டுள்ள வங்கக் கைதிகளைப் பற்றியும், மீரத் கைதிகளைப்பற்றியும் தோழர் காந்தியை கேள்விகள் கேட்டுள்ளனர். வங்காளத்திற்கு தோழர் காந்தி வரவேண்டாமென அதில் முடிவாக எச்சரிக்கை செய்துள்ளனர். பலர் வேலையின்றி பட்டினி கிடந்து வாடுகையில் தோழர் காந்தி உபவாச சம்பந்தமாக ரூ. 16000 செலவிடப்பட்டதென்பது உண்மையா என்றும் கேட்டிருக்கிறார்கள்.

---

## விஸ்வகர்ம பொதுக் கூட்டம்

திருநெல்வேலி ஜில்லா விஸ்வகர்ம சமூக சீர்திருத்தச் சங்கத்தின் மகாஜனக் கூட்டம் பேட்டை பாண்டியபுரத்தில் தோழர் கே. அய்யாக்குட்டி ஆசாரி அவர்கள் தலைமையில் 3-1-34க் தேதி இரவு 8 மணிக்கு சுமார் 200 பேர்கள் வந்திருந்தனர். வீரவநல்லூர் தோழர் எ. முத்துகிருஷ்ணன் அவர்கள் சங்கீதம் பாடிய பிறகு பாளையங்கோட்டை தோழர் என். பரமசிவம் அவர்கள் சமூக சீர்திருத்தம் என்பது பற்றியும் பேட்டை வள்ளுவர் வாலிபர் சங்க காரியதரிசி, தோழர் சி. இசக்கி அவர்கள் கல்வி என்பது பற்றியும் டி: சீனிவாச ஆழ்வார் அவர்கள் அறியாமை என்பது பற்றியும், திருநெல்வேலி கோவாப்ரேட்டில் சொஸைடி இன்ஸ்பெக்டர் தோழர் எஸ். கணபதி அவர்கள் மேம்பட்ட வாழ்க்கை கூட்டுறவு சங்கத்தால் சமூகத்திற்கு ஏற்படும் நலன்களைப் பற்றியும் உபன்யாசம் செய்தார்கள். மேற்கண்ட சீர்திருத்த சங்கத்தின் தலைமை நிலயமாகிய கல்லிடைக்குறிச்சியில் கட

## தோழர்.
# கிருஷ்ண மூர்த்தி பிரசங்கம்.

[மனதில் கர்பனை கூடாது-பாவ மேது பரமேது- ஜாதி வேற்றுமை ஒழிக-கோயில்கள் வேண்டாம் தேசீயமே யுத்தத்திற்குக் காரணம்.]

சென்னை அடையாறு பிரம்மஞான சபையில் தோழர் ஜே. கிருஷ்ண மூர்த்தி கேள்விக்குப் பதில் கூறுகையில் அறிவித்ததாவது:—

ஒவ்வொருவருக்கும் குரு அவசியமல்லவா வென்றும், குருவிடத்தில் எனக்கு நம்பிக்கையுண்டா வென்றுமே நீங்கள் கேட்கின்றீர்கள். குருமார்கள் இருக்கின்றார்களா வென்றும் நீங்கள் அறிய விரும்புகின்றீர்கள். அவர்கள் இருக்கிறார்களில்லையென்பதை நீங்களறிவீனேன். அத்தகையவர்கள் வழி காட்டுவார்களென்பது உங்கள் அபிப்பிராயம். ஒரு ஆதரவை நாடுகின்றீர்கள். அதற்கு எனது அங்கீகரிப்பையும் பெற விரும்புகின்றீர்கள். குருமார்களிடம் நம்பிக்கையைப் பலப்படுத்த விரும்புகின்றீர்கள். அவ்வித நம்பிக்கை எனக்கு இல்லை. நம்பிக்கைப் பலப்படுவதால் சக்தி ஏற்படாது- நீங்கள் ஆதரவை நாடுவதன் காரணம் கற்பனா சக்தி இன்மையே- பொய்யான நம்பிக்கைகளாலும், பழக்க வழக்கங்களாலும் கட்டுண்டு வீழ்ச்சி அடைந்துள்ளோம்- நமது மனதில் நம்பிக்கைகள் துடி கொண்டிருக்கும் வரையில் பூரணமாய் உணரும் சக்தியோ, சுதந்திரமோ இருக்காது. குருமார்கள் இருக்க வேண்டியது அவ்வளவு முக்கிய மல்ல. பூரணமாக எல்லாவற்றையும் விட்டால் தான் உண்மையை அறிய முடியும்.

மற்றொரு கேள்விக்குத்தோழர் கிருஷ்ண மூர்த்தி கூறியதாவது:—

"பாபம் என்பதொன்று உண்டென்று நான் கருதவில்லை. விவாகம் என்றால் என்ன? ஒரு பெண்ணை ஒரு ஆடவர் தமக்கே உரியவளாக்க பல சட்டங்களும், சடங்குகளும் இருக்கின்றன. சடங்கு நிறைவேறி விட்டால் நீங்கள் எது வேண்டுமானாலும், செய்யலாம் அதனை நீங்கள் சட்டரீதியான தென்றும், பாவமில்லாத தென்றும் கருதுகின்றீர்கள். ஆனால் விவாகமின்றி ஒரு பெண்ணைப்பெற்றிருப்பது பாவமாகிறது. உண்மை அன்பு இருக்குமானால் சட்டத்திற்கே இடமில்லை. ஆண் பெண் சம்பந்தம் பற்றிய பிரசனைகள் சட்டங்களால் மட்டுமே தீராது. கற்பனா சக்தியை முற்றிலும் உணருவதே வழி.

கேள்வி:—ஸ்தாபனமும், மதமும் பெரும்பான்மையான மக்களுக்கு அவசிய மென்பதும், ஆகவே அவர்களுக்குப் பிரயோஜன முடையவையென்பதும் அனுபவத்தில் கண்ட உண்மையாகும். தாங்கள் இதை ஒத்துக்கொள்கிறீர்களா?

பதில்:—நான் ஸ்தாபனம் எதுவுமிருப்பதை எதிர்க்க வில்லை. ஆனால் எந்த ஸ்தாபனமும் நாம் உண்மையை அடையும்படிச் செய்யவல்லதல்ல.

கேள்வி:—நாளைக்கு யுத்தம் ஏற்பட்டு, ஒவ்வொருவரும் கட்டாயம் ராணுவத்தில் சேர வேண்டுமென்ற சட்டம் பிறக்குமானால் தாங்கள் என்னசெய்வீர்கள்?

பதில்:— தேசீயம் எங்கேயிருக்கிறதோ அங்கே யுத்தம் இருந்தே தீரும். யுத்தத்தைத் தவிர்க்க முடியாது. நான் தேசீய வாதியல்லாததால் யுத்த சம்பந்தமாக எவ்வித உதவியும் செய்ய மாட்டேன். ராணுவத்திலும் சேரமாட்டேன். காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை செய்து மீண்டும் காயம்படும் படி யுத்த முனைக்கு அனுப்பும் செஞ்சிலுவை வைத்திய படையிலும் சேர மாட்டேன்.

யுத்தம் ஏற்படும் முன்பே நான் ஒரு முடிவுக்கு வந்து விடுவேன். சமாதான காலத்தில் நாம் என்ன செய்வதென்பதைத் தீர்மானிக்க முடியும். யுத்தம் ஏற்பட்டால் என்ன செய்வதென்ற கேள்விக்கு இடமேயில்லை. யுத்தத்தைத் தவிர்க்க நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? இதுவே சாத்தியமான காரியம். நாம் யுத்த தளவாடங்களை அதிகரித்துக்கொண்டே செல்வதால் முடிவில் யுத்தம் வந்தே தீரும். தேசிய உணர்ச்சியை நீங்கள் கொண்டிருக்கும் வரையில் ரத்தம் சிந்துவதோ பொருளாதார கஷ்டத்தை உண்டு பண்ணுவதோயான போராட்டம் இருந்தே தீரும்.

தனிப்பட்டவர்களாகிய உங்களாலும் என்னாலும் யுத்தத்தைத் தவிர்க்க முடியாது. யுத்தத்திற்கு விரோதமாக பிரசாரமே செய்யக்கூடும் அவ் வேலை செய்வதற்குக் கூட, நாம் எனது நாடு, எனது கடவுள் என்ற நோயை விட்டு விட வேண்டும்.

### மரண பயம் ஏன்?

கேள்வி:—பயத்திற்கும் முக்கியமாக மரண பயத்திற்கும் காரணம் என்ன? மரணத்தைத் தவிர்க்க முடியாதென்றும், மரணம் இயற்கையானதென்றும் கருதி அப் பயம் முற்றிலும் இல்லாதிருக்க முடியுமா?

ப:—நமது வாழ் நாட்கள் பூரணமற்றதாக விருப்பதாலும், நமது காரியங்கள் பூர்த்தியாகாததாலுமே நாம் மரண பயம் கொள்ளுகின்றோம். எதிர்காலத்தைப் பற்றி ஒருவர் ஒருவித நம்பிக்கை கொள்வாரேயானால் பூரண உணர்வு இருக்க முடியாது நீங்கள் பூரண வாழ்க்கை உடையவராகத் திகழுவதைத் தடுப்பது என்ன ஒரு லட்சியத்தைக் குறித்து உங்கள் மனதைப் பற்றி யுகிக்கும் பிரேமை தடையாகும். எதிர்காலத்தில் காரியசித்தி யடைய வேண்டுமென்று நீங்கள் எதிர் பார்த்த வண்ணமாகவே இருக்கிறீர்கள். ஆகவே தான் மரண பயம் ஏற்படுகிறது.

### ஆலயப் பிரவேசம்

கே;—இந்தியாவில் மக்களுக்குள் நிலைத்திருக்கும் பலவித வித்தியாசங்களில் ஒன்றைப் போக்க ஆதி இந்துக்கள் ஆலயப் பிரவேசம் உதவியாக விருப்பதால் அந்த சீர்திருத்தத்தைத்தாங்கள் ஆதரிக்கின்றீர்களா?

ப:—ஆதி இந்துக்கள் ஆலயப் பிரவேசம் செய்வதால் ஜாதி வித்தியாசச் சிக்கல் தீருமென்று நான் கருதவில்லை. கோயில்கள், சர்ச்சுகள் முதலியன இல்லாமற் போனால் தான் ஜாதி வித்தியாசம் ஒழியும். உண்மை. கல்லொன்றிலோ அல்லது விக்ரகத்திலோ இல்லை. இயற்கை உண்மை எந்த கோயில்களிலுமில்லை. எனவே, கோயிலுக்குச் செல்வோர் செல்லாதவர் இவர்களைப் பற்றி நீங்கள் என் கவலைப்பட வேண்டும்?

### கோயில் சடங்குகள் வேண்டாம்

நீங்கள், கோயிலிலிருப்பது உண்மையின் அடையாளக் குறியென்று நினைக்கின்றீர்கள். ஆனால் உண்மை எந்த அடையாளக் குறியிலும் அடங்குவதில்லை. கோயில்களும், சடங்குகளும் இல்லாமற் போகுமானால் மக்களுக்குள் சச்சரவு நின்றுவிடும். சுயநலத்திற்காக பல நூற்றாண்டுகளாக அழுலிலிருந்தும் தேசீயம் அற்றுப்போனால், எப்படி யுத்தமில்லாமற் போகுமோ அப்படியே கோயில்கள், மூட நம்பிக்கைகள் புரோகிதர்கள் இவர்கள் அகன்றால் வித்தியாசமே இருக்காது'

### ஜாதி வேற்றுமை ஒழிக

விவாதத்தின் மூலம் உங்களால் விஷமொன்றைப் போக்க முடியாது.

நாம் அறியாமையை உணருவோமேயானால் மூலகாரணத்தைப் போக்க ஸ்தாபனங்கள் இயல்பாகவே ஏற்படும். நீங்கள் விழிப்படையாவிட்டால் அடிமைகளாகவே யிருக்க வேண்டும். புதிய சடங்குகளையும், புது ஸ்தாபனங்களையும் ஏற்படுத்தாதீர்கள். பொது உடமைத் தத்துவம் ஏற்படுமானால் தேசத்திலுள்ள கோயில்களை யெல்லாம் ஒழித்துவிடும். ஆனால் மூலகாரணம் ஒழியமாட்டாது. மகத்தான மாறுதல் ஏற்பட வேண்டும். நீங்கள் உங்களது பெற்றோர்கள், சமூகத்தார் இவர்களையும் எதிர்த்து உறுதியுடனிருந்து ஜாதி வேற்றுமை என்னும் விஷயத்தை நாசஞ் செய்ய வேண்டும்

---

ந்த 18-11-33ல் நடைபெற்ற 3-வது நிர்வாகக் கூட்டத்தின் தீர்மானமாகிய கல்வி, கைத்தொழில், கைமைணம் இம் மூன்றையும் இக் கூட்டம் ஆதரிக்க வேண்டியதோடு அவைகள் நடைபெற முயற்சித்து விருத்தியாக்க வேண்டுமென்று இக் கூட்டம் ஷை சங்கத்தாரை கேட்டுக்கொள்ளப்படுவதாக எஸ் சுப்பையா ஆசாரி அவர்களால் பிரரேபிக்கப்பட்டு தலைவர் அவர்களால் ஆதரிக்கப்பட்டு மகாஜனங்களால் ஒப்புக் கொள்ளப்பட்டது. பின்னர் வந்தனோபசாரம் கூற 11 மணிக்கு கூட்டம் கலைந்தது. சங்ககாரியதரிசிதெரிவிக்கிறார்

---

[9ம் பக்கத் தொடர்ச்சி]

டுத் திட்டங்களும், விதிவிலக்குகளும் இன்றைக்குப் போதாதென எடுத்துக் காட்டி வருவதும் நாஸ்திகர்தான், குற்றம் செய்வோரைத் தண்டிக்கலாகா. அவர்களை அன்புடன் திருத்தவேண்டு மென்பதும் நாஸ்திகர்தான். இவ்வுலக விஷயங்களில் பண்டைகாலத் தொடங்கி வைத்துவந்த மனப்பான்மைகளை திருத்தியும் கண்டித்தும் வருவது நாஸ்திகர்தான்.

உலக அரசாங்கங்கள் மதங்களில் மூழ்கிக்கிடக்கின்றபடியால் பண்டைக்கால ஆட்சி முறையையே கையாண்டு வருகின்றார்கள். பிற்போக்கே அரசாங்கங்களின் லட்சணம். உலகம் ஷணத்திற்கு ஷணம் மாறி வருவதைக் கவனியார்கள். ஒரு கையில் வில்லும், அம்பும், மற்றொரு கையில் கண்டனைகளைக் கொண்டு அரசுகள் தத்தம் அரசை நடத்தி வருவதால் உலகமடைந்துவரும் துக்கங்களுக்கு விமோசனமில்லாமற் போகின்றது. இந்த ஆதரவற்ற நிலைமையில் நாஸ்திகம் ஒன்றே, உலகம் உய்யும் மார்க்கத்தைக்காட்டி வருகின்றது. "கடவுள்" என்ற கற்பனையால் விளைந்தன எல்லாக் கேடும், இந்த கற்பனையை விட்டொழித்து மனிதனை கவனித்தலே அரசுகளின் சத்தருமமாகும். இது தான் உலகம் உய்ய நேர்வழி என்று உறைப்பதும் நாஸ்திகம். இத்தியாதி விவேகத்தைக் கற்பிக்கவந்த நாஸ்திகர் மகாநாட்டை யாவரும் ஆதரித்து இந்திய உலகிற்கு மாத்திரமல்ல, மற்ற உலக முழுமையும் தெளிவு அடையச் செய்வோமாக! இதுவே இந்த மகாநாட்டின் முக்கிய கருத்து.

---

## தோழர் ம. சிங்காரவேலுவின் நாஸ்திகப் பிரசாரம்.

மேற்கண்ட பிரசங்க பிரதிகள் பொதுமக்களிடையே வினியோகிக்கத்தக்கது சொற்பபிரதிகளே அச்சிடப்பட்டிருக்கிறது. தனிப்பிரதி விலை காலணா. நூறு பிரதிகளுக்குக் குறைந்து வெளியில் அனுப்பப்பட மாட்டாது. ரூ. 1—12—0-முன்னதாக அனுப்பவேண்டும். தபால் செலவு கிடையாது.

விலாசம்,
ம. சிங்காரவேலு'
22 சவுத் பீச் திருவல்லிக்கேணி
சென்னை.

## சேரியில் நாஸ்திகப் பிரசாரங்கள்.

8-12-33ந்தேதி மாலை 5½மணிக்கு காஞ்சி தாலூக்கா 5, 8 தண்டு செவிலி மேட்டுச்சேரியில் நாஸ்திக தொழிலாளர் கிளைச்சங்கத்தின் ஆதரவில் நாஸ்திக தொழிலாளர்கள் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு காஞ்சி தோழர் சமதர்ம நாஸ்திக சி. கே. குப்புசாமி அவர்கள் தலைமை வகித்து நாஸ்திகத்தைப்பற்றியும், தொழிலாளர் முன்னேற்றத்தைப்பற்றியும் பேசினர். பின் கூட்டம் இனிது கலைந்தது.

### பொதுக்கூட்டம்.

20-12-33ந்தேதி பகல் 4மணிக்கு காஞ்சிதாலூக்கா 61நெ. சுரோத்திரியதிருப்பருத்தி குன்றம் சேரியில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. கூட்டத்திற்கு காஞ்சி தோழர் சமதர்ம நாஸ்திக சி. கே. குப்புசாமி அவர்கள் தலைமைவகித்து முன்னுரையாக வீடு சொந்தக்காரர்களின் கொடுமையும்,வீடு இல்லாதவர்களின் பரிதாப நிலையும் என்ற விஷயத்தைப்பற்றி பேசியதோடு சிலதீர்மானங்கள் ஏக மனதாக நிறைவேறியது.

### மற்றொரு கூட்டம்.

22-12-33ந்தேதி மாலை 4மணிக்கு காஞ்சிதாலூக்கா 61 நெ. சுரோத்திரிய திருப்பருத்திக்குன்றம் சேரியில் நாஸ்திக பொதுக்கூட்டம் நடைபெற்றது. சி. கே. குப்புசாமி அவர்கள் தலைமை வகித்து "கடவுள் இல்லை" என்று பல உதாரணங்களுடன் பேசினர். பின்கூட்டம் கலைந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## திருச்செங்கோடு ஆதி திராவிட வாலிபர் சங்கம்.

1933 வருஷம் டிசம்பர் மாதம் 24ந்தேதி மாலை 4 மணிக்கு மேற்படி சங்கத்தின் ஆதரவில் பொதுக்கூட்டம் ஒன்று தோழர். டி. எ. சுந்தரம் அவர்கள் தலைமையின் கீழ் கூடிற்று. அது சமயம் சுமார் 200 ஜனங்கள் வரை கூடியிருந்தார்கள். தோழர். என். மாரிமுத்து, எ. அருணாசலம், எஸ். முத்துசாமி, எஸ்.பழனியப்பன், அமர்தலிங்கம் எம். காளிமுத்து, ஆர். வரதப்பன் முதலியவர்கள் முறையே ஆதிதிராவிடர்களின் முன்னேற்றம் "கடவுளும், மூட நம்பிக்கையும்" "மதம் மக்கட்குச் செய்வது ஒன்றுமில்லை. என்பவைகளைப் பற்றி நீண்டதோர் சொற்பொழிவாற்றினர்கள். தலைவர் தமது பின்னுரையில் "காந்தியும், வைதீகமும்" என்பதுபற்றி பற்பல மேற்கோள்களுடன் அரியதோர் உபந்யாசம் செய்தார். கடைசியாக தோழர். என். மாரிமுத்து அவர்கள் வந்தனோபசாரங் கூற இரவு 8 மணிக்குக் கூட்டம் குதூகலத்துடன் கலைந்தது.

## சென்னை சுயமரியாதைப் பொதுக்கூட்டங்கள்.

கோடம்பாக்கத்தில் 1-1-34 மாலை 4-30 மணிக்கு தோழர் எஸ். குஞ்சிதம் பி. ஏ. எல். டி. அவர்கள் தலைமையில் தோழர்களான எஸ். நீலாவதி, ராம. சுப்பிரமணியம், நாஸ்திக சி. கே. குப்புசாமி, எஸ். குருசாமி பி. ஏ, சாமி சிதம்பரனார், ப. ஜீவானந்தம், அ. பொன்னம்பலம் முதலியோர்கள் பேசினார்கள்.

### சென்னை கார்பொரேஷன் கட்டிடப் பின்புறம்.

1-1-34 மாலை 6 மணிக்கு தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல்., அவர்கள் தலைமையில் தோழர்களான ராம. சுப்பிரமணியம், நடேசன், எஸ். நீலாவதி, ப. ஜீவானந்தம், எஸ். குருசாமி பி. ஏ. முதலியோர் பேசினார்கள்.

### பேரம்பூர் பாரக்ஸ்.

### ஈ. வெ. ரா. நாகம்மாள் வாசகசாலைத் திறப்பு விழா.

2-1 34 மாலை 5-30 மணிக்கு தோழர் எஸ். குஞ்சிதம் பி.ஏ எல்.டி. அவர்கள் தலைமையில் தோழர் எஸ். நீலாவதி ஈ. வெ. ரா. நாகம்மாள் வாசகசாலையைத் திறந்து வைத்தார்கள்.

தோழர்கள் கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல்., எஸ். குருசாமி பி. ஏ, ப. ஜீவானந்தம், நாராயணி அம்மாள் முதலியோர் பேசினார்கள்.

### தோழர்கள் புறப்பாடு.

தோழர்கள் எஸ். நீலாவதி, ராம. சுப்பிரமணியம், ச. ம. சி. பரமசிவம், சண்முகசுந்தரம் ஆகியோர் 6-1-34ல் திண்டிவனத்திலும், 7-1-34ல் புதுச்சேரியிலும் பேசிவிட்டு 8-1-34ல் திருச்சி சேர்வார்கள்.

## திருச்செங்கோடு தாலூகா ஆதிதிராவிட மகாஜன சங்கம்.

நாளது 14-1-34உ ஞாயிற்றுக்கிலமை பகல் 1 மணிக்கு திருச்செங்கோடு தாலூகாவிலுள்ள ஆதி திராவிட உபாத்தியாயர்களின் கூட்டமொன்று ரேஞ்சு ஸ்கூல்களின் டெப்டி இன்ஸ்பெக்டர் தோழர் எ. மாரிமுத்து பி. ஏ. எல். டி. அவர்கள் தலைமையின் கீழ் திருச்செங்கோடு ஆதிதிராவிடர்களின் பொது மடத்தில் நடைபெறும். அவ்வமயம் பிற ஜாதிகளால் நசுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு தாழ்த்தப்பட்டுக் கிடக்கும் நம் மக்கள் முன்னேற்றமடையும் வழிகளைப் பற்றி ஆலோசிக்கப்படும். ஆகையால் உபாத்திமைச் சகோதரர்கள் யாவரும் தவறாது விஜயம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என காரியதரிசி எழுதுகிறார்

## செந்தூல் சுயமரியாதைச் சங்கம், கோலாலம்பூர்.

### பிரிவுபசாரக் கூட்டம்

21-12-33 வியாழகிழமை அன்று இரவு 7 மணி தொடக்கமாய் கோலாலம்பூர் சந்தூல் இந்தியா சுயமரியாதை சங்கக் கட்டிடத்தில் தென்னிந்திய விதவாவிவாக சபையார்களின் பிரிவுபசாரக் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அவ்வமயம் தோழர் மா. பெ. பரிமணம் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

தோழர் பி. பிச்சை முத்து, அவர்கள் கா இராஜகோபால் ப. கா விராசாமி, அழகு ந, சின்னையா, அ. ஆ. கந்தவனம், மு. வேலாயுதம், சு. கா சுப்பையா, சு. ம. சு. சுப்பையா, தம்பையா, அ.ப. ஆறுமுகம்ஆகியவர்கள் முறையே. தோழர் பி.டி வெள்ளச்சாமி அவர்கள் தாய் நாடு செல்வதைக்குறித்தும், விதவைப்பெண்களின் துயர் என்பதை விளக்கியும், கூடிய சீக்கிரத்தில் கைமை பெண்களின் கண்ணீரை துடைத்து விதவை என்ற பட்டத்தை எடுத்துவிட வேண்டுமென்றும் சொற்பெருக்குக் கூறினார்கள்.

தோழர் பி. டி. வெள்ளச்சாமி அவர்கள் தாய் நாட்டுப் பிரயாணம் எனது சேவைக்கு நன்மையே யாகும் என்று மிக உருக்கமாகப்பேசினார்கள். தலைவர் முடிவுரை கூறியதும் தோழர் பி. டி. வெள்ளச்சாமி அவர்கள் இராதி மணிகள் நிலைமை எனும் மணிமலர் பிரதிகளை சபையோர்களுக்கு வழங்கினார்கள். காரியதரிசி அ. ப. ஆறுமுகம் அவர்கள் வந்தனங் கூறப்பட்டு இனிது 8-45 மணிக்கு முடிவுற்றது எனக்காரியதரிசி எழுதுகிறார்.

## மதுரை ஜில்லா சுயமரியாதைப் பிரசாரம்.

ஜில்லா சுயமரியாதை சங்கக் காரியதரிசிகளான தோழர் ஏ. எஸ். அருணாசலம், ஏ. எஸ். ஆனந்தம் பொக்கிஷதார் கே. வி. விநாயகமூர்த்தி ஆகியவர்கள் மதுரை ஜில்லாவில் அடியில் கண்ட இடங்களில் சுயமரியாதை கிளைச் சங்கங்களை ஸ்தாபிப்பதற்கும், ஜில்லா 2-வது மகாநாடு நடத்துவதன் சம்பந்தமாக ஆலோசிப்பதற்குமாகச் சுற்றுப்பிரயாணம் செய்வார்கள். எல்லா சுயமரியாதை இயக்கத் தோழர்களும் ஆதரவளிக்குபடி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஜனவரி மீ 9உ செவ்வாய் காலை சோழவந்தான் வாடிப்பட்டி, 9உ மாலை நிலக்கோட்டை, 10உ காலை பட்டி வீரன்பட்டி, 11உ காலை தேவதானப்பட்டி, மாலைபெரியகுளம்12உ காலை திண்டுக்கல், மாலை பழனி.

## தென்னிந்திய சலவைத் தொழிலாளர் முதல் மகாநாடு.

### திருச்சியில் 1934 ஆ ஜனவரி மாதம் 22,23ந்-தேதிகளில் நடைபெறும்.

சென்னை மாகாண இரண்டாவது மந்திரி கனம் பி. டி. ராஜன் அவர்கள் மகாநாட்டைத் திறந்து வைக்க அன்புடன் ஒப்புக்கொண்டுள்ளார்.

தோழர் என். சிவராஜ் எம். எல். சி. அவர்கள் மகாநாட்டின் தலைவராக இசைந்துள்ளார்.

பொன்மலைத்தோழர் எ. கருப்பணன் அவர்கள் வரவேற்புத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். மகாநாட்டிற்கு விஜயம் செய்யும் வெளியூர் பிரதிநிதிகளுக்குசாப்பாடும இடவசதியும் இலவசமாய் செய்து கொடுக்கப்படும். மகாநாட்டிற்கு தீர்மானங்கள் அனுப்புகின்றவர்கள் 15-1-34 க்குள் மகாநாட்டின் காரியத்திற்குக் கிடைக்குமாறு அனுப்ப வேண்டும்.

குடும்ப சகிதமாய் விஜயம் செய்யும் பிரதிநிதிகள் முன் கூட்டியே தங்களுக்கு வேண்டிய வசதிகளைப் பற்றித் தெரிவித்து விடவேண்டும்.

மகாநாட்டின் வேலைகளை முன்னிட்டு மகாநாட்டுக் கமிட்டியார் பல ஜில்லாக்களிலும் சுற்றும் பிரயாணம் செய்வார்கள். அவர்களுக்கு வேண்டியஉதவிகளைச்செய்ய வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

வரவேற்புக்கட்டணம் ரூ. 2—0—0
பிரதிநிதி .......... ரூ 1—0—0

M. துரைசாமி,
T. M. சிவசுப்பிரமணியம்,
காரியதரிசிகள்.

## பொதுக்கூட்டம்.

திருச்சங்கோடு ஆதிதிராவிட வாலிபர்சங்கத்தின் ஆதரவில் டிசம்பர் மாதம் 29ம் தேதி மாலை 4மணிக்கு எ. மாரிமுத்து பி எ. எல். டி., அவர்கள் தலைமையின் கீழ் தாழ்த்தப்பட்ட மக்களின் கூட்டமொன்று கூடியது. கூட்டத்திற்கு சுமார்500 ஜனங்கள் வரை வந்திருந்தார்கள். தலைவர் முன்னுரையில் இந்தியநாட்டில் தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கும் நிலைமையையும், அவர்கள்முன்னேரும் வழிகளையும் மிகவிரிவாக எடுத்துரைத்தார். பின்பு தோழர்கள் என், பழனிசாமி பண்டாரம் என். மாரிமுத்து, டி. ஏ கைலாசம் கே. கந்தசாமி முதலியவர்கள் முறையே "ஆதிதிராவிடர் முன்னேற்றம்,, "தாழ்த்தப்பட்ட வர்களும் உத்தியோகங்களும்" "சுகாதாரம்" முதலியவர்களைப் பற்றி நீண்டதோர் சொற்பொழி வாற்றினர்கள்.

(7-ம் பக்கத்தொடர்ச்சி.)

ஒன்று சிறைச் சாலையாகவிருந்து செருப்புத் தொழிற்சாலையாக மாறியுள்ளதுமான போதிலும் ஞாயிறுகளில் சர்ச்சுபோல் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. அங்கு சர்ச்சு குடிகள் வழக்கமாக நிரம்பிவிடுகிறார்கள்.

அனேக சர்ச்சுகள் ஒழிக்கப்பட்டும் அதனால் புதிய சர்க்கார் கழகங்கள் நிறுவவும் அழகிய நகரங்களை சிருஷ்டி செய்யவும் பலனேற்பட்டுங்கூட மதபக்தர்கள் மீண்டிருப்பதைப் பார்க்க அதனின் காரணம் எனக்கு விளங்காமலிருந்தபோது அதற்கு புரொபசர் லூகாகெப்ஸ்கி "நாம் அவைகளை எல்லாம் அடைத்துவிட்டால் நாம் அவர்களைப் பாதாளத்தில் வீழ்த்தியவர்களாவோம்" என்று கூறிப் பொல்லாத சிறிப்புக்காட்டி அவரின் கூரியகரும்கண்களின் கொம்புவெட்டப்பிட்ட கண்ணாடிகளை ஒழுங்குபடுத்திக்கொண்டார்.

"நாம் அவர்களுடைய அறைகளிலேயே அவர்களைப் புதைத்திவிடுகின்றோம். அங்கு இரகசியமாக பிரார்த்தனை செய்கின்றார்கள். பின்னால் அவர்களைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. நமது இயக்கத்தின் சாதாரண முற்போக்குக்கு அவர்களைச்சுயேச்சையாக விட்டுவிட வேண்டியதுதான். ஆனால் இன்னும் சில வருஷங்களில் சர்ச்சுக்குச் செல்ல ஒருவரும் இருக்கவேமாட்டார்கள்." என்கிறார் லூகாகெப்ஸ்கி.

மாஸ்கோவின் 500 சர்ச்சுகளும் காதிடிரெல்களும் மறைக்கப்பட்டது முதல் இனி எந்நாளும் இந்த சிவப்பு தலைநகரத்தை [Red Capital] நாற்பது மடங்கு நாற்பது [1600] சர்ச்சுகளின் இருப்பிடமெனக் கூற முடியாதன்றோ? புதிய அரசியல் தலைமைஸ்தானத்தின் தத்துவமானது, உயர்ந்தஸ்தாபிகளை [எவ்வளவு சீக்கிரத்தில் அவர்கள் தங்கள் நன்மைக்கு என்று கருதும் தீவிரத்தோடு] ஒழிக்க முடியுமோ; அவ்வளவு சீக்கிரத்தில் ஒழிக்கத் தூண்டியது. ஆனால் நகரத்தின் புதிய நிர்மாணத்தின் குறிப்பிடத் தகுந்த எடுத்துக்காட்டாக அநேகம் இருந்து நீண்ட வருஷங்கள் விளங்காமல் போகாது. கொடியோன் 'ஈவான்' [Ivan the Terrible] காலத்தில் சகல ரஷ்யா முழுவதிலும் விசேஷிக்கத் தகதாக இருந்த காதிடிரெலானது இனி நாட்டின் குறிப்பிடத்தக்க சரித்திரச் சானுாக விளங்கப் போவது சிவப்பு சதுக்கத்தில் அமையப்பெற்ற அர்ச்பெய்ல்லே ஆகும்.

மக்கள் வாழ்க்கையில் கடவுள் பிரார்த்தனையைப் பழங்காலத்தில் புகுத்திவந்ததற்குப் பதிலாக ரஷ்ய நாஸ்திகவாதிகள் 'விஞ்ஞானத்திற்குப் பொருந்திய லோகாயுத [Scientific Didactic Materialism] சாஸ்திரத்தை இன்று புகுத்தியுள்ளார்கள். இவைகளை எதற்கு ஏற்பட்ட பள்ளிக்கூடமாக இருந்தபோதிலும் சரி, அங்கும்வேலை தொழிற்சாலைகளிலும், ஓர்க்ஷாப்புகளிலும், விவசாயிகளுடைய மத்தியில் நிலங்களிலும் முறையே கற்றுக்கொடுக்கின்றார்கள், பிரசாரம் செய்கின்றார்கள், போதிக்கின்றார்கள்.

கடவுளுக்கோ, சர்ச்சுக்கோ மதத்திற்கோ இவ்வுலகில் எங்கும் எந்த சொரூபத்திலும் இனி இடமில்லை என்பதே [காலக்கிரமத்தில் உலகத்தைப்பற்றும் பொதுவுடமையின் வெற்றிக்கான] தேவநிந்தனைவாதி லூகாகெப்ஸ்கியினுடையவும் அவரது தீவிர நாஸ்திகப்போராட்ட சகபாடிகளுடையவும் கருத்தாகும்.

புரொபசர் லூகாகெப்ஸ்கி தனது இயக்க வேலைக்கும் சர்க்காருக்கும் சம்மந்தமில்லை பென்று சொல்லுபவர். தீவிர நாஸ்திகப் போராட்டத்தைக் கைபாண்ட சாலை ஹிம்சைமுறை பிரயோகப் படுத்தப்பட்டதா என்று அவரைக் கேட்டபோது அவர் ஒத்துக்கொள்ள மறுத்துவிட்டார். ஆனால் சர்ச்சுக்குப் போகும் தொழிலாளரின் சிந்தனையை வற்புறுத்தித் திருப்புவது துரோக தவறு என்று நான் சொன்னபோது அதை அவர் ஒப்புக்கொள்வதின்றும் மறைக்க அவரால் முடியவில்லை. காலக்கிரமத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் [Believers] பிரார்த்தனையை விருப்ப சர்ச்சுகளே இருக்காதென்று நான் தெரிவித்ததை அவர் ஒத்துக்கொண்டார்.

---

## ப. மு. வெள்ளசாமி அவர்கள் தாய்நாடு வருகை

கோலாலம்பூர் செந்தூல் இந்திய சுயமரியாதை சங்கத்தின் அங்கத்தினரும், விதவாவிவாக சங்க அங்கத்தினரும், சு. ம. இயக்க தோழருமாகிய ப. மு. வெள்ளசாமி அவர்கள் 22-12-33ல்-கோல் கிள்ளானிலிருந்து பிரயாணமான ரஜுலா என்ற கப்பலில் பிரயாணப்பட்டு 28-12-33ல்சொந்த ஊராகிய புதுக்கோட்டை ஸ்டேட் குளிபிறைக்கு சுகமே வந்து சேர்ந்தாரென்று எஸ். எ. அமபிகாபதி எழுதுகிறார்.

## திருச்சினாப்பள்ளி தையல் தொழிலாளர் சங்கம்.

1-1-1934 மாலை 5-மணிக்கு திருச்சினாப்பள்ளி காவேரி யாற்றின் சமீபமுள்ள தம்பிரான் தோப்பில் போலீஸ் டைலர் ஜி. எம். மஹமூத் சாயபு அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்ற திருச்சினாபள்ளி தையல் தொழிலாளர் சங்கத்தின் பொதுசபையில் திருச்சி (இந்திய ஒளி) பத்திராதிபர் ஜனாப் கே. எ. அப்துல் ஹமீத்சாயபு "தையல் தொழிலின்" மேன்மையைப்பற்றிப் பேசியது வருமாறு.

1906, 1907 சிங்கர்மிஷின் பெரியது ரூ. 110ம் சின்னது ரூ. 93ம் விற்றுவந்தது 1909ல் வீலர் மிஷின் என்பதாக ஒன்று வெளிக்கிளம்பியது. அம்மிஷின்களைத் தடுப்பதற்காக சிங்கர்மிஷின் கம்பெனியார் நமது பழையமிஷின்களையும் இதர மிஷின்களையும் இன்னும் உபயோகமற்ற மிஷின்களையும் தாம் விலைக்குப்பெற்றுக் கொள்வதாகவும் அதன் கிரயமாகிய ரூ. 15ம் புது சிங்கர்மிஷின் எடுத்துக்கொள்பவர் கணக்கில் வரவுவைத்துக் கொள்வதாகவும் தொழிலாளிகளுக்கு ஆசை காட்டி எங்கள் பழயமிஷின்களை எல்லாம் கொள்ளையடித்துக்கொண்டு புதியமிஷின்களைக்கொடுத்து எங்களைக்கடன்காரர்கள் ஆக்கினார்கள் அதன்பின்பு வீலர்மிஷின் கம்பெனியார்களையும் வசப்படுத்திவிட்டார்கள். இப்போது பழயமிஷின்களை சும்மா கொடுத்தாலும் வாங்குவதில்லை. எங்களை பலவிதத்திலும் சூழ்ச்சிகள் செய்து எங்கள் பணங்களைக்கொள்ளை கொண்டுபோகிறார்கள் உதாரணமாக மோட்டார், லாரி, சைக்கில் முதலிய சகல சாமான்களும் விலை குறைந்துவிட்டது. சிங்கர் தையல்மிஷின் மட்டும் ஆதியில் ரூ. 93க்கு விற்றது இப்போது ரூ. 210ஆக உயர்ந்துவிட்டது. அதன் ஊசி முதலிய சகலசாமான்களின் விலையைப்பற்றியோ சொல்லவேண்டியதில்லை. இதுவிஷயமாக புரட்சி ஏற்படுவது அவசியமாகும். அதன்சம்மந்தமாக நமக்குள் ஒற்றுமை மிகவும் அவசியமாகும். தொழில்களை எடுத்துக்கொண்டால் தையற்தொழில் மிகவும் சிலாக்கியமாகும்.

பின்பு தோழர்கள். என். எஸ் கோவிந்தசாமி, டி. ஜே. அலாவுதீன், நீலமேகம், என். வெங்கட்ராவ் ஆகியவர்கள் பேசியபின் தலைவருக்கு சங்கத்தின் சார்பாக ஒரு அழகானமாலை சூட்டப்பெற்றதும் முடிவுரையோடு கூட்டம் இனிது கலைந்தது. இச்சங்கம் திருச்சினாபள்ளி தையல் தொழிலாளர் சங்கம் என்று அழைக்கப்படும்.

திருச்சினாபள்ளியைச் சேர்ந்த எல்லா சுற்றுப்பாகங்களிலுள்ள தெருவுகளில் ஒவ்வொரு தெருவிற்கும் ஜாதிபேதமன்னியில் இரண்டு பேர் ஆக 25-மெம்பர்களை காரியக்கமிட்டி மெம்பர்களாக தேர்ந்தெடுப்பது.

இச்சங்கத்திற்குத் தலைவரைதேர்ந்தெடுக்கும்வரையில் மேல்கண்ட காரியக்கமிட்டி மெம்பர்களில் ஒருவரை ஏற்படுத்திக்கொண்டு கூட்டத்தை நடத்தல் எனமுடிவுசெய்யப்பட்டது.

---

## புதுப்பாளையம் சமதர்ம வாசகசாலை.

29-12-33 வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு வாசகசாலையின் வாராந்திரக்கூட்டம் தோழர். கு. ஆறுமுக ஆச்சாரி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பின், தோழர். வி. தங்கவேலு அவர்கள் "ஆசியர் சூழ்ச்சி என்பது பற்றியும், செங்கம் தோழர். எஸ். சி. சுப்ரமணியம் அவர்கள் "நமதுநிலை" என்பதுபற்றியும். மேற்கண்ட விஷயங்களை பின் பற்றி தோழர்கள். எ. முத்துகிருஷ்ணன், ஆர். ப. கிருஷ்ணன், ஆர். கதிர்வேலு, ஏ. கோவிந்தன் ஆகியவர்கள் சொற்பொழி வாற்றினார்கள். தலைவர் முடிவுரையில் சிலர் கேட்ட கேள்விகளுக்கு தலைவர் தக்கபதில் சொன்னார். பின்னர் கூட்டம் இரவு 7 மணிக்கு கலைந்தது.

(ஒரு நிருபர்)

---

## நாகை சுயமரியாதைச்சங்கம்.

2-1-33 ந்தேதி மாலை 6-30-மணிக்கு சங்க மெம்பர்களின் கூட்டம் சங்கத் தலைவர் தோழர். எஸ். பி. கிருஷ்ணன் தலைமையில் சங்கக் கட்டிடத்தில் கூடியது. தலைவர் முடிவுரையில் இயக்க-ஸ்தாபகர் தோழர் ஈ. வெ. ராமசாமியை அரசாங்கத்தார் கைதி செய்ததைப்பற்றி வருந்துவதாகவும் நமக்கு ஏற்பட்டிருக்கும் வருத்தத்தை அரசாங்கத்தாருக்கு தெரிவித்துக்கொள்ள வேண்டுமெனவும் கூறினர்- அதைஅனுசரித்து தோழர்கள் எம். ஆர். பதி, ஆர். வி. கோபால், எம். கோவிந்தராஜ் கே. எஸ். முஜானுபுல்லா, எம். ஏ. கோவிந்தசாமி என். எம். சாமா முதலானோர் நீண்ட நேரம் பேசிய பின் கீழ்கண்ட தீர்மானம் தலைவரால் பிரரேபிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

### தீர்மானம்.

நாட்டின் முற்போக்குக்கு பெரிதும் பாதகம் விளைவித்து வரும் காந்தியம், காங்கிரஸ் என்பவைகளை ஒழிக்க பாடுபட்டு வருபவரும், ஏழைகளான கஷ்டப்படும் மக்களின் நலத்திற்கு பெரிதும் போராடுபவருமான நமது சுயமரியாதை இயக்கத் தலைவர் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களை கைதுசெய்ததற்காக இக் கூட்டம்வருந்து கிறது.

பின் தலைவர் முடிவுரைக்கூற இரவு 9-45 மணிக்கு கூட்டம் கலைந்தது.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# மதக்கொடுமை.

[காதர்.]

## நாசவேலை.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் மக்களின் மனச்சாக்ஷியின் மாண்புடை உன்னத உணர்ச்சியை-அறிவின் அபிவிருத்தியை-ஐக்கியத்தின் ஆக்ரண சக்தியை ஆராச்சியின் ஆற்றலை, மற்றும் இன்னோரன்ன மாந்தரின் உயர்வுக்குறிய விசேஷஎழுச்சிகளை எல்லாம்,பாதகப்படுத்திமதமென்னும் அரூபியே!என்று உன்கொடியஉருவம்இக்குவலயம் விட்டகலுமோ!என்றுதான் சாக்காடென்னும் சனியன்உன்னை ஹதஞ்செய்யுமோ!

அந்தோ! மேலேகண்ட மாண்புமிக்க எழுச்சியை மட்டுந்தானா பாழ்படித்தினாய்! மானிட சமூகத்தினுள் பெண் வகுப்பென்னும் புனித அணங்கினர் குழாத்தை, சித்திரவதையினுமிகப் பாதகமான கொடுமைக்குள்ளாக்கி வந்ததுமல்லாது, இன்றும் அவ்வண்ணமே உன்கபட சுரூபத்தை உபயோகித்து, பைந்தொடிகளின் நேரிய உரிமைகளைக் கவர்ந்து ஜீரணம் செய்யவும் கங்கணங்கட்டியுள்ளாய்! ஐயகோ! அதுமாத்திரந்தானா! மாந்தர் குழுவில் உயர்ந்தவர்-தாழ்ந்தவர் ஏழை-பணக்காரர், முதலாளி-தொழிலாளி ஒதுக்கப்பட்டவர் தடுக்கப்பட்டவர், என்னும் நீசத்தன மானஜாதிபாகுபாடென்னும் நாசச்சிதவை நல்கிவிட்டாய்!

அத்துடனும் நில்லாது, சுயநலமிகள், புரோகிதர்கள், மதப்பிரசாரர்கள், என்னும் பல பித்தர்களையும், நின் தாசர்களாய் நிர்ணயித்துள்ளாய். "தட்டிக்கேட்க ஆளில்லாவிடின் தம்பி சண்டபிரசண்டன்" என்னும் சொற்கிணங்க, நின்பக்தராம் அவர்கள் உன்னைவிட பன்மடங்கு வேலையில் ஈடுபட்டு, நயவஞ்சகத்தாலும், ஆஷடாபூதி வேடத்தாலும் வெருக்கதக்க உன் நாமத்தாலும், மக்களை ஏமாற்றி வயிறு வளர்ப்பது மல்லாது அன்னவர்களுக்குப் பல வழிகளிலும் இடுக்கண் விளைத்து, ஓட்டாண்டிகளாக்கி, உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, இருக்க இடமின்றி, இன்னும் பல திரப்பட்ட இன்னலாற்சிக்கி அவஸ்த்தையுறவும், மானுஷீகத்தன்மையற்ற உன்தாஸர்கள் அட்டைகள்போன்று உடல் நோவாது நகத்தில் அழுக்குப்படாது சாமான்னிய ஜனங்களின், அரும்பிரையாசை- தம்சுயப்பிரயாசையெனக்கருதிக்கவர்ந்து வயிறுபுடைக்க உண்டு நாட்டில் சோம்பேரிகளாய் திகழ்ந்து வருகின்றார்கள். என்று இன்னவர்களின் இழிதொழிலும், கொலைபாதகளும் உன் கொடுந்தொழிலும் உலைவாய் கொள்ளுமோ!

## கோலை பாதகம்.

ஐயோ! உன் (மதமே) இழிநாமத்தின் காரணமாய் இந்தியா—இல்லை, இவ் உலகத்திலேயே எண்ணற்கரிய நீசசெயல்களும், ஆராச்சியாளர்களுக்கேர்ப்பட்ட அனீத இடுக்கண்களும்-இல்லை அவர்களின் மனோ எழுச்சியின் காரணமாய் ஆராய்ச்சியில் ஈடுபட்டு மக்களின் நலத்தை விருத்திசெய்ய முயன்ற காலை-முயல்கின்றவேளை அன்னவர்களை உன் கொடிய நாமத்தால் அவர்களின் எழுச்சியை "மதத்து ரோகம்" மானவை என்றியம்பி சிறைவாசமும் முடிவில் சித்திரவதையும் ஈற்றில் கொலைக்கும் பல்லோரை ஆளாக்கினாய் ஆளாக்க எத்தனிக்கின்றாய்.

பாதகமதமே! உன் குணத்தாலும் உன்னை குலதெய்வமெனக்கருதி உய்த்துவருபவர்களாலும், உலக சமாதானத்திற்கும் சுதந்திர சுகிப்புக்கும் பொல்லாதவர் டாதகச் செயல்களை மக்கள்மரபுக்குசிருஷ்டித்தகர்த்தாவாய்திகழ்ந்தாய்-திகழவும் முற்படுகின்றாய்.மேற்கண்டஉன் காசகாரச்செயல்களைமேல்தேச, கீழ்தேசசரித்திரஆராச்சியாளர் மிக எளிதில் உணரவல்லர். (சமயம் வாகின் ஆதார பூர்வமாய் எடுத்தியம்புவேன்) ஹே! கிட்டே நீசனே!! உன் துற்கிருத்தியத்திருவிளையாட்டாலன்றோ இன்று மாந்தர்மரபு அல்லோலகல்லப்பட்டு அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறது.

## கர்ப்பத்தடை.

மண்டுக மதப்பிண்டமே! உலகில் ஜனசங்கிகையின் அதிகரிப்பினால் (குறிப்பாக இந்தியாவில்) ஏற்பட்ட வேலையில்லா திண்டாட்டத்தையும், பஞ்சப்பிணியையும், நாட்டின் க்ஷேமத்திற்குஹானி விளைவிக்கக்கூடிய பலஹீனமுள்ள அறிவு, ஆற்றல் குன்றிய ஜன உற்பத்தியைக் குறைப்பதற்கும், ஏழைக் குடும்பங்களில் அவர்களின் வருவாய்க்கு அதிகமான செலவை ஏற்படுத்தக்கூடிய உபயோகமற்ற குழந்தைகள் உற்பத்தியாகாமல் தடுப்பதற்கும், அன்னவர்கள் தங்கள் கஷ்டங்களிலிருந்து மீட்சியடைவதற்கும் மக்களின் மகிமையை உற்பத்தி செய்வதற்கும் சக்திக்கேற்ற குழந்தைகளைப்பெறவும் நாட்டின் நலத்தை பேணத்தக்க தைரியமுள்ள குழவிகளை சிருஷ்டிப்பான் வேண்டியும் இன்றைய உலகம் "கர்ப்பதடை" என்னும் மாண்புமிக்க அருங் கைங்கரியத்தில் ஈடுபட்டுழைத்துவருகிறது.

"கர்ப்பதடை" என்னும் சிரியகாரியம் உலகில் பல திக்குகளிலும் திக்விஜயஞ்செய்து இன்று நம் இந்தியாவின்கண் விஜயஞ் செய்துள்ளன. தன் திக்குவிஜயத்தில் பல பாகங்களிலும் பாதகனும் "மதம்" என்னும் உன்மத்தம்பிடித்த உன் கொடுங்கோலினும் உன் சிஷ்ய கோடிகளின் நீசச் செயல்களினாலும் பலதிரப்பட்ட இடுக்கண்களுக்கு ஆளாகி சளையா உழைப்பின் காரணமாய் ஜெயம்பெற்றன மீண்டும் உன் நாசச்செயலும் பித்துக்கொண்ட உன் சகபாடிகளின் சண்டித்தனமுமே இன்னும் இந்தியாவில் தலைவிரித்தாட ஆரம்பிக்கின்றன.

ஏ! மதமே!! உன்னுடையவும் ஒற்றர்களின் ஒத்துழைப்பையும் ஒங்காது ஒட்டுவதற்கு உத்தமிகளாம் மங்கையர் மரபு—உலக சிருஷ்டியர், மக்களில் மாணிக்கம் என்றியம்பப்படும் குழாம் இன்று நீ அவர்களுக்கு பல்லாண்டுகளாய் புரிந்துவந்த புன்செயல்களுக்கு வஞ்சகம் தீர்ப்பான்வேண்டி முழு எழுச்சியுடன் ஆக்ரோஷமே அங்கிவாரமாய்க்கொண்டு உன் மறச்செயலை மண்ணுலகினின்றும்—உன் தோற்றமே தென்படாது நீக்கிறையாக்கத் திடமான தீர்மானங்கொண்டு கிளம்பியுள்ளார்களென்பதை நினைக்கும் போது ஐயோ! உன்கெதி என்னவாகுமோ!!

பித்த நெறியே! இனியேனும் உன் இறுமாப்பை ஒழித்து உலகினின்று மறைந்தொழி!! உன் சாகாக்களை இதுகாறும் ஏமாற்றி வந்த வஞ்சக சூட்சியின் மர்மத்தை எடுத்துரைத்து அன்னவர்களை இனி அவ்வித கொடுங் கோண்மையினின்று விலக வழியை கற்றுக்கொடு.

## மகாநாடுகள்.

இவ்வுலகின் கண் ஏற்பட்டுள்ள பொருளாதார கஷ்டத்தை நிவர்த்திப்பான் வேண்டி "பொருளாதார மகாநாடு"களும் வியாபாரமந்தத்தை யோட்டுவதற்கு "ஒட்டவா மகாநாடு"களும்,நிகழ்ந்தனஉலகம் யுத்தவெறிகொண்டிருக்கின்றன. வல்லாசுகள், நாசக்கருவிகளை தினேதினே உற்பத்திசெய்வதிலேயே முயன்றுள்ளன. இவ் யுத்தவெறியென்னும் காரிருள் உலகையே இருள் மயமாக்கியுள்ளன. சகிக்க வொண்ணா மகத்தான கஷ்டம் உலகை உறுதிக்கொண்டிருக்கின்றன. இவைகளையெல்லாம் எவ்விதமும் போக்குவான் வேண்டி வல்லரசுகளொன்றுபட்டு "ஆயுதப் பரிஹார்ண மகாநாடு" களென்றும் வல்லரசுகளுக்குள் நேசப்பான்மையை சிருஷ்டிப்பான் வேண்டி "வல்லரசு உடன் படிக்கை" வியாபாரம் செழித்தோங்குவதற்கு "வியாபார ஒப்பந்தம்" சுதந்திரம் நல்குவான் வேண்டி "வட்டமேஜை மகாநாடுகள்" "கூட்டு பார்லிமென்ட்கமிட்டி" இன்னும் எண்ணத்தொலையா மகாநாடுகளெல்லாம் கூட்டிஒன்றிலேனும் எடுத்த கைங்கரியத்தை பூர்த்தி செய்யாது தொலைந்தன.

இவைகளுக்கெல்லாம் காரணம் மதமென்னும்பித்தமே!மேலேகண்ட மகாநாடுகளெல்லாம் எண்ணியதை சாதிக்கமுடியாதேன்?என்று வல்லரசுகளெல்லாம் ஒன்றுபட்டு ஒருமனித்தினர்களாகி கெடுக்கும் பாதகனாகிய உன்னை "அகில உலகமத மொழிப்பு மகாநாடு" என்னொரு மகாநாட்டைக் கூட்டி உன்னை அழிக்கின்றார்களோ அன்று தான் அன்னவர்கள் எண்ணிய கைங்கரியம் திண்ணமாய் சித்தி பெற்று இவ்வுலகை சுபிக்ஷமடைய செய்ய முடியுமென்பது திண்ணம்.

## ஐயோ சாவுமணி!!

மதம்இன்றுரஷியாவில்உன் கெதி என்னவாயிற்றென்பதை கவனி. ஸ்பெயினில்நிலை உணர்ந்தாயா? ஆங்கு மக்களை நீ,பலகாலமாய் சாம,பேத, தான தண்டம், என்னும் சதுர்வித உபாயங்களால் ஏமாற்றி வந்தாய் "சிலரை பலகால ஏமாற்றலாம் பலரை சிலகாலம் ஏமாற்றலாம், ஆயின் எல்லோரையும் எக்காலமும் ஏமாற்ற முடியுமா" என்னும் நீதிக்கிணங்கஉலுத்தகுணம்படைத்த குணத்தை ரஷியமக்களும் ஸ்பெயின்மக்களும் தெள்ளிதில் தெரிந்தவுடன் என் செய்தார்களென்பதை மறந்து விட்டாயா? ரஷியாவின் எல்லையினுள் எத்திக்கிலும் உன் முகத்தைக் காட்டாது உன் நாமமே அங்கு எவர் வாயிலும் ஸ்மரிக்க வொட்டாது செய்து விடவில்லையா?

அன்னவர்களின் அப்பிரசண்ட உக்ரக எழுச்சியை கண்டதும் "தலைதப்பியது தம் பிரான் பாக்கியம் என்பதற்கொப்ப, மூட்டை முடிச்சுகளுடன் பிடரியில் குதிக்கால்தட்ட நீ ஓட்டம் பிடித்தாயன்றோ? அவைகளை நீகிஞ்சிற்றுச்சட்டை செய்யாது மற்றநாடுகளில் மிக ஒய்யாரமாயும் மன சஞ்சலமற்றும் திரிந்து வருகின்றாய். உன்னை புதை குழிதோண்டி புதைப்பான்வேண்டி, மானிட சமூகம் உனக்குப் சதிசெய்து வருகின்றதை நீ அறியாமையினாலே [illegible] வாறு இறுமாப்புடன் இரு[illegible]றாய். தற்சமயம் உன் கெதி எ[illegible] நிலைமையில் இருக்கின்றது [illegible] யுமா? எவ்வாறு பக்கவேர்க[illegible] லாம் அழிகிப்போய் ஆணி[illegible] கரையான் (வெள்ளெரும்பு) [illegible] துக் கொண்டிருந்தால்—அம்ம[illegible] க்கு எப்போது சாவுமணி அ[illegible] மென்பது நிக்ஷயமில்லாது [illegible] குமோ—இல்லை இம்மரத்தில் [illegible] னொருவன் அதின் நிலையை உண[illegible] ஏகி இருக்கும்போது சண்டமா[illegible] கிளம்பின், அம்மரத்துடன் அ[illegible] விழுந்து பாழாவனோ அவ்[illegible] நீயும் உன்னை பின்பற்றினவர்[illegible] இருக்கின்றனர்.

ரோஜா முத்தையா

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

ஏற்பாடு செய்தார். இந்தபணத்தைக்கொண்டு கம்பெனியின் முதலை சிறிது சிறிதாக தொழிலாளிகளை வாங்கச் செய்ததால் கம்பெனியின் முதலில் பெரும் பாகம் கம்பெனியில் வேலை செய்தவர்களிடமே சொந்தமாக விருந்தது. ஆனல் கம்பெனியை விட்டகன்றவுடன் இவர்களுடைய முதல் அவர்களிடம் திருப்பிக்கொடுக்கப்பட்டது.

ஆனல் கோடின் ஐந்து வருடங்கக்குக்குறைந்து வேலை செய்த தொழிலாளிகளை மறந்துவிடவில்லை. மொத்த லாபத்தில் ஓர் பாகம் தொழிலாளிகளின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்ட பலஸ்தாபனங்களுக்கு கொடுக்கப்பட்டதென்று நாம் முன் சொன்னேமல்லவா? இப் பணத்தை வியாதி நிவர்த்திக்கவும், கர்பிணிகளுக்கு பண உதவி செய்யவும், கல்வி கற்பிக்கவும், கூலியாள்களுக்குலைப் இன்ஷ்யூரன்ஸ் செய்யவும் உபயோகிக்கபட்டது. தவிரவும் கூலியாள்களுக்கு பென்ஷன் கொடுக்கவும் இப் பணம் உபயோகப் படுத்தப்பட்டது.

இங்கிலாந்தில் தொழிலாளி பங்காளித்தவமும், லாபப்பிரிவினையும் விரைவாகப்பரவி வருகின்றது. உலகமெங்கும் பிரபலமான சன்லைட் சோப் தயாரிக்கப்படும் போர்ட்ஸன்லைட் தொழிற்சாலையிலும், டெய்லர் கம்பெனியின் கம்பிளி நெசவு ஆலயத்திலும், மோடார் செய்யப்படும் ஆர்ம்ஸ்ட்ராங் விட்போர்த் கம்பெனியிலும் இன்னும் மற்ற தொழிற்சாலைகளிலும் லாப பிரிவினையும் ஒரு மாதிரியான தொழிலாளி பங்காளித்வமும் கையாளப் படுகிறது. அமெரிக்காவில் பல பிரபல கம்பெனிகளிலும் லாப பிரிவினை ஏற்படுத்த பட்டிருக்கின்றது. இங்கிலாந்தில் வெகுவாக நிலக்கரியில் காஸ் செய்யும் கம்பெனிகள் லாப பிரிவினையையும் தொழிலாளி பங்காளித்வத்தையும் கடைபிடித்து ஒழுகுகின்றன.

அமெரிக்காவில நெல்ஸன் கம்பெனியார் லாப பிரிவினையை இன்னும் சிறிது தூரம் கையாண்டு வருகின்றனர். லாப பிரிவினையில் சாமான்களை வாங்கும் பொதுஜனங்களுக்கும் லாபம் கொடுக்கப்பட வேண்டுமென்று மிஸ்டர் நெல்ஸனின் கருத்து. அதற்காக அவர் தங்கள் சாமான்கள் வாங்குபவர்களுக்கு நிகர லாபத்திய ஒரு ரிப்போர்ட் கொடுக்கின்றார்.

பல தொழில் கக்ஷிக்காரர்கள் லாப பிரிவினையையும் தொழிலாளி பங்காளித்வத்தையும் பலமாகக்கண்டனம் செய்கின்றனர். ஏனெனில்லாபப் பிரிவினையால் தொழிலாளிகளின் ஒற்றுமை குறைந்து விடுகின்றதென்றும், தொழிலாளி தனது சொந்த லாபத்தைக் கருதி மற்ற தொழிலாளிகளுடன் ஒத்துழைத்து வேலைநிறுத்தம் செய்யச் சற்றுத்தயங்குவானென்றும் தவிரவும் லாபப்பிரிவினையால் ஏற்படும் லாபமனைத்தும் தொழிலாளிகளுக்குக் கூலியாக கொடுக்கவேண்டிய பணமேயன்றி வேறல்லவென்றும் இவற்றைப் பிடித்துவைப்பதால் தொழிலாளிக்கு மற்ற தொழிலாளிகளுடன் சேர்ந்து வேலைநிறுத்த சுதந்திரமில்லாமல் போய்விடுகின்றதென்றும் கருதுகின்றனர். தவிரவும் லாப பிரிவினையை மட்டும் ஆதரிப்பதால் லாபமில்லாமல் போனவருடங்களில் தொழிலாளி ஊக்கத்துடன் வேலை செய்வதற்குத் தகுந்த ஊதியமில்லாமற் போய்விடலாமென்றும் நல்லெண்ணமில்லாத சுயநலஸ்தர்கள் ஓர் போலி லாபப் பிரிவினையை ஒழுகி கூலிக்காரனை மீண்டும் மீண்டும் அதிக வேலை செய்யச் சொல்வதற்கிடம் கொடுக்கின்றதென்றும் சொல்லப்படுகிறது.

தூர் எண்ணமுள்ள முதலாளிகள் மேற்சொன்ன கண்டனத்துக்கு இடம் கொடுத்திருக்கின்றார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. தொழிலாளி பங்காளித்வம் டிரேட் யூனியன்களுக்குப் போட்டி போடுவதாக கருதப்படக்கூடாது. டிரேட் யூனியன்கள் அந்தந்த தொழில்களில் ஓரேமாதிரி வேலைக்கு கூலி நிர்ணயிக்க ஏற்படுத்தப்பட்ட அமைப்புகள் அவை பயமுறுத்தியும், வேலைநிறுத்த மூலமாயும் அந்தந்தத் தொழில்களுக்கு நியாயமான கூலியைப் பெற முயலவேண்டும். டிரேட்யூனியன்களின் முக்கிய எண்ணங்களை லாபப் பிரிவினையும் தொழிலாளி முதலாளித்வமும் ஒருக்காலும் செய்யமுடியாது. ட்ரேட் யூனியன்களில் எல்லாத் தொழிலாளிகளும் மெம்பராக இருக்கவேண்டியது அவசியம். நியாயமான கூலி கொடுத்தபின்பு நிகர லாபத்தில் தொழிலாளிக்கு ஒருபாகம் கொடுக்க ஏற்பாடு செய்வது மனிதனுக்குத் தன் தொழிலில் ஒரு சந்தோஷமும், ஊக்கமும் ஏற்படுத்தத்தான் அதற்கிடமிருக்கின்றதென்பதற்குச் சற்றும் சந்தேகமில்லை. மேலும் தொழிலாளி பங்காளித்வமும் லாபப் பிரிவினையும் டிரேட்யூனியன்களுக்குப் பலத்தை அளிக்கக்கூடும். ஏனெனில் சிறிது பணமுள்ள தொழிலாளிகள் வெகுநாள் கூடி வேலைநிறுத்தம்செய்ய நன்கு முடியும். ஏழ்மையால் பீடிக்கபபட்ட கூலிஆள்கள வேலைநிறுத்தங்களில் தோற்கடிக்கப்படுவர் என்பதில் சந்தேகமில்லை. லாப பிரிவினையால் தொழிலாளிகளுக்குச் சேரும் பணம் அவர்களுக்கு பலத்தை கொடுக்குமேயன்றி வேறல்ல.

ஆனல் தொழிற் கக்ஷிக்காரர்கள் சொல்வதுபோல் லாபப்பிரிவினையை சற்று கவனிக்கவேண்டும். கூலியை குறைத்து வாராவாரம் பிடித்து லாபப்பிரிவினையில் தொழிலாளியின் பாகம் என்று கோஷித்துக்கொண்டு ஆட்டுத்தோல் போர்த்தி திரியும் சுயநலத்தையே கருதும் முதலாளிகளிடம் ஏமாறக்கூடாது. ஓரேமாதிரி வேலைக்கு டிரேட்யூனியன் நிர்ணயிக்கும் கூலியை கொடுக்காத லாபபிரிவினை லாபப் பிரிவினையாகாது.

இங்கிலாந்தில் பல கூட்டுறவு ஸ்தாபனங்கள் பெரும் தொழிற்சாலைகளை ஏற்படுத்தியிருக்கின்றன. ஆனல் அவை பெரும்பாலும் லாப பிரிவினையும் தொழிலாளி, பங்காளி தத்துவத்தையும் கையாளாததுவருந்தத்தக்கது. சிலர் லாபபிரிவினை கூட்டுறவு ஸ்தாபனங்களில் ஒப்புக்கொள்வது நியாயமல்லவென்று எண்ணுகின்றனர். ஏனெனில் லாபம் என்பதே நியாயமானவிலைக்கு மேல்சாமான்களினுடைய விலை தூக்கிவைத்ததால் ஏற்படுத்தப்பட்டதென்றும் இந்த லாபத்தை நியாயமென்று ஒப்புக்கொள்வது பொதுஜனங்களுக்கு பெரும் துரோகமென்பது அவர்களுடைய கக்ஷி. இது நியாயமல்ல. தொழிலாளிகளுக்கு தங்களுடைய வேலையில் உர்ச்சாகத்தை கொடுக்கவேண்டுமென்று எல்லோரும் ஒப்புக்கொள்ளப்பட்டதே இந்த உர்ச்சாகத்தை எப்படி ஊட்டுவது? தானும் சாமான்களைவாங்கி சாப்பிட்டு, அழிக்கும் பொதுஜனங்களி லொருவன் (Consumer) என்பது சாதாரண மனித புத்திக்கு எட்டாததத்வமென்பதில் சந்தேகமில்லை. சாதாரண தொழிலாளிக்கு கூட்டுறவு சொசைட்டி எஜமானனயிருந்தாலென்ன? பணக்கார முதலாளி எஜமானனயிருந்தாலென்ன? தேச கவர்ன்மெண்டே எஜமானனயிருந்தாலென்ன? அவன் செய்யும் வேலையில் உர்ச்சாகத்திற்கு இடமேயில்லாமல் போனல் அவன் கழிப்பிணியாக மாறுவது வெகு சுலபம். சமீபகாலத்தில் 'தொழிற்சாலைகள் தொழிலாளிகளுக்கு' என்று ஏற்படும் சத்தத்தின் தாத்பர்யமென்ன?

தொழிலாளிபங்காளித்வமும், லாப பிரிவினையும் எங்கும் பரவவேண்டுமென்றும், எல்லாவித ஏற்பாடுகளை விட இது மேன்மையான ஏற்பாடென்றும் வாசகர்கள் நினைக்கக்கூடாது. பலவிடங்களில் லாப பிரிவினை மட்டும் சாத்யமேயன்றி தொழிலாளி பங்காளித்வம் அசாத்யமென்பதற்கு ஐயமில்லை. பொது உரிமைகளாககப்படவேண்டிய போக்குவரவு சாதனங்கள் முனிசிபல், டிராம்வேக்கள், மின்சார வதிகள், சுரங்கங்கள்,—இவற்றில் லாபபிரிவினை கூட அசாத்யம். ஏனெனில் எந்த கவர்ன்மெண்டும் இவைகளை சிக்கனமாகச் செய்து எல்லா ஜனங்களுக்கும் நன்மையை அளிக்கக்கடமைப்பட்டிருக்கின்றனர். லாபம் ஏற்படில் இச்சாதனங்களின் விலைகளைக் குறைப்பது தான் உத்தமமேயன்றி கூலி ஆள்களுக்கு லாப பிரிவினையாகப் பிரித்துக்கொடுப்பது இயலாது. தவிரவும் தொழிலாளி பங்காளிதவ இந்த முக்கிய விஷயங்களில் கையாளப்படுவது அசட்டுத்தனம். இவையெல்லாம் கவர்ன்மெண்டினுடையதாக இருக்கவேண்டும்.

மற்றொரு புறத்தில் புதிய புதிய சாமான்களைச் செய்யவும், கண்டுபிடிக்கவும், முன்போல் சிறிய முதலாளித்வம் இருக்கவேண்டியது அவசியம். சாதாரண மனிதனுக்கு சுயநலம் தான் பெரிது. அவன் புத்தியைப் பொதுநலத்திற்காக உபயோகப்படுத்த அவனல் இயலாது. ஆகையால் சிறிது காலத்திற்கு அவனல் புதிதாகக்கண்டு பிடிக்கப்படும் இயந்திரங்களிலும், சாதனங்களிலும் ஏற்படும் லாபத்தை அவனுக்கு சேர சுதந்திரம் கொடுக்கப்பட நேரிடும்.

இவற்றிற் கிடையே தொழிலாளி பங்காளித்வமும், லாப பிரிவினையும் ஓங்கி வளரும் என்பதற்குச் சந்தேகமில்லை. பெரும் இயந்திரசாலைகளிலும், வியாபாரத்திலும் இந்த தத்துவங்கள் கையாளப்படும். தற்பொழுதுகூட பிரான்ஸில் சட்ட பூர்வமாக லாப பிரிவினையை ஆதரிக்கப் பல பிரரேபணைகளிருக்கின்றன. லாப பிரிவினையையும் தொழிலாளி முதலாளித்வத்தையும் கையாளும் ஸ்தாபனங்களுக்கு சில வரிகளில் குறைந்த ரேட்டு ஏற்படுத்துவது நியாயமாகத் தோன்றுகிறது. அவற்றை ஏற்படுத்தினல் தான் இன்னும் பல முதலாளிகள் இந்த புதிய தத்துவத்தைக் கடை பிடிக்க திரள் திரளாக ஆரம்பிப்பர்.

---

## விதவை மண நாடகம்.

கோலாலம்பூர் செந்துல் இந்திய சுயமரியாதை சங்கக்கட்டிட நிதிக்காக 9-12-33ல் சனிக்கிழமை அன்று இரவு 8மணிக்கு தொடக்கமாய் கோலாலம்பூர் நகர மண்டபத்தில் (டவுன் ஹாலில்) தோழர் மா. செ. பரிமணம் அவர்களால்நாடகரூபமாக அமைக்கப்பட்ட கமலநாதன் அல்லது விதவையின் மறுமணம் எனும் சரிதை வெற்றிகரமாக அதிவிமரிசையுடன் நடைபெற்றதுஎன்று ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

---

## அநுதாபக் கூட்டம்.

30-12-33 சனி மாலை வரகநேரி சர். பி. தியாகராயர் வாசகசாலையில் சங்கத்தலைவர் எ. தனசாமி. அவர்கள் தலைமையில் கூட்டங்கூடிவருஷக்கணக்குகளைபார்வையிடப்பட்டு அடியில்காணும் அநுதாபதீர்மானம் நிறைவேற்ற கூட்டம் முடிவுற்றது.

தீர்மானம்.

26-12-33ல் பாலக்கரை பரபல வியாபாரியும் பொதுஜன அன்பருமாகிய என். எம். மரியதாஸ் அவர்கள் பிரிவாற்றுமைக்கு இச்சங்கம் அன்னரின் குடும்பத்தாருக்குபூரண அநுதாபத்தை தெரிவித்துக்கொள்ளுகிறது. (ஒரு நிருபர்)

# இரண்டாவது 5-வருஷ திட்டம்.

## ருஷிய சர்க்கார் தீர்மானம்

### உற்பத்தியை அதிகப்படுத்துவதில் தீவிரம்

ருஷிய சர்க்கார் இரண்டாவது 5 வருஷ திட்டமொன்றைக் கைக்கொள்ள உத்தேசித்திருக்கிறார்கள். அது சம்பந்தமான விவரங்களும் வெளியாகியிருக்கின்றன. முதல் 5 வருஷ திட்டம் 1932,ல் பூர்த்தியாயிற்று. 1937-ம் வருஷத்தில் உற்பத்தி 1932ல் இருந்ததைக்காட்டிலும் 2½ மடங்கு அதிகமாக, அதாவது சென்ற யுத்தத்திற்கு முன்னர் இருந்ததைக் காட்டிலும் 9 மடங்கு அதிகமாக இருக்கவேண்டு மென்பதே புதிய திட்டத்தின் நோக்கமாகும். 7000 மைல்தூரம் புதிதாக ரயில்பாதையை அமைக்கவும், விவசாய உற்பத்தியை இரட்டிப்பாக்கவும் தீர்மானித்திருப்பதுடன் மோட்டார் வண்டிகள் உற்பத்தியை 100-க்கு 30 வீதம் அதிகப்படுத்த வேண்டு மென்றும் தீர்மானித்திருக்கிறார்கள். (த-நா)

# ருஷிய காங்கிரஸ்.

## பொருளாதார விருத்தியில் தீவிரம்.

ருஷிய பொதுவுடமை காங்கிரஸ் ஜனவரி மாதத்தில் நடைபெறும். புதிய 5வருஷ திட்டத்தைப்பற்றியும், உக்ரேரியன்பிரச்சினையைப் பற்றியும் மற்றும் பல முக்கியமான விஷயங்களைப்பற்றியும் விவாதம் நடைபெறும். 70லக்ஷம். தனிப்பட்ட "குலாக்" விவசாயிகள் இனியும் சொந்த முறையில் விவசாயம் நடத்தி வருகிறார்கள். சோவியத் யூனியனில் தனிப்பட்ட விவசாய முறையை முற்றிலும் ரத்து செய்து அவர்களையும் பொது உடமையில் சேர்க்க முயற்ச்சிகள் நடைபெறும். இதுவரை2கோடி "குலாக்கு" கள் பொதுவுடமையில் சேர்ந்து விட்டனரென்பது குறிப்பிடத்தக்கதாகும். இதர 70 லக்ஷம் பேர்களும் அநேகமாக பொதுவுடமையில் சீக்கிரத்தில் சேர்ந்து விடுவரென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. குலாக்குகளை சைபிரியாவுக்கு அனுப்பி வைத்து அங்கே விவசாயத்தையும் பால் பண்ணையையும் விசேஷமாக அபிவிருத்தி செய்ய அவர்களுக்கு சௌகரியங்களளிப்பர், இப்புதியதிட்டம் பூர்த்தியானால் வெண்ணெய் மிக மிக மலிவாகக்கிடைக்கும்.

பின்னர் புதிய 5வருஷதிட்டம், காங்கிரஸில் விவாதத்திற்கு வரும். போக்கு வரத்து சம்பந்தமான பிரச்சினைகளைப்பற்றியே முக்கியமாக கவனிப்பர். ரயில்வேக்களை எல்லாம் புதிய முறையில் கட்டுப்பாடாகவும் அமைப்பதன்றி ரயில்வேக்களுக்கு உதவியாக, மோட்டார் பஸ், லாரிசர்விஸ்களையும்ஏற்படுத்துவர். விமானப்போக்கு வரத்து சௌகரியங்கள் அதிகரிக்கப்படும். உக்ரேரியன் பிரச்சினை காங்கிரஸில் பகிரங்க விவாதத்திற்கு வராது. ஸ்டாலின் மோலோடாப், இவர்களும் மற்றும் 3பேர்களும் அடங்கிய ஓர் கமிட்டியில் இவ்விஷயமாக அந்தரங்கமாக விவாதம் நடைபெறும்.

## சுயமரியாதை இளைஞர் மன்றம். சென்னை

காங்கிரஸ் சூழ்ச்சி பலிக்கவில்லை

சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றத்தின் சார்பில் 1-1-34 திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு சென்னை பீபில்ஸ்பார்க் (கார்ப்பரேஷன் கட்டிடத்துக்கு பின்புறமுள்ள மைதானத்தில்) ஓர் பொதுக்கூட்டம் நடைப்பெற்றது. அவ்வமயம் தோழர். கே. எம். பாலசுப்பரமண்யம். பி. எ. பி. எல். அவர்கள் தலைமையில் தோழர்கள். டி. எம். பார்த்தசாரதி, ஆர். நடேசன் ராமசுப்ரமணியம். எஸ், நீலாவதி ப. ஜீவானந்தம். எஸ். வி. லிங்கம். முதலியோர் "சமதர்மம்" என்பதைப்பற்றி மிக விளக்கமாக பேசினார்கள். சில விஷமிகள் கூட்டத்தை கலைக்க முயன்று பல அர்த்தமற்ற கேள்விகளை கேட்டார்கள். அதற்கு ஜீவானந்தம். லிங்கம் முதலியோர். தக்க பதில் அளித்து இரவு 9-30-மணிக்கு கூட்டம் சிறப்பாக முடிந்தது.

(காரியதரிசி)

## சூலூர் சுயமரியாதை இளைஞர் மன்றம்.

இச்சங்கத்தின் தலைவரும், யூனியன் போர்டு மெம்பரும் பிரபலதனவந்தருமான தோழர். எஸ். எல். எஸ். மணியம் அவர்கள் சென்ற இரண்டு வாரகாலமாக. வட இந்தியா சுற்றுப்பிரயாணம் செய்து பம்பாய், பூனா, முதலான இடங்களில் பார்வையிட்டுவிட்டு 2-1-34 தேதி காலை இங்கு சுகமே திரும்பி வந்துள்ளார்கள், என்னும் செய்தியை மகிழ்ச்சி உடன் தெரிவித்துக் கொள்கிறோம்,

## பொதுக்கூட்ட அழைப்பு.

13-1-1934 தேதி சனிக்கிழமை பகல் 1-30 மணிக்கு சூலூர் சந்தைப் பேட்டையில் திருச்சி எஸ். நீலாவதி அவாகள் தலைமையில் தோழர்கள் திருசசி ராமசுப்ரமண்யம் பூவாளூர் அ. பொன்னம்பலம் முதலானவர்கள் முறையே சுயமரியாதை இயக்கம், சமதர்மம் என்பதுபற்றி சொற்பொழிவாற்றுவார்கள் அவ்வமயம் யாவரும் தவறாமல் வரவேண்டுமாய் கோறுகிறோம்,

இங்ஙனம்,
சூலூர் சுயமரியாதை
இளைஞர் சங்கம்.

## தென்னிந்திய ரயில்வே ஓர்கர்ஸ் யூனியன் மாயவரம் (பிராஞ்சு.)

சென்ற 28-12-33ந்-தேதி மாலை 6மணிக்கு மாயவரம் சந்தைத்தோப்பில் துண்டுப்பிரசுரம் மூலம் தெரிவித்த படி தோழர் எஸ். வேணுகோபால் அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஷை கூட்டத்தை ஆரம்பித்து வைக்கும் முறையில் தோழர் டி. கிருஷ்ணசாமி அவர்கள் சங்கத்தினால் அடைந்த அடையப்போகும் நன்மைகளையும், தொழிலாளர்களின் உரிமைகளையும், கடமைகளையும் விவரித்து வருங்காலம் தொழிலாளர்களே உலகத்தை ஆட்சிபுரியப்போகின்றார்கள் என்றும் வீண் வதந்திகளை நம்ப வேண்டாமென்றும் உபந்நியாசித்த பின்னர் அடியில் கண்டபடி சங்க உத்தியோகஸ்தர்கள் தேர்தல்செய்து தீர்மானங்களும்நிறைவேறியபின் கூட்டம்இனிது கலைந்தது.

### மாயவரம் கிளைச்சங்க உத்தியோகஸ்தர்கள்.

தலைவர்: —
எஸ். ராஜரெத்தினம் பிள்ளை.
காரியதரிசி:—
ஜி. நாராயணசாமி.
உபகாரியதரிசிகள்:—
டி. பிச்சைப்பிள்ளை, டி. பக்கிரிசாமி பிள்ளை, சி. நடராஜன்
பொக்கிஷதார்:—
டி. பக்கிரிசாமி பிள்ளை டிரைவர்.
கமிட்டி மெம்பர்கள்:—
எஸ். வேணுகோபால், ஜி. நாராயணசாமி நாயுடு பிட்டர், என். பெருமாள், ஜி. சாம்ப மூர்த்தி டி. பால சுப்பிரமணியம்.

### தீர்மானங்கள்.

(1) திருசசி ஓர்கர்ஸ் யூனியன் மத்திய கௌன்சில் அங்கத்தினர்களாக தோழர்கள் எஸ். ராஜரத்தினம் ஜி. நாராயணசாமி இவர்களை நியமிக்கிறது.

(2) இச சங்கத்தின் எல்லை வடக்கே. கடலூர் என். டி. மேற்கே கும்பகோணம். கிழக்கே தரங்கம்பாடி தெற்கே பேரளம் காரைக்கால், தரங்கம் பாடி கிளை லயன்கள் இவைகளுக்கு உட்பட்ட ரயில்வே தோழர்கள் யாவரும் இச்சங்கத்தில் அங்கத்தினராகக்கருதவேண்டும்.

(3) தென்னிந்திய ரயில்வே. தொழிலாளர்கள் யாவரும் நாகப்பூர் அகில இந்திய ரயில்வே உபகார நிதியில் அங்கத்தினர்களாகும்படி இக்கூட்டம் வற்புறுத்துகிறது.

(4) இக்கூட்டம் கூடிய சீக்கிரம் தோழர் டி கே. அவர்களை தென்னிந்திய ரயில்வே தொழிலாளர் மகாநாட்டை கூட்டும் படிக்கும், தொழிலாளி பத்திரிகையை ஆரம்பித்து தொழில் இயக்கத்தை பெருகும் படிக்கும் கேட்டுக் கொள்ளுகிறது.

(5) இக்கூட்டம் மாயவரம் ரயில்வேதோழர்கள் வீட்டு வசதி இன்றி கஷ்டப்படுவதால் புதிய வீடுகள் கட்டிக்கொடுக்கும்படி கம்பெனியை வற்புறுத்த வேண்டிய நடவடிக்கையை உடனே எடுத்துக்கொள்ளும்படி மத்திய கௌன்சிலைக் கேட்டுக்கொள்கிறது.

## சண்முகநாதபுரம் சமதர்மச்சங்கம்.

இந்நகர் வாலிபர்களின் பேருணர்ச்சியால் 1-1-1934திங்கள் கிழமை பிற்பகல் 4மணிக்கு சமதர்மத்தைப் பெயராகக் கொண்ட ஓர் சங்கமொன்று நிறுவப்பெற்றது. சங்கத்திற்கு தோழர் சோம. சேதுராமன் அவர்கள் தலைவராகவும் சா. சாத்தய்யா அவர்கள் உபதலைவராகவும். உ. உடையப்பா அவர்கள் காரியதரிசியாகவும் அங்கத்தினர்களால் ஆமோதிக்கப்பட்டது. இது வரை 28 அங்கத்தினர்கள் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றனர். சங்கத்திற்கு வரவழைக்கப்பட்ட பத்திரிகைகளை தோழர்கள் படித்தனர். பின்னர் சிற்றுண்டி வழங்கப்பெற்று 6மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது. சங்க வளர்ச்சிக்குப் பொருளுதவியும் பிறவுதவியும் செய்த தோழர்கட்கு எமது சங்கத்தின் சார்பாக மகிழ்ச்சியைத் தொரிவித்துக்கொள்ளுகின்றோம். வெளியூர்களிலிருந்து பல தோழர்கள் வந்திருந்தமை குறிப்பிடத்தகுந்தது. (காரியதரிசி)

## சோம சுந்தரன் உடற்பயிற்சிக் கூட்டம்.

சமதர்மச்சங்கத்தின் சார்பாக தென்னாட்டுப்பலவான் தோழர் லெ. சோமசுந்தரன் அவர்கள்பேரால் காலை மாலை இரு வேளையும் சங்க அங்கத்தினர்கள் பயிற்சி செய்து வருகின்றனர். சோம சுந்தரனர் உடற்பயிற்சிமுறைகளே பழகப்பெற்று வருகின்றது சங்கத்தலைவர் தோழர் சே ம சேதுராமன் அவர்கள் இரு வேளையும் வந்து பயிற்சி அளித்து வருகின்றார்.

## மீனாட்சி சொக்கர் திருமணத்தில் விதவா விவாக வெளியீடு வழங்கப்பட்டன.

புதுக்கோட்டை ஸ்டேட் குளிபிரை என்ற ஊரில் வாழும் நகரத்தார்களால் கொண்டாடப்படும் மார்கழி திருவிழா வென்னும் மீனாக்ஷி சொக்கர் திருமணத்தில் கோலாலம்பூர் சு. ம. சங்க தலைவர் தோழர் எம். எஸ். பரிமணம் அவர்களால் எழுதப்பட்டு தோழர் ப. கா. வீராசாமி அவர்களால் வெளியிடப்பட்ட ரதி மணிகள் ஸ்ரீலமை என்னும் புத்தகத்தை நூற்றுக்கணக்காக சு. ம. தோழர்களால் இனமாக வழங்கப்பட்டது. ஷையூரில் ஷை வெளியீட்டை வழங்கியதால் மிகுந்த பரபரப்பு ஏற்பட்டிருப்பது. குறிப்பிடத்தக்கது. (ஒரு நிருபர்)

(4-பக்கத் தொடர்ச்சி)

கள் அவரைப் பின்பற்றுகிறார்கள் என்பதுதான் கேள்வி. காந்தி சொன்னதை நாங்கள் செய்வோம் என்று ஒரு மானமுள்ள அறிவாளி கூறமாட்டான். ஒருவரிடத்தில் ஈடு வைத்த மனதுடைய ஒருவனுக்கு அறிவாளி என்று பேர் கொடுக்க நாம் ஒருக்காலும் ஒருப்படோம்.

இன்று காந்தியார் தீண்டாமை என்ற உருவத்திற்கு சித்திரவேலை செய்கிறார். நமதியக்கத்திற்குப் போதிய பலமில்லை என்று கூறுவது காரணமாகாது. திருட்டைக் கண்டு பிடிப்பதற்கு ஒரு சில கூட்டம் போதும். தீமைசெய்வதற்குப்பல்லாயிரக் கணக்கானவர்கள் நாட்டில் இருக்கிறார்கள் என்றால் அப்பொழுது தீமைதான் ஒழுங்கு என்றுகூறும் தன்மை நமக்கு வேண்டாம். எதையும் நமதறிவுக் கண்ணால் நோக்குவோம். கண்மூடித் தனமாய் பின்பற்றும் தன்மைகளை விட்டொழிப்போம் என்றுதான் கூறுகிறேன். நமது இன்றைய மகாநாட்டின் நோக்கம், மதம், கடவுள் ஒழியவேண்டும். அதை மெருகு கொடுத்துப் புகழுபவர்களின் மதிப்பை அழிக்கவேண்டும் என்பதேயாகும். நம்மை என்னவேண்டுமானாலும் திட்டிக்கொள்ளட்டும். நமக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. ஆனால் நம்மை ஏமாற்றி விடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். உலகத்திலேயே நாஸ்திகனுக்குத்தான் அதிக பொறுப்பு இருக்கிறது. ஆஸ்திகன் பொறுப்பு அந்தராத்துமாவாக ஆகிறது. நான் தப்பு செய்து விட்டேனானால் அதற்கு நான் உண்மையில் உரித்தானவர் ஆகிறேன். உடனே திருத்திக்கொள்ளவேண்டுமென்று உணருகிறேன். ஆஸ்திகன் அப்படியல்ல என்ன தப்பு வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் ஒரு தேங்காயோ, பாவசங்கீர்த்தனப் பெட்டியோ அவ்வயோக்கியத்தனங்களை நிவர்த்தி செய்து விடும். அப்படியானால் உலகில் தேங்காய் இருக்கும் வரையிலும் பாவசங்கீர்த்தனப் பெட்டியிருக்கும் வரையிலும் அயோக்கியத்தனங்கள் இருக்குமென்பது உங்களுக்கு விளங்கவில்லையா? ஜட்ஜ், மாஜிஸ்திரேட் ஆகியவர்கள் பச்சை நாஸ்திகர்களே. இன்று ஒருவன் குற்றம் செய்து விட்டால் அதைக் கடவுள் தண்டிப்பார் என்னும் நம்பிக்கை அவருக்குக் கிடையாது. யோசித்துப்பாருங்கள். உங்கள் சிறுவர்களுக்கு பள்ளிக்கூடங்களில் மதம், கடவுளைப் புகட்டுகிறார்கள். இப்பொழுதே ஜாக்ரதையுடனிருக்கிறார்கள். நாஸ்திக மகாநாடுகளை எங்குபார்த்தாலும் கூட்டி மக்களுடையகடவுள் நம்பிக்கையை ஒழியுங்கள் என்று கூறி இம்மகாநாட்டைத் துவக்குகின்றேன்.

மகாநாட்டு வரவேற்புக்கழகத்தலைவர் காஞ்சிபுரம் தோழர். சி. கே. குப்புசாமி அவர்கள் பிரதிநிதிகளை வரவேற்று தனது பிரசங்கத்தைப் படித்து முடித்தார்.

மகாநாட்டுத்தலைவர் சென்னை தோழர். எம். சிங்காரவேலு பி. ஏ. பி. எல்., அவர்கள் தலைமை வகித்து தனது முன்னுரைப் பிரசங்கத்தைப் படித்தார். (அது புரட்சியில்சென்ற வாரம் வந்து விட்டது.)

பின் தோழர்கள், ப. ஜீவானந்தன், அ. பொன்னம்பலம் ஆகியவர்கள் "நாஸ்திக மகாநாட்டின் அவசியம்" "நமது எதிர்கால வேலை" என்பது குறித்து நீண்ட விரிவுரை நிகழ்த்தினார்கள். பகல் 12-மணிக்கு சாப்பாட்டுக்கு முற்பகல் நிகழ்ச்சி முடிந்து கலைவுற்றது.

## பிற்பகல் நடவடிக்கை.

மகாநாடு மீண்டும் பகல் 2 மணிக்கு ஆரம்பமாயிற்று. தோழர்கள் நாராயணம்மாள் முதலியவர்கள் சமதர்மக் கீதங்கள் பாடினார்கள். பின்னர் மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள் விபரம் வருமாறு:—

## நிறைவேறிய தீர்மானங்கள்.

(1) மனித ஒற்றுமைக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் பெருந் தடையாக இருப்பது "கடவுள்" நம்பிக்கையும் அதிலிருந்து ஏற்படுகிற மத சம்பிரதாயங்களும்தான் என்று இம்மகாநாடு நிச்சயமாக உணர்வதால் மனிதர்கள் தன்னம்பிக்கையோடும், தன் முயற்சியோடும் முன்னேற்றமடையவேண்டில் கடவுள் நம்பிக்கையைப் பூர்ணமாக ஒழிக்கவேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

பிரரேபித்தவர்.
எஸ். ராமனுதன்
ஆமோதித்தவர்.
பாரதிதாசன்
ஆதரித்தவர்கள்.
அல்பான்சோ லகாஷ்
சாமிசிதம்பரனார்.
டி. எம். பார்த்தசாரதி

2. மதஸ்தாபனங்களின் மூலமும், பள்ளிக்கூடங்களின் மூலமும் பெற்றோர்கள் வற்புறுத்தலின் மூலமும் நமது தேசத்து மக்கள் இளமையிலேயே மத நம்பிக்கையிலும் மதப் பழக்கங்களிலும் புகுத்தப்படுவதைத் தடுக்க பள்ளிப் பிள்ளைகளிடம் தீவிரப் பிரசாரம் செய்யவேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

பிரரேபித்தவர்.
கே. எம். பாலசுப்பிரமணியம்
ஆமோதித்தவர்.
சி. டி. நாயகம்
ஆதரித்தவர்கள்.
நடேசன்
அமிர்தவாசகம்
எல். ராமசாமி
எஸ். குருசாமி
எஸ். அருணகிரிநாதர்

3. தீண்டாமைவிலக்கு என்னும் பெயரால் காந்தியார் செய்துவரும் கடவுள் பிரசாரமும், மதப் பிரசாரமும் ஏழைகளை மேலும் மேலும் ஏழ்மைப்படுத்தி மதவாதிகள் பணக்காரர்கள் முதலியவர்களை மேன்மைப்படுத்தி வருவதால் அவருடைய கொள்கையையும், பிரசாரத்தையும் இம்மகாநாடு மிகவும் வன்மையாய்க் கண்டிக்கிறது.

பிரரேபித்தவர்.
அ. பொன்னம்பலனார்
ஆமோதித்தவர்.
ராமசுப்பிரமணியம்
ஆதரித்தவர்கள்.
எஸ். நீலாவதி
வி. பி. எஸ். மணியர்
டாக்டர் எம். மாசிலாமணி முதலியார்
ப. ஜீவானந்தம்

4. சென்னை மாகாண நாஸ்திக சங்கம் ஒன்று அமைத்து, அதன் மூலம் மதப்பிரசாரங்களுக்கும், ஆஸ்திகப் பிரசாரங்களுக்கும் எதிரிடையாக வேலை செய்யவேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

தலைவர்:- எம். சிங்காரவேலு
உபதலைவர்கள்:-
எஸ். ராமநாதன்
காஞ்சீபுரம் நாஸ்திக குப்புசாமி
சென்னை சி. டி. நாயகம்
ஈரோடு ஈ. வெ. கிருஷ்ணசாமி
திருச்சி எஸ். நீலாவதி
சென்னை டி. எம். பார்த்தசாரதி
ஈரோடு ஏ. அன்னபூரணி
வில்லிவாக்கம் அய்யாக்கண்ணு [மேஸ்திரியார்]
சென்னை வி. பி. எஸ். மணியர்
பொக்கிஷதார்:-
ஜோலார்பேட்டை வி. பார்த்தசாரதி
காரியதரிசிகள்:-
அ. பொன்னம்பலம்
ப. ஜீவானந்தம்
டி. என். இராமன்
கமிட்டி மெம்பர்கள்:.
எஸ், குருசாமி [சென்னை]
கே. எம். பாலசுப்பிரமணியம் [சென்னை]
பாரதிதாசன் [புதுவை]
எஸ் வி. லிங்கம் [மாயவரம்]
சி. நடராஜன் ,,
கே. ஆர். ஜி. பால் [மன்னார்குடி]
கே. வி. அழகர்சாமி [பட்டுக்கோட்டை]
ச: ம. சி. பரமசிவம் [திருச்சி]
இராமசுப்பிரமணியம் [திருச்சி]
ஆர். நடேசன் [சேலம்]
சுந்தரராஜன் [கோவை]
எ. ஏ. ஆறுமுகம் [மதுரை]
தங்கமணி ,,
ஏ, என். வெங்கிடசாமி [தூத்துக்குடி]
எஸ். குற்றாலலிங்கம் [திருநெல்வேலி]
ஏ. இராமநாதன் [திருநெல்வேலி]
திரவியம் [நாகர்கோவில்]
ராமசுப்பையா [காரைக்குடி]
எஸ். ஆர். எம். வெங்கிடாசலம் [சிவகெங்கை]
மகாலிங்கம [விருதுநகர்]
டி. டி. நாராயணசாமி [திருவிசைநல்லூர்]
மணி [நாகை]
டி. எ. ஏகாம்பரம் [தஞ்சாவூர்]
ஆர். கிசன் [கோவை]
லக்காவ்ஷ [புதுவை]
சிவகாமி [பாபநாசம்]
பள்ளிகொண்டான் [தெம்மாபட்டுதிருப்பத்தூர்]
மூ. கணபதி ,,
சி. டி. என். சிதம்பரம் [சென்னை]
ஏ. ஆர். எஸ். வள்ளியம்மை [கோவை]
அ. இராகவன் [ஈரோடு]

தீர்மானங்கள் முடிந்ததும் தலைவர் முடிவுரை கூறினார். மாலை 5-30 மணிக்கு மகாநாடு இனிது முடிவடைந்தது.

---

(3ம் பக்கத்தொடர்ச்சி)

கர, சிவசிவ, என்று சொல்லிக் கொண்டு மூன்று தரம் திரையைச்சுற்றி வந்து தண்ணீரில் பிடுங்கிய மயிரைப் போடும்படி ஆக்ஞாபித்தார். அதுபோல சீடர்கள் செய்து வந்தார்கள். இதனைக்கண்ட பொது ஜனங்கள் திரையிலுள்ள பன்றியின் மயிரெல்லாம் பரித்து சிவ சிவ, அரகரவென்று சொல்லிக்கொண்டு தண்ணீரில் போட்டனர். இதுபோலத்தான்மக்களுடைய நம்பிக்கை.

ஆங்கிலபார்லிமெண்டில்தற்போது Blasphemy Act ஒன்று அதாவது சிறு பிள்ளைகளுக்குநாஸ்திகம் கற்றுக்கொடுத்தால் குற்றமாகுமென்று ஒரு மசோதா, பால்ட்வின் சர்ச்சில் மாக்டனல்டு இவர்கள் அனுமதியில் கொண்டு வந்திருக்கின்றார்கள். அதனை நீங்கள் ஆட்சேபிக்கவேண்டும். Rationalists பகுத்தறிவு சங்கத்தார், அரசியல் துறையில் நுழைந்து வேலை செய்திருப்பார்களேயாமாகில் இவ்வித மசோதாக்கள் சட்டசபைகளில் கொண்டுவந்தே இருக்கமாட்டார்கள். ஆதலால் தோழர்களே! உஷார்! சட்டசபைகளைக் கைப்பற்றுங்கள். அரசியலைக் கைப்பற்றுங்கள். இந்தக் கூட்டம் இத்துடன் முடிவு அடைந்தது.

## "புரட்சி சங்கம்"

இச்சங்கத்தின் கூட்டம் மேற்படி சங்க வாசகசாலையில் 1—1—34 திங்கட்கிழமை மாலை 4—30 மணிக்குக்கூடியது அவ்வமயம் தோழர். எஸ். ஆர். கோவிந்தன் அவர்கள் தலைமை வகித்தார். தோழர். எஸ், மல்லிகார்ச்சுனக்கவிராயர் அவர்கள் "புரட்சி முரசடித்தேபோர் தொடுப்போம்" என்னும் பாடலை மிக்க எழுச்சியோடுபாடினார் தோழர். எம் முத்து (இரண்டர் மீடியட்) அவர்கள் "சக்லத்வாலாவும், பொதுவுடைமையும்" என்பதைப்பற்றி சொற்பொழிவாற்றினார். தோழர். இ. ரங்கசாமி அவர்கள். "இன்னுமா காந்தீயம்" என்பதைப்பற்றி விரிவாகப்பேசினார். தலைவர் முடிவுரைக்குப்பின் இரவு 8 மணிக்கு கூட்டம் இனிது நிறைவேறியது.

"நவசக்தி" ஆசிரியர் தோழர் திரு. வி.

## கலியாணசுந்தரமுதலியார் அவர்களால்

—:0:—

தமிழ் மணம், விடுதலை, பெண்ணுரிமை, தீண்டாமை ஒழிதல், சமரசம், சன்மார்க்கம் ஆகியவைகள் ததும்ப எழுதப்பட்ட அறிய அந் நூல்கள்:—

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை | ... | 2 | 0 |
| தமிழ்த் தென்றல் | ... | 2 | 0 |
| முருகன் அல்லது அழகு | ... | 1 | 0 |
| இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம் | ... | 0 | 12 |
| மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் | ... | 2 | 8 |
| என்கடன் பணி செய்து கிடப்பதே | ... | 0 | 8 |
| சைவத்தின் சமரசம் | ... | 0 | 8 |
| சைவத்திறவு | ... | 0 | 8 |
| கடவுள் காட்சியும் தாயுமானாரும் | ... | 0 | 4 |
| தமிழ் நூல்களில் பௌத்தம் | ... | 0 | 4 |
| சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து | ... | 0 | 8 |
| நாயன்மார் | ... | 0 | 3 |
| சைவ சமய சாரம் | ... | 0 | 1 |
| இமயமலை அல்லது தியானம் | ... | 0 | 6 |
| தமிழ் நாடும் நம்மாழ்வாரும் | ... | 0 | 4 |
| உரிமைவேட்கை அல்லது நாட்டுப்பாடல் | ... | 0 | 4 |
| முருகன் அருள் வேட்டல் | ... | 0 | 4 |

இந்நூல்கள் எல்லாவற்றையும் ஒரே காலத்தில் வாங்குவோர்க்குத் தபால் செலவின்றி மணியார்டர் கமிஷன் கழித்து வி. பி.-யில் அனுப்பப்படும்.

முருகவேள் புத்தகசாலை,
12, கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.



## அமுத சுரபி.

### சிறந்த தாதுவிருத்தி இலேகியம்

### உயர்ந்த காயகற்பகம்.

இஃது ஆண் பெண் இருபாலருக்கும் எவ்வகைக் காரணங்களினாலாவது இரத்தம் கெட்டு வலிவு குறைந்து, நரம்புக்கட்டுகள் தளர்ச்சியடைந்து இந்திரியக் கசிவு, வெட்டைச்சூடு, கனவிற் கழிதல், விரைவிற் கழிதல், விருப்பின்மை முதலிய துன்பங்களால் புத்திரப்பேற்றுக்கு வகையின்றி வருந்துவோர்களுக்கு அத்தகைய துன்பங்களை நீக்கி அமுதமயமான உடம்பையும், பலத்தையும், நல்லறிவையும் அழகையும், நீண்ட ஆயுளையும், மக்கட் பேற்றையும், பொன்போன்ற மேனியையும் அமுத சுரபி தருமென்பதில் யாதொரு ஐயமுமில்லை. இது சித்தர்களின் முறை.

40-நாள் மருந்து ரூ. 3—8—0.
20-நாள் மருந்து ரூ. 1—14—0.

மானேஜர்:—

பண்டிட் ஆனந்தம்வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி, சென்னை.

சுகவழி கேட்லாக் இனாம்.



## விற்பனைக்காக நம்மிடம் உள்ள

## இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | சிதம்பர ரகசியம் ... | 0—8—0 |
| 2. | சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை | 0—4—0 |
| 3. | மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை | 0—8—0 |
| 4. | பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை | 0—6—0 |
| 5. | மோட்டார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோக பயிற்சி முறையும் ... | 2—0—0 |
| 8. | ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் விலை ... ... | 0—6—0 |
| | சுயராஜ்யம் யாருக்கு ... | 0—1—0 |
| | சாமிகளின் அடிமைகள் ... | 0—12—0 |
| | சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... | 2—0—0 |

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிறயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| ஒவ்வொரு வருஷமாலை கிரயம் | ரூ. 4—0—0 |
| ரிவோல்ட்டு ஒருவருஷமாலை செய்தது கிரயம் | ரூ. 4—0—0 |

விலாசம்:—

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.



## வியாதியா?

[illegible] சகல வியாதிகளு க்கும் [illegible] பஸ்ப செந்தூர வகைகள் கிடைக்கும். 30 வருஷகாலமாக அனுபோக முள்ளது. உத்திரவாதமுள்ளது. ஆண் பெண், வயது, வியாதி, உற்பத்தி காலம், தெரிந்த வரையில் எழுதி மருந்தை வரவழைத்துச்சாப்பிடுங்கள்; சுகமாகும்.

தாம்பரபஸ்பம் குஷ்ட மேகங்களுக்கு அனுபானத்துடன் ½ மண்டலம் பாதி விலைப்படி ரூ. 12—8—0.

தாளக பஸ்பம் க்ஷயரோகங்களுக்கு அனுபானத்துடன் மண்டலம் ரூ. 12—8—0.

ஆர். எம். நாராயணசாமி,
தன்மவந்திரிஔஷதசாலை பழனி.S.I



## "குடி அரசு" புதிய வாசியூம்

சமத [illegible] [illegible] வது வருஷ [illegible] ஒன்றுசேர்க்கப்பட்டு [illegible] யூம் மிக்க அழகாக பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

உடனே முந்துங்கள்.

விலை ரூபாய் நான்கு

"புரட்சி" சந்தாதாரர்களுக்கு விலை ரூபாய் மூன்று.

பணம் முன்னதாக அனுப்பி விடவேண்டும். இல்லாவிட்டால் கவனிக்கப்படமாட்டாது.

மானேஜர்,
குடி அரசு பதிப்பகம், ஈரோடு.



## தீராத வெட்டை நோய்க்கு

## உத்திரவாதம்.

11-நாட்களில் குணமாகும். 22 மாத்திரை கொண்ட மருந்து பாட்டில் 1-க்கு ரூ. 5—0—0. (வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்) எவ்வித பத்தியமும் கிடையாது.

விலாசம்:— நா. நமசிவாயம், (நேட்டிவ் டாக்டர்)
தெக்ஷணாமூர்த்தி தமிழ் வைத்தியசாலை,
திருக்கோஷ்டியூர், (ராமநாதபுரம் ஜில்லா)

# குடி அரசு பதிப்பக புஸ்தகங்கள்.

**மதமும், லெனினும்.**
விலை அணா 0—4—0

**கைவல்யம் அல்லது கலைக்கியானம்.**

**பொதுவுடமைத் தத்துவங்கள்.**
விலை அணா 0—3—0.

**இராமாயண ஆராய்ச்சி.**
முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணா. 0—8—0

**ஞானசூரியன்.**
பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

**ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.**
இதன் விலை அணா. 0—2—0.

**தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.**
இதன் விலை அணா 0—3—0

**பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.**
இதன் விலை அணா 0—4—0

**மே... பாகூற்று மெய்யா? பொய்யா?**
இதன் விலை அணா 0—3—0

**அகத்தியர் ஆராய்ச்சி.**
இதன் விலை அணா 0—2—0

**ர... ஷவைப் பற்றி பெர்னாட்ஷா.**
விலை அணா 0—1—0.

**...டவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?**
இதன் விலை அணா 0 2—0

**கடவுளும், பிரபஞ்சமும்.**
இதன் விலை அணா 0—4—0.

**சத்தியாக்கிரகமா சண்டித்தனமா?**
விலை பை. 0—0—3

**இராமசாமியின் இலங்கை உபன்யாசம்.**
விலை பை. 0—0—6

**இந்தியாவின் குறைபாடுகள்.**
டாக்டர் பராஞ்சிபை எழுதியது விலை அணா. 0—8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—6—0
Crux of the Indian Problem இங்கிலீஷ் விலை ரூ. 1—0—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—8—0

**இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.**
விலை அணா. 0—2—0

**சுயமரியாதைப்பாடல்.**
விலை அணா 0—2—0.

**கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)**
விலை அணா 0—2—0

... லயம், ஈரோடு.

# பகுத்தறிவு நூற்பதிப்புக்கழக வெளியீடுகள்.

## பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும்.

விலை அணா 5.

## முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை.

இந்நூல் சார்லஸ் T. கோர்ஹாம் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு K. M. பாலசுப்பிரமணியம் B. A. B. L. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும், மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

விலை அணா 5.

## நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

இந்நூல் பேர்ட்டிரண்ட் ரசல் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு S. குருசாமி B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல்.

விலை அணா 3.

## மதம் என்றால் என்ன?

இந்நூல் ராபர்ட் G. இங்கர்சால் அவர்களால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டு தோழர் S. லட்சுமிரதன்பாரதி M. A., B. L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

விலை அணா 2.

புத்தகங்கள் வேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணா ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

விலாசம்:—

**பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.**

## முன்னேற்றம்.

பிரிட்டிஷ் மலேயா நாடுகளில் முதன்மை வாய்ந்த நமது சுயமரியாதை இயக்கப்பத்திரிகை.

மலாய் நாட்டிற்கு வருட சந்தா டாலர் 5—0—0.

வெளிநாடுகளுக்கு ரூ. 8-0-0

## ‘பிரசண்டமாருதம்’

சுயமரியாதை இயக்கக்கொள்கைகளை அடிப்படையாகக்கொண்ட சிறந்த வாரப்பத்திரிகை
உள்நாடுவருடசந்தா ரூ. 1—0—0
வெளிநாடு ......... ரூ. 1—8—0
தனிப்பிரதி 1½ அணா

விலாசம்:—
மானேஜர்.
பிரசண்டமாருதம் ஈரோடு.

...பகத்தில் அச்சிடப்பட்டு தோழர் சா, ரா. கண்ணம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.